# கல்கி

குடும்பத்துடன் படிக்க...

KALKI
28.1.2007 ரூ.8.00
80 பக்கங்கள்




# இதோ இன்னொரு நந்திதா!



## உற்சாக ரஜினி... உருகிய தனுஷ்!




டீம் சோற்றுக் கற்றாழை ஜூஸ்

- இதிலுள்ள ஊட்டச் சத்துகளைப் பாதுகாக்க குளிர் நிலை செய்முறை தொழில்நுட்பம் மட்டுமே பயன்படுத்தப்படுகிறது.
- நன்கு பதப்படுத்தப்பட்ட முதிர்ந்த இலைகளில் இருந்து ஜூஸ் தயாரிக்கப்படுகிறது.
- தண்ணீர், வாசனைத் திரவியங்கள் மற்றும் வண்ணங்கள் எதுவும் கலக்கப்படுவதில்லை.
- ஊட்டச்சத்துகளின் வீரியம் 100% நிலைப்படுத்தப்பட்டுள்ளது

Team EUBIO CARE FOR WELLNESS

**TEAM EUBIO CARE**

[DIVISION OF CHEMFAB ALKALIS LIMITED]

**VANDALUR** - Team House, GST Road, Chennai-600 048, Phone : 22750502

**ANNA NAGAR** - Plot 1200, Z Block, 6th Avenue, Chennai - 600 040 [Opp Kokino Karate School] Phone - 42693332

**ADAYAR** - Shop No.26, Ground Floor, Corporation Shopping Complex, III Avenue, Indira Nagar, Chennai 600 020, Ph : 4269 5115

For Trade enquires Contact | teamhealthshoppe@drraoholdings.com
Team Health Shoppe, Team House, GST Road, Vandalur, Chennai - 600 048

Dr. Rao's

E-mail : teamhealthshoppe@drraoholdings.com Web : www.teamhealthshoppe.com

தலையா... தளபதியா? 04




கட்சியைக் காப்பாற்றிய கதை! 39



அமுதக் கடலில் அன்னை! 44



மூளையில் சில கண்ணாடிகள்! 72



வெற்றிக்கு உதவும் மொழிப் பாடங்கள்! 74




# கல்கி

கல்கி

28.1.2007

"உங்களையும், உங்கள் குடும்பத்தினரையும் சந்திக்க ஜனாதிபதி அனுமதி வழங்கி இருக்கிறார்" என்று கவர்னர் மாளிகையின் பாதுகாப்பு அதிகாரி டெலிபோனில் சொன்னபோது காதுகளையே நம்ப முடியவில்லை.

ஜனாதிபதியைச் சந்திக்கும்போது 'பூங்கொத்து' போன்ற வழக்கமான சமாசாரமில்லாமல், வேறு ஏதாவது தர வேண்டும் என்று யோசித்தபோது ஒரு ஐடியா வந்தது. ஓவியர் 'கோபுலு

நேரம் காத்திருந்து சந்தித்தோம். கல்கியில் நான் தொடராக எழுதி, இப்போது புத்தகமாக வெளிவந்திருக்கும் மாதா அமிர்தானந்தமயியின் 'அன்பெனும் மழையிலே' பிரதி ஒன்றை ஜனாதிபதியிடம் வழங்கியவுடன்" அம்மாவைப் பற்றியும், அவர் அண்மையில் கட்டியுள்ள ஒரு பெரிய பாலம் பற்றியும் பேசினார் (அண்மை



# "மூக்கு நல்ல

விடம் விஷயத்தைச் சொல்லி "அப்துல் கலாமை ஒரு கார்ட்டூனாக வரைந்து கொடுங்கள்" என்று கேட்டுக்கொண்ட அரைமணியில், சூப்பரான கார்ட்டூன் ஒன்று தயாராக இருந்தது.

மறுநாள் இரவு பத்து மணிக்கு மீனம்பாக்கம் பழைய விமான நிலைய வளாகத்தில் உள்ள வி.ஐ.பி கூடத்தில் சந்திப்பு. கடுமையான பாதுகாப்புச் சோதனைகள். சுமார் இரண்டு மணி

யில் அம்மாவின் தலைமையகமான அமிர்தபுரியில் கட்டப்பட்டுள்ள 'அமிர்த சேது' என்ற பாலத்தைத் திறந்து வைத்தார் கலாம்).

கோபுலுவின் கார்ட்டூனை நீட்டினேன். சில விநாடிகள் ரசித்துப் பார்த்துக் கொண்டிருந்தவர், "மூக்கு ரொம்ப நல்லா போட்டிருக்கார்" என்றார். இன்னொரு கார்ட்டூனின் பிரதியில் ஆட்டோகிராஃப் கேட்டவுடன், "டியர் கோபுலு சார்" என்று ஆரம்பித்து,

## ரந்த மூக்கு...



"கிரேட் கார்ட்டூன், தேங்க்ஸ்" என்று எழுதி கையெழுத்திட்டுக் கொடுத்தார்.

'உலகமயமாக்கல் என்பது இன்று தவிர்க்க முடியாததாகிவிட்டது. எனினும் அது நமது தனித்தன்மையையும், ஆழ்ந்த பண்பாட்டையும் கரைத்துவிடும் அபாயமாகி விடக்கூடாது. இன்று இந்த அபாயத்தை நோக்கிச் செல்லும் இளைஞர்கள் நின்று, யோசித்துத் தங்களை நிலைப்படுத்திக் கொள்ளும் வகையில் 'நில், கவனி, வெற்றிகொள்' என்ற தலைப்பில் ஜனாதிபதி கல்கியில் ஒரு கட்டுரைத் தொடரை அவசியம் எழுத வேண்டும்' என்ற கல்கி ஆசிரியரின் வேண்டுகோள் கடிதத்தை அளித்தபோது, "அவசியம் செய்யலாம்" என்று முகமலர்ச்சியுடன் கூறினார்.

என் மனைவி பாரதி, "உங்களுடைய இந்தியா 2020க்கு என் மகனைத் தயார் படுத்திக் கொண்டிருக்கிறேன். என்றார். இவன் "உயர்கல்வியை முடித்துவிட்டு வேலை பார்க்க அயல்நாடு செல்ல மாட்டான். இந்தியாவிலேயேதான் பணிபுரிவான்" என்றார். "என்ன படிக்கிறாய்? என்று அவனிடம் கலாம் கேட்க, என் மகன் கௌதம், "ப்ளஸ் டூ படிக்கிறேன். ஐ.ஐ.டி.யில் சேர பயிற்சி எடுத்துக் கொண்டிருக்கிறேன். ஆனால் எனக்கு பைலட் ஆக வேண்டும் என்றுதான் ஆசை" என்றான்.

## ரூக்கு!"

உடனே "நான் கூட பைலட் ஆகத்தான் ஆசைப்பட்டேன்; ஆனால் என்னை செலக்ட் செய்யலை! உன்னை செலக்ட் பண்ண ஆல் தி பெஸ்ட்! என்று வாழ்த்தினார் ஜனாதிபதி.

அடுத்து என் மகள் மானஸாவைப் பார்த்து "நீ என்ன ஆகப்போறே? என்று கேட்டார். "எனக்கு ஃபேஷன் டெக்னாலஜி படிக்க ஆசை" என்றதும், "அதைப் படிச்சா இன்று நிறைய பணம் சம்பாதிக்கலாமே" என்று கூறிச் சிரித்தார். நெகிழ்ச்சியுடன் விடைபெற்றோம்.

- **எஸ்.சந்திரமௌலி**


**கல்கி**

பரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட்டிற்காக பரதன் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடுபவர் : லக்ஷ்மி நடராஜன்

கல்கி பில்டிங்க்ஸ், 47-N.P., ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காடுதாங்கல், சென்னை - 32

ஆசிரியர் : சீதா ரவி

தலைமை உதவி ஆசிரியர் : மு.மாறன்

வடிவமைப்பு : எஸ். ஸ்டீஃபன், பி.ஆர். ராஜன் எம். மோகன், ச. கார்த்திகேயன்

தொலைபேசி : 2225 1522, 2225 0623, 2225 1324

தொலைநகல் : 044 - 22251021

மின்னஞ்சல் :

ஆசிரியர் குழு : kalki@kalkiweekly.com

சந்தா பிரிவு : subscription@kalkiweekly.com

பிற தகவல்களுக்கு : info@kalkiweekly.com

கல்கி இன்டர்நெட் முகவரி : www.kalkionline.com

சந்தா விவரம் :

உள்நாடு :

ஒரு வருடம் : ரூ.440/-

ஆறு மாதம் : ரூ.220/-

வெளிநாடு (விமானத்தபால்) :

ஒரு வருடம் : 65 யு.எஸ். டாலர்

**Bharathan Publications Private Limited,**

Kalki Buildings,

47-NP, Jawaharlal Nehru Road,

Ekkaduthangal, Chennai - 600 032.



இதழில் வெளியாகும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு கல்கி நிர்வாகம் பொறுப்பல்ல.

# போக்கிரி

போன பொங்கலுக்கு ரிலீஸான 'ஆதி' சரியா போகாததால விஜய் ரொம்ப கவனம் எடுத்து செஞ்ச படம் இது. கைமேல் பலன் கிடைச்சிருக்கு. அதிரடி ஆக்ஷன் கதையைத் துள்ளத் துடிக்கச் சொல்லியிருக்காங்க. சரியா சீவாத தலை, சட்டை மேல சட்டை, தெனவெடுத்துத் திரியற காலுன்னு போக்கிரியா மாறியிருக்கார் விஜய். ஆனா அவர் போக்கிரி இல்லன்னு தெரிய வரும்போது நெஞ்சுக்குள்ள எதிர்பார்ப்பு 'டன்' கணக்கா எகிறுது. காதலுக்காக தவமிருக்குற தேவதையா அசின். கண்கள்ல சோகத்தையும் நெஞ்சுல பாரத்தையும் அழகா வெளிப்படுத்தறார். வில்லன் பிரகாஷ்ராஜ் கொளுத்தறார். தூங்காம அவர் படுத்தற பாடு இருக்கே... செம தூள் மச்சி! நாசர் பா(தே)சத்துக்காகப் பலியாகும்போது கலங்க வச்சிடுறார். கடமை தவறாத கமிஷனரா நெப்போலியன் பத்திரிகையாளர்களைப் பந்தாடுறதும், அப்புறம் ஸாரி கேக்கறதும் டச் (யார் மேல என்ன கோபமோ?)!

வடிவேலுவை ஸ்க்ரீன்ல காட்டினாலே விசில் பறக்குது. அவர் அசினோட டூயட் பாடுறது காமெடியின் உச்சம். ஆனா 'நம்பர் 1' காமெடி அருவருப்பு.

மணிஷர்மா இசையில 'வசந்த முல்லை' வாசம் வீசுது. 'ஆடுங்கடா' 'மாம்பழமாம்' குத்தாட்டம் போட வைக்குது. குறிப்பிட்டுப் பாராட்டப்

ஒரு மருத்துவமனை மார்ச்சுவரில வார்டு பாயா வேலை பாக்குற அஜீத், மாறு வேஷத்துல தொடர் கொலைகள் பண்றார். ஏன்ங்கற கேள்விக்கு விடைதான் ஆழ்வார்.

அமுல் பேபி அஜீத்துக்கு வார்டு பாய் வேஷம் சரியாப் பொருந்தல. ஆனாலும் உயிரைக் கொடுத்து நடிச்சிருக்கிற அவரோட ஆர்வத்துக்கு சல்யூட். அதே நேரத்துல மௌன சாமியாரா படம் முழுக்க வர்றது 'தல' ரசிகர்களுக்கு நிச்சயம் அவஸ்தையா இருக்கும்.



அசின் இந்தப் படத்துல பிசின். மொதல்ல கஜினிய விட்டு அவர் வெளில வரணும். அஜீத்தோட நல்ல குணங்களைப் பார்த்து 'இதே மாதிரிதான் நான் பண்ணணும்'னு நினைச்சேன்'னு

# லஜ்ஜாவதி



வேண்டிய ஆளு ஸ்டண்ட் மாஸ்டர் பெப்ஸி விஜயன். அனல் பறக்குது காட்சிகள்ல. டைரக்டர் பிரபு தேவா முதல் பந்துலேயே ஸாரி, முதல் படத்துலேயே சிக்ஸர் அடிச்சிருக்கார். கடைசிக் காட்சி வரைக்கும் விறு விறுப்பா கொண்டு போன அவரோட திரைக்கதை நேர்த்தி பிரமிக்க வைக்குது. அங்கங்கே சஸ்பென்ஸ் வச்சுப் படத்தை நகர்த்தின விதம் அருமை.



சரி, குட்டு இல்லையா? இருக்கே!

சும்மா சும்மா அசினும் விஜய்யும் ரயில்லயே சந்திக்கறது போரடிக்குது. பொசுக்குனு டூயட் முளைக்கிறது கடுப்படிக்குது. தேவைன்னாலும் இந்த அளவுக்குத் துப்பாக்கி, கத்தியப் பயன்படுத்தியிருக்கறது வெறுப்படிக்குது. ●

சொல்லி வாங்கிக் கட்டிக்கறது அழகு. விவேக்கோட காமெடி ஆறுதல். அதே நேரத்துல ஆபாசத்தைத் தொடாம பண்றது யாவருக்கும் நல்லது.

அஜீத் ஏன் கொலைகாரனா மாறினார்ங்கற ஃப்ளாஷ்பேக் காட்சிகள் நிறைவா இருக்கு. கடவுள் மேல அவர் காட்ற பக்தியும் அநியாயம் நடக்க விடாம தடுக்கப் பாடுபடுறதும் இதம். அதுக்காக கடவுள் வேஷம் போட்டு வந்து பழி தீர்க்கறது எடுபடல. வார்டு பாய டாக்டருக்குப் படிக்கிற பொண்ணு காதலிக்கறது சினிமாவுல மட்டும்தான் சாத்தியம்.

ஸ்ரீகாந்த் தேவாவோட பாடல்கள் பரவால்ல. பின்னணி தொய்வு. ரமேஷ் ஜீயோட ஒளிப்பதிவு உறுத்தாம இருக்கு. சண்டைக் காட்சிகள்ல இன்னும் ஆக்ரோஷம் இருந்திருக்கலாம். இயக்குநர் ஷெல்லாவுக்கு இது முதல் படம். திரைக்கதைல இன்னும் விறுவிறுப்பைக் கூட்டியிருக்கலாம். பழிவாங்கற கதைகளை ஏற்கெனவே பல படங்கள்ல, பல விதங்கள்ல பாத்துட்டதாலயும், 'ஆழ்வார்'ல புது முறைல சொல்லப்படாததாலயும் படத்தோட சரியா ஒன்ற முடியல. அஜீத்தை ஸ்லிம்மா அழகா காட்டினதுக்கு ஸ்பெஷல் தேங்க்ஸ். ●

# ஆழ்வார்

# பணம் தரும் பட்டுப் புழு



* ரெங்கம்மா

"செய்யும் விதத்தில் செய்தால் எந்தத் தொழிலுமே லாபம் தரும் தொழில் தான்!" என்கின்றனர், சோமன் - ரெங்கம்மாள் தம்பதி. யார் இவர்கள்? புதுக்கோட்டை மாவட்டம் அணவயல் கிராமத்தைச் சேர்ந்தவர்கள். பட்டுப் புழு வளர்ப்பின் சூட்சுமம் தெரிந்தவர்கள். 'பட்டுப் புழு வளர்ப்பா? கூப்பிடு ரெங்கம்மா - சோமனை...' என்னும் அளவுக்கு இத்தொழிலில் பிரசித்தி பெற்றவர்கள்.

"அஞ்சு வருஷத்துக்கு முன்னாடி கடன், கஷ்டம்... இதுதான் எங்க நிலைமை. எங்க சொந்தக்காரரு ஒருத்தர் எங்க சூழ்நிலையைப் பார்த்துட்டு இந்தப் பட்டுப் புழு வளர்ப்புப் பத்திச் சொன்னாரு. அதைக் கெட்டியாப் பிடிச்சுக்கிட்டோம். இன்னைக்குக் கடனெல்லாம் அடைச்சாச்சு. இரவல் பம்ப் செட் தண்ணிய பணம் கொடுத்து வாங்கின நாங்க, இப்போ மூணு லட்ச ரூபாய் செலவுல சொந்தமா நானூறு அடி ஆழத்துக்கு ஆழ்குழாய் இறக்கியிருக்கோம். எல்லாத்துக்கும் காரணம் பட்டுப் புழுக்கள்தாங்க" என்று உணர்ச்சி மேலிடப் பேசினர் ரெங்கம்மா - சோமன் தம்பதி.

"பட்டுப் புழுவில் இரண்டு வகைகள் உள்ளன. ஒன்று வெண்பட்டுப் புழு, இன்னொன்று மஞ்சள் பட்டுப்புழு. ஐப்பசி, கார்த்திகை, மார்கழி, தை ஆகிய குளிர்கால மாதங்கள் மட்டுமே வெண் பட்டுப் புழு வளர்ப்புக்கு ஏற்ற மாதங்கள். வெப்பத்தைத் தாங்கக்கூடிய சக்தி வெண் புழுக்களுக்கு இல்லாததால், நோயின் தாக்கம் இதில் அதிகமிருப்பதால் நம் ஊர்களில் இதனை வளர்க்க முடியாது. மஞ்சள் பட்டுப்புழு எல்லாக் காலங்களிலும் வளர்ப்புக்கு உகந்தது.



* சோமன்

இந்தப் பட்டுப் புழுக்களின் உணவு, மல்பெரி இலைகள். பட்டுப்புழு வளர்ப்போர், மல்பெரியையும் வளர்க்க வேண்டும். நூறு முட்டைகளிலிருந்து பொறிக்கும் குஞ்சுகளுக்குக் குறைந்தபட்சம் முப்பது சென்ட் நிலத்திலாவது மல்பெரிச் செடியை வளர்க்க வேண்டும். மல்பெரியில் நிறைய இரகங்கள் உள்ளன. நாங்கள் எம்.ஆர்.2 என்ற செடியினை வளர்க்கிறோம். இது வறட்சி தாங்கி



வளரக்கூடியதோடு, இந்த ரகத்தை உட்கொள்ளும் புழுக்கள் அதிக எடை உள்ளதாகவும் இருக்கும். மல்பெரி நாற்றங்காலும் வைத்து, மற்ற விவசாயிகளுக்கு விற்று வருகிறோம். இதனால் எங்களுக்கு உபரி வருவாய் கிடைக்கிறது" என்றார் சோமன்.

பட்டுப் புழு வளர்ப்பவர்களுக்குப் பட்டு வளர்ப்புத் துறை மூலமாகப் பட்டுப் புழு முட்டைகள் வழங்கப்படுகின்றன. நூறு முட்டைகளின் விலை இருநூறிலிருந்து இருநூற்றைம்பது ரூபாய் வரை.

"கூடு கட்டிய ஐந்து நாட்களுக்குள்,

# வளர்ப்பு!

கூடுகளைப் பட்டுப் புழு கொள்முதல் நிலையங்களில் சேர்த்திட வேண்டும். கோவை, சேலம், தர்மபுரி, ஓசூர் ஆகிய ஊர்களில் அரசு பட்டுக்கூடு கொள்முதல் நிலையங்கள் உள்ளன. ஒரு கிலோ பட்டுக்கூடு நூற்றைம்பது ரூபாயிலிருந்து இருநூறு ரூபாய் வரை விற்கப்படுகிறது. பட்டுப் புழு வாங்கி வந்த முப்பத்தொன்றாவது நாளிலேயே பணம் பார்த்து விடலாம். வருடத்துக்குப் பன்னிரண்டு முறை பட்டுக் கூடு அறுவடை செய்யலாம். பட்டு வளர்ப்புத்துறை மூலமாக, மைசூர் பட்டுப் புழு வளர்ப்புப் பயிற்சி மையத்தில் முப்பத்தைந்து நாட்கள் பயிற்சி எடுத்திருக்கிறோம். கடந்து ஐந்து வருடங்களாக இதுதான் எங்களது பிரதான தொழில். தொடர்ந்து வருவாய் கிடைக்கிறது" என்று மகிழ்ந்து போய்ச் சொன்னார் ரெங்கம்மா.

*செய்திச் சித்திரம் :*
**ஸ்ரீரங்கம் திருநாவுக்கரசு**


கும்பகோணம்
டிகிரி காபி தூள்




Available: 100 / 200 / 500 gm
Door Delivery 500gm above

BRAHMALAYA
AGENCIES (P) LTD
Regd. Office: ABHIRAMAPURAM,
No. 32, 4th Street, Chennai - 600 018.
Ph: 2498 4578 / 2498 4665 / 2498 4628

Branch Landlines

Anna Nagar - 2621 2237, 6452 3472
Chrompet - 2265 2025, 6452 3473
Mylapore - 2461 1711, 6452 3475
Gopalapuram - 2811 6306, 2811 6307
Nanganallur - 2231 5463, 6452 3476
T.Nagar - 2433 1421, 6452 3477
West Mambalam - 2474 6685, 6452 3478

*Trade Enquiry Solicited*



• அடாவடி ஆலோசனை



• சித்தாந்த சிந்தனை

● பா.ஜெயப்பிரகாஷ், சர்க்கார்பதி

? "சென்னையில் பயங்கரவாதிகள் என்று யாருமே இல்லை" என்று கமிஷனர் லத்திகா சரண் சொல்கிறாரே?

! சென்னை மக்களுக்குத் தைரியமூட்டும் வகையில் கமிஷனர் பேசுவது சரிதான். ஆனால் 1. இங்கேதான் பயங்கரவாதிகள் உபயோகத்துக்கு ராக்கெட்டுகள் தயாராயின என்பதை மறக்கக் கூடாது. 2. சென்னை என்பது தமிழ்நாடு அல்ல. பயங்கரவாதிகள், நெற்றியில் எழுதி ஒட்டிக்கொண்டு வரமாட்டார்கள். இடைவிடாத எச்சரிக்கை தேவை.

● சி.பரத், சென்னை - 82

? சிறந்த எழுத்தாளர்களுக்கு விருதளிக்க, தென்னிந்திய பதிப்பாளர் - விற்பனையாளர் சங்கத்துக்கு ஒரு கோடி கொடுத்துள்ளாரே தமிழக முதல்வர்?

! தமிழிலும் எழுத்திலும் கொண்ட ஆர்வத்தின், அக்கறையின் வெளிப்பாடு. பரிசுத் தேர்வுக்குப் பதிப்பாளர் சங்கத்தைப் பொறுப்பாக்கியிருப்பதால் அரசியல் / சித்தாந்த கலப்பின்றி தேர்வு அமையும் என்று நம்பலாம்.

● உமரி பொ.கணேசன், மும்பை - 37

? விதிகளை மீறி கட்டடங்களை எந்த தைரியத்தில் கட்டுகிறார்கள்?

! நேர்மையைக் கடைபிடிக்கும் தைரியம் அதிகாரிகள், அரசியல்வாதிகளிடம் கிடையவே கிடையாது என்கிற தைரியத்தில்தான்!

● து. தியாகராஜன், திண்டுக்கல்

? "பா.ம.க. ஆட்சிக்கு வருவதை தமிழக மக்கள் விரும்புகிறார்கள். நாங்கள் வந்தால் சினிமாவுக்குத் தினமும் ஓரிரண்டு காட்சிகளுக்கு மட்டுமே அனுமதி தருவோம். இரவு எட்டு மணிக்கு மேல் யாரும் வெளியில் சுற்றக் கூடாது" என்று டாக்டர் ராமதாஸ் கூறியுள்ளாரே?

! டாக்டர் ராமதாஸின் அறிவுரை ஏற்கத்தக்கது. அரசியல் கட்சித் தலைவர் ராமதாஸின் சட்ட ஆலோசனை நிராகரிக்கப்பட வேண்டியது.

● ஆர்.மாதவராமன், கிருஷ்ணகிரி

? தமது ஆட்சியின்போது அரசு ஊழியர்களுக்குக் கசப்பு மருந்து அளித்த ஜெ; அரசு ஊழியர்களுக்கு, பறிக்கப்பட்ட சலுகைகளைத் திரும்ப வழங்கிய கலைஞர் - ஒப்பிடுங்களேன்.

! அஜீரணம் இல்லாதபோது மருந்து தருவதும் தவறு; அஜீரணம் உருவாக்கும் வகையில் விருந்து படைப்பதும் தவறு!

● பி.பத்மா, அரங்கநாதபுரம் ✱

? எஸ்.எம்.எஸ்.ஸில்கூட கடவுளைப்

# ஆட்டோ கட்டணம்



பற்றி ஏதோ அனுப்பி விட்டு, 'இதை நீ இன்னும் நூறு பேருக்கு அனுப்பு; இல்லாவிட்டால் ஐயோ!' என்று நவீன ஆன்மிக பயங்கரவாதிகள் மிரட்டுகிறார்களே?

! மூட நம்பிக்கையில் உழல்வோருக்கு அஞ்சல் அட்டையாக இருந்தால் என்ன, எஸ்.எம்.எஸ்.ஆக இருந்தாலென்ன! அஞ்சலட்டையைக் கிழித்துப் போடுவதுபோல் எஸ்.எம்.எஸ்.ஸில் 'டெலீட்' பக்கம் போய் ஒரு தட்டு தட்ட வேண்டியதுதான்.


• பயனற்ற பிரமிப்பு!

● ச.ஆ.கேசவன், இனாம்மணியாச்சி

? விதியிடம் சிறைப்பட்டிருக்கும் 'மதி'க்கு விடுதலையே கிடையாதா? .

! சதியிடம் மதி மயங்காதிருந்தால் விதியிடமிருந்தும் விடுதலை கிடைக்கும். அதனால்தான் விதி செய்த சதி என்ற தொடர் உருவாயிற்றோ?

● அ.சுஹைல் ரஹ்மான், மும்பை - 21

? 'தமிழ்நாட்டில் இரு சக்கர வாகன ஓட்டிகள் கட்டாயம் ஹெல்மெட் அணிய வேண்டும்' என்று உயர்நீதி மன்றம் கருத்துத் தெரிவித்துள்ளதே?

! நீண்ட காலமாகவே நரம்பியல் நிபுணர்கள் கூறிவரும் அறிவுரைதான். இன்று பெருகியுள்ள போக்குவரத்து நெரிசலில் நம்முடைய பாதுகாப்பு, நம்முடைய கையில் மட்டும் இல்லை. எனவே, ஹெல்மெட் அவசியம். ஆனால் நீதிமன்றத்தின் அறிவுரை தமிழக அரசின் ஆணையாக உருபெறுமா?

● நீ.முத்துக்குமார், திருச்சி

? நினைத்ததெல்லாம் நடக்க இறைவன் அருள் புரிவானா?

! நினைத்துக் கொண்டே படுத்திருந்தால் தூங்கட்டும் என்று விட்டுவிடுவான்; ஓடி ஆடினால், உழைத்தால் அவனும் கூடவே இரைக்க இரைக்க ஓடி வந்து வெற்றி கம்பத்துக்கு வழி காட்டுவான்.


• அக்கறையின் வெளிப்பாடு


• எச்சரிக்கை தேவை!

● என்.கோதண்டராமன், மதுராந்தகம் ❒

? லஞ்சம் வாங்கிய வழக்கில் நாடாளுமன்ற உறுப்பினர்கள் பதினொரு பேரை


• மாறாத கல்சர்!


# உயர்த்தப்பட்டுள்ளதே?

**பதவி நீக்கம் செய்தது சரியென உச்சநீதி மன்றம் தீர்ப்புக் கூறியுள்ளதே - இனி யாவது திருந்துவார்களா?**

! திருந்த வேண்டும்; மாறாக, மாட்டிக் கொள்ளாமல் தப்பு செய்வது எப்படி என்று ஆராய்ந்து அறிந்து பின்பற்ற ஆரம்பித்தார்களானால் இந்த நாட்டுக்கு விமோசனமே கிடையாது!

● சி.ராமமூர்த்தி, சென்னை

**? தமிழ்நாடு முழுவதும் ஆட்டோ கட்டணம் உயர்த்தப்பட்டுள்ளதைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?**




! என்ன உயர்த்தினாலும் அதைவிடப் பலமடங்கு உயர்த்திக் கேட்டுப் பயணிகளை நெருக்கடிக்குள்ளாக்கும் ஆட்டோ கல்சர் மாறாது சாமி! அதற்கென்ன காரணம்? தமிழக முதல்வர் ஆராயட்டும்!

● லெ.நா.சிவகுமார், சென்னை - 33

**? 'சிலைகளோடு மோத வேண்டாம், சித்தாந்தத்துடன் மோதுவோம்' என்கிறாரே பா.ஜ.க. தலைவர் இல.கணேசன்...**

! நியாயமான பேச்சு. ஆனால் பெரியார் சிலைக்காக மட்டுமா? இல்லை, ராம ஜன்ம பூமிக்கும் சேர்த்தா?

● எம்.பாஸ்கர், திண்டுக்கல்

**? 'குடும்பத்தில் ஏற்படும் அவசரச் செலவுகளுக்காக மனைவியின் பெற்றோரிடம் சென்று கணவன் பணம் வாங்கி வரச் சொல்வது வரதட்சணை கொடுமையாகாது. அதை கிரிமினல் வழக்காகப் பதிவு செய்யக் கூடாது' என்று உச்சநீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளதைப் பற்றி..**

! குடும்ப வன்முறை எதிர்ப்புச் சட்டம் 2006-ஐ துஷ்பிரயோகம் பண்ணிவிடக் கூடாதென எச்சரிக்கும் தீர்ப்பு.

● எம்.சம்பத், வேலாயுதம்பாளையம்

**? மரணத்தின் கடைசி வினாடிகளிலும் சதாம் ஹுசைன் மனம் கலங்காமல் இருந்தது பிரமிப்பூட்டவில்லை?**

! பிரமிப்பூட்டலாம். ஆனால், பகத்சிங், வாஞ்சிநாதன் போன்றோர் உருவாக்கிய மரியாதை ஏற்படவில்லை. மரியாதையற்ற பிரமிப்பால் என்ன பயன்?

● பொன்விழி, அன்னூர்

**? உடல் பருமனைக் குறைக்க என்ன வழி?**

! சுலபமான வழிதான்! சின்ன எக்சர்சைஸ் செய்யணும்... இடம் வலமாக இரண்டு முறை தலையை அசைத்தால் போதும் - குறிப்பாக யாராவது சாப்பிட ஏதாவது தரும்போது.

● என்.பாலகிருஷ்ணன், மதுரை -1

**? கல்யாணத்தில் முடியும் காதல்தான் உண்மையான காதலா?**

! கல்யாணத்தில் முடியாவிட்டாலும் முடிந்து போகாமல் நீடிக்கும் காதலே உண்மையான காதல். அது தியாகங்களுக்குத் தயாராயிருக்கும். ●

❑ ரூ. 100/- பரிசு பெறுபவர்:
என். கோதண்டராமன்,
3/44/1 இளங்கோவடிகள் வீதி,
அய்யனார் நகர்,
மதுராந்தகம் - 603 306

• ரூ. 50/- பரிசு பெறுபவர்:
பி.பத்மா,
76, சாஸ்திரி வீதி,
அரங்கநாதபுரம்,
கோவை - 641 009

பரிசு



# கிளம்பியாச்சா?

நீங்கள் க்ளிக்கிய அவுட் ஆஃப் ஃபோகஸ் ஆகாத, நீங்களே பார்த்து, ரசித்து, வியந்த புகைப்படங்கள் உங்ககிட்ட இருக்குமில்லையா? அந்தப் புகைப்படங்களை எங்களுக்கு அனுப்புங்க. சிறந்த எட்டுப் புகைப் படங்களுக்குத் தலா 250/- ரூபாய் பரிசாக வழங்கப்படும். வந்து சேர வேண்டிய கடைசி நாள் : 29.1.2007. ஆசிரியரின் தீர்ப்பே இறுதி.

என்ன கிளம்பியாச்சா?

## வெல்லுங்க ரூ.2000/-


# சரோஜா வைத்யநாத ஐயர் பரம்பரை ஜோதிடர்

ஜோதிடத்தில் 50 வருட அனுபவம் கொண்ட
"ஜோதிட வாணி"
**ஸ்ரீமதி சரோஜா வைத்யநாத ஸ்வாமி ஐயர்**
கைரேகை, ஜாதகம், நியூமராலஜி, வாஸ்து,
சாமுத்ரிகா லக்ஷணம், திருமணப் பொருத்தம்,
அனைத்தும் பார்க்கப்படும்.
அனைத்து ஆலோசனைகளும் வழங்கப்படும்.

V. சரோஜா, 45/18, ஸ்ரீநிவாச ஐயர் தெரு, மேற்கு மாம்பலம்,
அயோத்யா மண்டபம் அருகில்,
பிள்ளையார்கோவில் அருகில் உள்ள தெரு.
**Ph: 23716892, Cell: 9444230523, 9444684006**

**பிக் எஃப்.எம்.மில் பிக்பிக்கான கான்செப்டோடு நேயர்களின் நெஞ்சைக் கொள்ளையடித்துக் கொண்டிருக்கிறார்கள் சில ரேடியோ ஜாக்கிகள். அவர்களோடு ஜாலியாக அரட்டையடித்தோம்...**

பெரிய வணக்கத்தோடு ஆரம்பித்தார் மமதி. "நமது நேற்றைய பிரச்னைகள், கஷ்டங்கள், துக்கங்கள் எல்லாவற்றையும் மறந்து காலையில எழும்போது புதுசா பிறக்கணும். இதுதான் நான் பண்ற 'பிக் வணக்கம்' நிகழ்ச்சியோட நோக்கம்" என்றவர்,



# இம்சை

"ஒவ்வொரு நாளையும் நிமிஷத்தையும் அமைதியா, அழகா அனுபவிக்கணும்; உணரணும். முடிஞ்ச அளவுக்கு எல்லாரையும் சந்தோஷப்படுத்தணும். இதுதான் என் நோக்கம்" என்றார். 'விஜய் டி.வி.யில் ஜோடி நம்பர் ஒன், ஹலோ தமிழான்னு கலக்குறீங்களே, கோலிவுட் பக்கம் தலை காட்டும் எண்ணமிருக்கா?' என்றால், மருந்துக்குக் கூட அப்படியொரு நினைப்பில்லையாம்!



'விஜய் டி.வி. வசூல் ராணியில், ராஜா மாதிரி இருந்துட்டு, இப்போ இல்லத்தரசிகளிடம் குலாவிக் கொண்டிருப்பது எப்படி?' என்றோம் பாலாஜியிடம்.

"குழந்தைங்க, ஹஸ்பெண்ட் எல்லாரையும் அனுப்பிட்டு போரடிச்சு உட்கார்ந்திருக்கறவங்கள, பள்ளிப் பருவத்துக்கு அழைத்துச் செல்வதுதான் எங்க கான்செப்ட். கொஞ்சம் பொது அறிவுக் கேள்விகளையும் சேர்த்துக்குவோம். கரெக்டான பதில் சொல்லிப் பணம் பாக்கறதுதான் இல்லத்தரசிகளோட திறமை. அதனாலதான் 'அதிர்ஷ்ட லட்சுமி'னு பேர் வைச்சிருக்கோம்" என்று பண பாஷையில் பேசியவருக்கு ஒரு வணக்கம் போட்டுவிட்டு இம்சை அரசியிடம் தாவினோம்.

"என்னோட பேரு ஏஃபிலியா சாந்த செல்வி. எல்லாரும் ஏஃபிலியான்னு ஷார்ட்டா, செல்லமா கூப்பிடுவாங்க. ஆனா பிக் எஃப்.எம்.ல இம்சை அரசிங்கற பேர் தான் நிலைச்சுப் போச்சு. சீரியலால் பாதிக்கப்பட்டோர் சங்கத்துக்குத் தலைவி நான். சீரியல் பார்த்து அழுது புலம்பிக்கிட்டு இருக்கிறவங்கள 'லகலக'ன்னு ஜாலியா சிரிக்க வைக்கறதுதான் என் ஜோலி" என்று தம் புகழ் பாடிய இம்சை அரசியைப் பேச விடாமல் தடா போட்டு இடை புகுந்தார் டிராஃபிக் குரு.

'மத்தவங்க மாதிரி இல்ல. நான்



கொஞ்சம் உருப்படியான வேலையைச் செய்துக்கிட்டிருக்கேன். ரெயின்போ எஃப்.எம்.மில் 'புத்தம் புதுக் காலை'யை தொகுத்துக் கொண்டிருந்தேன். இப்போ சென்னை சாலைகளை எல்லாம் பகுத்து 'புத்தம் புது சாலை' பண்ணிக்கிட்டு இருக்கேன். இதுல ஏற்படுற டிராஃபிக், ஆக்ஸிடெண்ட், ட்ரெய்னேஜ் பிராப்ளம் எல்லாத்தையும் மக்கள் உடனே தெரிஞ்சுக்குற மாதிரி செய்தி சொல்றேன்'' என்ற குரு. 'தெனாலிகிட்ட போங்க' என்று நம்மை வழியனுப்பினார்.

"எம் பேரு ஷா. சென்னை ஏரியாக்களின் சிறப்பு அம்சங்களை அழகா சொல்றதுதான் நம்ம வேலை'' என்ற 'ஷா' செய்யும் ப்ரோக்ராம் 'தூன் வித் மி தெனாலி.'



இதோடு முடியவில்லை... ஜெயா டி.வியின் பழைய டைரி பொண்ணு கோலிவுட் ரம்யாதான் பிக் எஃப்.எம்.மில் 'மீல்ஸ் ரெடி' மங்கை!

'அழகா இருக்கீங்களே... அடுத்து சினிமா தானா?' என்றால்,

''காதலுக்கு மரியாதை ஷாலினி, சந்திரமுகி ஜோதிகா மாதிரி கேரக்டர் கெடச்சா ஓகே''

# அரசிக்குத் தடா!





என்றார்.

"அப்ப, சீக்கிரம் கல்யாணம் பண்ணிட்டுப் போய்டுவீங்கன்னு சொல்லுங்க" என்று புறப்பட்டோம்.

**- விக்டர் மனோ**

படங்கள் : **பொள்ளாச்சி சுந்தரம்**




# கல்கி



2007 ஜனவரி 28
விய தை 14
மலர் : 65
இதழ் : 26


தமிழ்த்திரு
நாடுதன்னைப்
பெற்ற தாயென்று
கும்பிடடி பாப்பா
- பாரதியார்.


## விழித்திருக்கும் நீதித்துறை!


உச்சநீதிமன்றத்தில் ஒன்றும் சென்னை உயர்நீதிமன்றத்தில் ஒன்றுமாக இரண்டு மிக முக்கியமான தீர்ப்புகள் சென்ற வாரம் வெளிவந்துள்ளன.

அரசியல் சாசனத்தின் ஒன்பதாவது ஷெட்யூல் (அட்டவணை) என்பது விவசாய நில உடைமை சீர்திருத்தம் என்ற உயர்நோக்கை எய்துவதற்காக அன்றைய இந்திய அரசாங்கத்தால் உருவாக்கப்பட்டது. ஒன்பதாவது அட்டவணையின் கீழ் இயற்றப்படும் சட்டங்களை நீதிமன்ற விசாரணைக்கு உட்படுத்த முடியாது. இதன் மூலம் ஜமீந்தாரி முறை, பெருநில மிராசுதார்களின் கட்டுப்பாடு ஆகியவற்றிலிருந்து ஏழை விவசாயிகளை மீட்டு நில உச்சவரம்புச் சட்டம் கொண்டு வர முடிந்தது. நிலச் சீர்திருத்தத்துக்குப் பாதுகாப்பு கிடைத்தது. அன்று மக்கள் நலனுக்காக அறிமுகப்படுத்தப்பட்ட ஒன்பதாவது அட்டவணை, அதற்குப் பின் அரசியல்வாதிகளின் சுய நலனுக்கும் கட்சி நலனுக்கும் பாதுகாப்பு அளிக்கவே பயன்பட்டு வந்திருக்கிறது. 284 சட்டங்கள் இந்த ஒன்பதாவது அட்டவணையில் சேர்க்கப்பட்டன!

குறுகிய நோக்குகளுடன் நாடாளுமன்றத்தில் மசோதாக்கள் அறிமுகமாகி சட்டமும் ஆக, ஒன்பதாவது அட்டவணை பாதுகாப்பளிப்பதை நீதிமன்றம் ஒதுங்கியிருந்து இனி அனுமதிக்க முடியாது என ஒன்பது நீதிபதிகள் அடங்கிய பெஞ்சு தற்போது அறிவித்திருப்பது புரட்சிகரமான மாற்றங்களுக்கு வழிகோலக்கூடும்.

1973 முதல் இதுநாள்வரை இந்த அட்டவணையின் கீழ் இயற்றப்பட்ட சட்டங்கள் அனைத்தும் உச்சநீதிமன்ற பரிசீலனைக்கு உட்படுத்தப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. இந்தப் பரிசீலனையின் விளைவாக, மக்களின் அடிப்படை உரிமைகளை மீறும் சட்டங்களும் அரசியல் சாசன கோட்பாடுகளை மீறும் சட்டங்களும் அரசியல்வாதிகளின் சுயநலன்களைப் பேண மட்டுமே இயற்றப்பட்ட சட்டங்






களும் கேள்விக்குள்ளாகவும் ரத்தாகவும் வாய்ப்பு இருக்கிறது.

'இதைத் தவிர்ப்பதற்கும் முறியடிப்பதற்கும் என்ன செய்யலாம்; எப்படி, என்ன புதிய சட்டம் இயற்றலாம்' என்று இன்றைய அரசியல்வாதிகள் யோசிக்கக்கூடும். ஆனாலும் அது அவ்வளவு சுலபமல்ல.

இத் தீர்ப்பின் மூலம், நம் நாட்டில் அரசியல் அராஜகங்களைத் தட்டிக் கேட்கும் பொறுப்பை நீதித்துறை விழிப்புடன் நிறைவேற்றி வருகிறது என்பது மீண்டும் நிரூபணமாகியிருக்கிறது. இதற்காக நாம் மகிழ்ச்சியும் பெருமிதமும் கொள்வதுடன் நீதித்துறைக்கு இத்தகைய சுதந்திரத்தையும் அதிகாரத்தையும் அளிக்கும் வகையில் அரசியல் நிர்ணய சட்டத்தை அமைத்த நமது முன்னோர்களின் தீர்க்கதரிசனத்துக்கு நன்றி கூறி தலை வணங்க வேண்டும்.

**மா**நகராட்சி தேர்தல்களை ரத்து செய்வது தொடர்பான சென்னை உயர்நீதிமன்றத்தின் பெஞ்க தீர்ப்பில் இரு வேறு கருத்துகள் வெளிப்பட்டுள்ளன. எனினும், தேர்தல் முடிவுகளை ரத்து செய்ய முடியாது என்று கருத்து கூறியுள்ள நீதிபதி முகோபாத்யாயகூட 'வன்முறையும் தவறுகளும் நடக்கவில்லை' என்று அடித்துச் சொல்லவில்லை; 'மாநில தேர்தல் கமிஷன் தன் சட்டபூர்வமான கடமைகளை நிறைவேற்றவில்லை என்று கருத முகாந்திரம் இல்லை' என்றே கூறியிருக்கிறார்.

கண்டனத் தீர்ப்பு அளித்துள்ள நீதிபதி கலீஃபுல்லாவோ, பெரும்பாலான - அதாவது, 99 வார்டுகளில் மறுதேர்தல்கள் நடத்தவே ஆணையிட்டுள்ளார். இது குறித்து மூன்றாவது நீதிபதியின் இறுதி ஆணைக்குக் காத்திருக்காமல் 99 வார்டுகளிலும் மறுதேர்தலுக்கு ஆணையிட்டுள்ள முதல்வரின் நடவடிக்கை வரவேற்புக்கும் பாராட்டுக்கும் உரியது. முன்னதாக, பா.ஜ.க. தலைவர் இல.கணேசன் கேட்டுக் கொண்டதன் பேரில், "மாநகராட்சி முக்கிய முடிவுகளையும் செலவினங்களையும் மேற்கொள்ளாது" என்று அறிவித்த முதல்வர், மறுநாளே மறுதேர்தல் அறிவிப்பையும் செய்திருக்கிறார்.

எனினும், நிபந்தனைகளும் விளக்கங்களும் இன்றி இவ்வறிவிப்பு வந்திருந்தால் கட்சிக்கும் அரசுக்கும் மேலும் கௌரவமாக இருந்திருக்கும். 'மூன்றாவது நீதிபதியின் இறுதி ஆணை நிலுவையில் உள்ள போதிலும், உச்சநீதிமன்றத்தில் மேல் முறையீட்டுக்கான வாய்ப்பு உள்ளது என்ற போதிலும் மறுதேர்தல் அறிவிக்கிறோம்' என்று சொன்னதனால் இந்த அறிவிப்பின் கம்பீரம் கணிசமாகக் குறைந்துபோய்விட்டது. ●

# வட்டமேஜை



'ஜெயலலிதாவை மன்னித்து விட்டேன்' என்று விஜயகாந்த் கூறுவதிலிருந்தே அவர் ஒரு கைதேர்ந்த அரசியல்வாதியாக மாறி வருகிறார் என்பது புலனாகி விட்டது!

**பூனாம்பாளையம், ஆர்.பி.சுந்தரி**

'மரமாரி' சிறுகதை நினைத்து நினைத்து அசைபோட வைத்தது!

**பாளையங்கோட்டை, பி.சிவா**

என் இரண்டு பெண் குழந்தைகளை நானும் என் மனைவியும் அதிக சிரத்தையுடன் கவனித்து வருகிறோம். மீடியாவின் தாக்கம்தான் இன்றைக்கு நடக்கும் நிறைய தவறுகளுக்குக் காரணம். நொய்டா கொலைகளையும் இதில் சேர்க்கலாம்.

**மொரட்டுப்பாளையம், க.நா.இராஜேஸ்வரன்**

சினிமா உலகம் சந்தோஷங்கள் மட்டுமல்ல, இன்னல்களும் நிறைந்தது என்பதை நடிகர் ஜீவாவின் கட்டுரை உணர்த்துகிறது.

**மணியக்காரன்பாளையம், ஏ.ஜி.கல்யாணசுந்தரம்**

"வாரிசாக வந்தாலும் திறமை இருந்தால்தானே ஜெயிக்க முடியும்!" என்று எஸ்.ஏ.சந்திரசேகர் கூறியிருந்த பதில் நிதர்சனமான உண்மை!

**சென்னை - 93 எஸ்.சையது முகமது**


பட்டிமன்றப் பேச்சாளர் ராஜாவின் பேச்சைப் போலவே இருந்தது அவரது கட்டுரை.

**பெங்களூர், என்.கே.ஈசுவரி**

நாட்டுப்புறக் கலைக்கும் பாடல்களுக்கும் தங்களையே அர்ப்பணித்துக் கொண்டு வாழும் விஜயலட்சுமி-நவநீத கிருஷ்ணனின் சந்திப்பு - இனிப்பு, ரசிப்பு, தித்திப்பு!

**திருவண்ணாமலை, உமாதேவி பலராமன்**

# பஞ்சாமிர்தம்!



சுஜாதாவின் +2 டிப்ஸ், தக்க சமயத்தில் வந்த தேர்வு சஞ்சீவி!

**நெய்வேலி, க.சுந்தர்**


பொங்கல் சிறப்பிதழில் புதுத் தொடர்களின் அணிவகுப்பு! புத்தாண்டு பரிசு கண்டு வாசகர்களுக்கு குதூகலிப்பு!"

**நெய்வேலி, ப.உத்தண்டராமன்**

பொங்கல் சிறப்பிதழில் இடம் பெற்ற புதிய பகுதிகள் ஐந்தும் பஞ்சாமிர்தமாக இனித்தன!

**வேலூர், வே.த.கதிர்வேல்**

# வாரம் ஒரு பட்டுப் புடவை - 4



இங்குள்ள கட்டத்தில் தமிழ் சினிமாவின் முன்னணி நடிகர்கள் சிலரின் பெயர்கள் இடமிருந்து வலமாக, வலமிருந்து இடமாக, மேலிருந்து கீழாக, கீழிருந்து மேலாக, குறுக்கும் நெடுக்குமாக இடம்பெற்றுள்ளன. அவர்களின் பெயர்களைக் கண்டுபிடித்து, மீதமிருக்கும் ஏழே எழுத்துக்களை ஒழுங்குபடுத்தினால் சிறப்பான ஒரு வாசகம் கிடைக்கும். சரியான வாசகம் எழுதும் ஒரு நபருக்கு, சென்னை, தி.நகர் பாலம் சில்க் சாரீஸ் வழங்கும் பட்டுப் புடைவை ஒன்று பரிசாக வழங்கப்படும். ஒன்றுக்கு மேற்பட்டோர் சரியான விடை எழுதும் பட்சத்தில் பரிசுக்குரியவர் குலுக்கல் மூலம் தேர்ந்தெடுக்கப்படுவார்.

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| யா | ன் | ட | ம் | ள் | பே | ல் |
| ர் | ப | ர | த் | வா | ஜீ | ஷா |
| சூ | க் | த் | சி | ய் | ஜ | வி |
| வி | ச | ந் | ம் | வு | க | ஆ |
| த் | ர | கா | பு | ஷ் | ர் | ஷா |
| ஜீ | த் | ஸ்ரீ | அ | யா | னு | ம் |
| அ | வி | ர | ம் | ய | ஜெ | த |

விடை :

பெயர் : ..............................................................................

விலாசம் : ..............................................................................

..............................................................................

..............................................................................


தொலைபேசி எண் : ..............................................................................

மேலே குறிப்பிட்டுள்ள கட்டத்தில், விடையை எழுதவும். அடுத்துள்ள கட்டத்தில் பெயர், முகவரி எழுதி இந்தப் பக்கத்தைக் கத்தரித்து கல்கி முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

**ஆசிரியரின் தீர்ப்பே இறுதி.**

**கடைசி தேதி : 29.1.2007**





# தள்ளாடும் யதார்த்தம்!

**ம**ற்றவை நேரில், நா.வே.அருள், ஆனந்தாயி பதிப்பகம் சி-2, பிரசன்னா குடியிருப்பு, இரண்டாம் தளம், 69 & 71, பெருமாள் கோயில் தெரு, சைதாப்பேட்டை, சென்னை - 15. விலை ரூ.60





கடித வடிவிலான பெண்ணியச் சிந்தனைகள். காரம், வேகம், சோகம் - இவற்றுக்கிடையே சித்தாந்த நிர்ப்பந்தமும் தூக்கலாகவே இருப்பதால் யதார்த்தம் தள்ளாடுகிறது.

**உ**டலே நலமா? ஜி.எஸ்.எஸ்., நலம் வெளியீடு, 33/15, இரண்டாம் தளம், எல்டாம்ஸ் ரோடு, ஆழ்வார்பேட்டை, சென்னை - 18. விலை ரூ.60




இரத்த அழுத்தத்தில் தொடங்கி கதிரியக்கப் பரிசோதனை வரையிலான அனைத்து மருத்துவச் சோதனைகளின் ஏ டு இஸட் விளக்கங்கள். கண்ணன், மாலா என்னும் கேரக்டர்கள் மூலம் இவற்றைக் கதைபோல் சொல்லும்போது சுவாரஸ்யமாக இருக்கிறது.

**க**வியரசு கண்ணதாசன் கதை, வணங்காமுடி, கண்ணதாசன் பதிப்பகம், 23, கண்ணதாசன் சாலை, தி.நகர், சென்னை - 17. விலை ரூ.75





கண்ணதாசனின் வரலாறு அழகுற தொகுக்கப்பெற்றுள்ளது. அவருடைய, காதல், கல்யாணம், சினிமா அனுபவங்கள் என்று போகும் நீண்ட பயணத்தில் கடைசி அத்தியாயம் கண்கலங்க வைத்துவிடுகிறது. அவருடைய மறைவுக்குப் பிரபலங்கள் எழுதிய இரங்கல் கவிதைகளும் இடம் பெற்றுள்ளது கூடுதல் சிறப்பு.

**ஆ**மாம்/இல்லை, பட்டுக்கோட்டை பிரபாகர், ரம்யா பிரியா கிரியேஷன்ஸ் வெளியீடு, 37/1, கெனால் பாங்க் ரோடு, கஸ்தூரிபா நகர், அடையாறு, சென்னை - 20. விலை ரூ.40

எழுத்தாளர் பட்டுக்கோட்டை பிரபாகரின் கவிதைகள். பெரும்பாலும் காதல் சிந்தனைகள் நடுநடுவே சமூகத்தையும் உரசிப் பார்த்திருக்கிறார். மெல்லின உணர்வுகளின் ஊர்வலம்.

\- அத்தியாயன்



# ஹிந்து மஹா சமுத்திரம்

வேதங்கள், உபநிஷத்துக்கள், வேதாந்தம், சாத்திரம், புராணங்கள், ஆலயங்கள், பக்தி, சரித்திரம், நீதி, சட்டம், சமூக சிந்தனை, விஞ்ஞானம், கணிதம், இலக்கியம், வான சாத்திரம் என்று விரிந்து... ஆழ்ந்து, அகன்ற இந்த சமுத்திரத்தை அதன் கரையோரத்தில் நின்று பார்த்தவரின் பிரமிப்பு!

முதல் பாகம் விலை. ரூ.175/-

சோ

எழுதிய

## மஹாபாரதம்

பேசுகிறது

பாரதக் கதை பழமை வாய்ந்தது. ஆனால் அதை எழுதியிருக்கும் விதம் மிகவும் புதுமையானது. 1304 பக்கங்களில்; வியாச பாரதத்தின் சுருக்கம்; 18 பர்வங்களில் வரும் முக்கிய நிகழ்ச்சிகள்; பாரதக் கதை நடந்திருக்கக்கூடும் என்பதற்கான வழக்கறிஞர் 'சோ'வின் ஆணித்தரமான வாதம்; பலரும் கேட்டிராத நுணுக்கமான அரிய தகவல்களை விளக்கி; முக்கிய இடங்களில் பாரத நிகழ்ச்சிகளையும், கதாபாத்திரங் களையும் விமர்சித்து, இன்றைய நிகழ்வுகளோடு ஒப்பிட்டுக் கூறியிருக்கும் விதம் புதுமையானது.

இரண்டு பாகங்கள் - விலை ரூ.600/-

## வால்மீகி ராமாயணம்

வால்மீகி முனிவரால் எழுதப்பட்ட ராமாயணம் எனும் இதிஹாசத்தை - சுருக்கமாகவும், மிகவும் எளிய நடையிலும் சோ அவர்கள் எழுதியுள்ளார். மேலும் சில முக்கியமான இடங்களில் வால்மீகி ராமாயணம் - கம்ப ராமாயணம் மற்றும் துளசிதாஸரின் ராமாயணங்களை விட எப்படி வேறுபட்டுள்ளது என்பதையும், அப்படி விளக்கும் போது ஆங்காங்கே கம்பரின் வாக்கியத்தி லுள்ள தமிழ் அழகையும் நமக்கு எடுத்துக் காட்டுகிறார்.

விலை ரூ.500/-

## இந்து தர்மம்

விலை ரூ.60/-

காஞ்சி காமகோடி பூஜ்ய ஸ்ரீ மஹா ஸ்வாமிகளின் அருளுரைகளின் சுருக்கம்.

## அதிர்ஷ்டம் தந்த அனுபவங்கள்

ராஜாஜி, மொரார்ஜி தேசாய், இந்திரா காந்தி, சந்திரசேகர், அத்வானி, காமராஜ், அண்ணாதுரை, எம்.ஜி.ஆர். கருணாநிதி, என்.டி.ஆர்., ஜெயலலிதா போன்ற ஏராளமான அரசியல் தலைவர்கள், மற்றும் சினிமா, பத்திரிகைப் பிரமுகர்களுடன் தனக்கு ஏற்பட்ட அனுபவங்களை விளக்கியுள்ளார் விலை ரூ.90/-

## கருத்தாழம் மிக்க நகைச்சுவை நூல்கள்

| | |
|---|---|
| 1. எங்கே பிராமணன்? | 100.00 |
| 2. வெறுக்கத்தக்கதா பிராமணீயம் | 35.00 |
| 3. இந்து தர்மம் | 65.00 |
| 4. வந்தே மாதரம் | 115.00 |
| 5. வாஷிங்டனில் நல்லதம்பி | 100.00 |
| 6. சர்க்கார் புகுந்த வீடு | 100.00 |
| 7. கூவம் நதிக்கரையினிலே (பாகம் 1) | 130.00 |
| 8. கூவம் நதிக்கரையினிலே (பாகம் 2) | 45.00 |
| 9. கூவம் நதிக்கரையினிலே (பாகம் 3) | 27.00 |
| 10. துக்ளக் படமெடுக்கிறார் | 50.00 |
| 11. அதிகப் பிரசங்கம் | 32.00 |
| 12. இவர்களைத் தெரிந்து கொள்ளுங்கள் | |
| 13. யாரோ இவர் யாரோ? | 65.00 |
| 14. சாதல் இல்லையேல் காதல் | 80.00 |
| 15. மையிட்ட பிரம்ம தேவா | 30.00 |
| 16. இந்தியா எங்கே போகிறது? | 20.00 |
| 17. துக்ளக் கேள்வி - பதில் பாகம் 1 | 24.00 |
| 18. துக்ளக் கேள்வி - பதில் பாகம் 2 | 45.00 |
| 19. ஒண்ணரை பக்க நாளேடு பாகம் 1 | 40.00 |
| 20. காமராஜை சந்தித்தேன் | 60.00 |
| 21. புரட்சி கீதை | 35.00 |
| 22. திரையுலகைத் திரும்பிப் பார்க்கிறேன் | 45.00 |
| 23. யாருக்கும் வெட்கமில்லை | 40.00 |
| 24. சட்டம் தலை குனியட்டும் | 40.00 |
| 25. எங்கே போகிறாய்? | 40.00 |
| 26. என்று தணியும் இந்த சுதந்திர தாகம்? | 35.00 |
| 27. இறைவன் இறந்து விட்டானா? | 35.00 |
| 28. இன்பக் கனா ஒன்று கண்டேன் | 25.00 |
| 29. சாத்திரம் சொன்னதில்லை | 40.00 |
| 30. சரஸ்வதியின் சபதம் | 35.00 |
| 31. ஜட்ஜ்மெண்ட் ரிசர்வ்டு | 35.00 |
| 32. நேர்மை உறங்கும் நேரம் | 30.00 |
| 33. மனம் ஒரு குரங்கு | 40.00 |
| 34. ஏன் கூடாது? | 40.00 |
| 35. இரவில் சென்னை | 40.00 |
| 36. முகமது பின் துக்ளக் | 35.00 |
| 37. உறவுகள் இல்லையடி பாப்பா | 40.00 |
| 38. சம்பவாமி யுகே யுகே | 40.00 |
| 39. எதற்காக? | 35.00 |
| 40. உண்மையே உன் விலை என்ன? | 37.00 |
| 41. துக்ளக் தலையங்கங்கள் | 25.00 |

சிறப்பு தள்ளுபடி

சென்னை புத்தகக் கண்காட்சியிலும்: (10.1.2007 - 21.01.2007)

துக்ளக் ஆண்டு விழாவிலும் 14.1.07 (காமராஜ் அரங்கில்)

10%

(நூற்றாண்டு கண்ட முதல் தமிழ்ப் புத்தக நிறுவனம்)

அல்லயன்ஸ்

ப.எண். 244, ராமகிருஷ்ணா மடம் சாலை, தபால்பெட்டி எண்: 617, மயிலாப்பூர், சென்னை - 4. தொலைபேசி : 24641314

e-mail : www.alliancebook.com

visit us at : Srinivasan@alliancebook.com

# காதல் வயப்பட்ட பில் கேட்ஸ்!




அறிவியலைத் தோழனாக ஏற்றுக் கொண்ட பில் கேட்ஸ், 1962ஆம் ஆண்டில் சியாட்டில் நகரில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த அறிவியல் கண்காட்சிக்குத் தமது நண்பர்களுடன் சென்றிருந்தார்.

அது அவருக்கு ஒரு புதிய அனுபவமாக இருந்தது. ஏகப்பட்ட ஸ்டால்கள். ஒவ்வொன்றிலும் நாளைய உலகைக் காட்சிப்படுத்தும் அற்புதமான கருவிகள், கண்டுபிடிப்புகள், சவால்கள், எதிர்காலச் சாத்தியங்கள், இன்னும் எத்தனையோ...

மணிக்கணக்காக மிகுந்த பரவசத்துடன் அந்தக் கண்காட்சியைச் சுற்றிவந்த பில் கேட்ஸ், ஒவ்வொரு ஸ்டாலாக மீண்டும், மீண்டும் ஏறி இறங்கினார். ஒவ்வொரு முறையும் புதுப்புது விஷயங்கள் தொடர்ந்து அவருடைய கண்களைக் கவர்ந்து கொண்டிருந்தன. அறிவியல் மீது அவருக்கு வெறித்தனமான ஒரு நேசம் பிறந்தது அங்கேதான்.


பள்ளியில் கேட்ஸின் அறிவியல் ஆர்வத்தைப் புரிந்து கொண்ட ஒருவர், அவருடைய வேதியியல் ஆசிரியர். பாடங்களில் என்ன இருக்கிறதோ அதை மட்டும் படிப்பது கேட்ஸுக்குப் போதவில்லை என்று உணர்ந்த அவர், அறிவியலின் யதார்த்தமான பயன்பாடுகளைப் பற்றி விளக்கிச் சொன்னார்.

'இதையெல்லாம் படிப்பதன் மூலம் சமூகத்தில் மக்களுடைய வாழ்வில் ஒரு தாக்கத்தை உருவாக்க முடியும்' என்று அவர் குறிப்பிட்டது பில் கேட்ஸுக்கு மிகவும் பிடித்திருந்தது. அப்போதிலிருந்து, தாம் பார்க்கிற ஒவ்வொரு விஷயத்தையும் அறிவியல்பூர்வமாக மாற்றிச் சிந்திக்க, கேள்வி கேட்கத் தொடங்கினார்.

பில் கேட்ஸின் தொடர் கேள்விகளைச் சமாளிக்க முடியாத பெரியவர்கள், ஒரு நல்ல வேலை செய்தார்கள் - அவனுக்குப் புத்தகங்களின் உலகத்தை அறிமுகப்படுத்தினார்கள்.

அவ்வளவுதான். சட்டென்று புத்தகப் பிரியனாகிவிட்டார் பில் கேட்ஸ். ஆரம்பத்தில் குழந்தைக் கதைகளைப் படிப்பதில் ஆரம்பித்து, சட்டென்று பெரும் சாதனையாளர்களின் வாழ்க்கை வரலாறுகளை ஆர்வத்தோடு தேடிப் படிக்கத்

# என்.சொக்கன்



தொடங்கினார்.

குறிப்பாக, பிரெஞ்சு அரசன் நெப்போலியன் போனபார்ட்டின் வாழ்க்கை பில் கேட்ஸை மிகவும் கவர்ந்தது. பல புத்தகங்களைப் படித்து, நெப்போலியனைப் பற்றிய நுணுக்கமான தகவல்களைக்கூட விரல் நுனியில் வைத்திருந்த பில் கேட்ஸ், அவரைப் போலவே உலகை வெல்ல



வேண்டும் என்கிற ரகசிய ஆசையையும் உள்ளுக்குள் வளர்த்துக் கொண்டார்.

அடுத்தபடியாக, என்சைக்ளோபீடியாவை எடுத்து வைத்துக்கொண்டு மாதக் கணக்காக, வருடக்கணக்காகப் படிக்கத் தொடங்கினார். அறிவியல், பிஸினஸ் சார்ந்த பத்திரிகைகளையும் விட்டுவைக்கவில்லை.

ஆரம்ப காலத்தில் பில் கேட்ஸின் அறிவியல், பிஸினஸ் ஞானமெல்லாம் இப்படிப் படித்து வளர்த்துக் கொண்டதுதான். ஆனால், கணித அறிவு மட்டும் அவருக்கு இயற்கையிலேயே அபரிமிதமாகக் கிடைத்திருந்தது.

இப்படித் தனக்குள் பல அசாத்தியத் திறமைகளை ஒளித்து வைத்திருந்த பில் கேட்ஸ், பள்ளிக்கூடத்தினுள் நுழைந்தால் மட்டும் சலிப்பில் மூழ்கிப் போவார்.

பள்ளிக்கூடத்தை மாற்றினால் பையன் திருந்துவானா என்று யோசித்த பில் கேட்ஸின் பெற்றோர், அவரை 'லேக்சைட்' என்ற ஒரு பெரிய பள்ளியில் சேர்த்தார்கள். ஆனால் இதனாலும் பெரிய பயன் எதுவும் இல்லை. வழக்கம் போல் இங்கேயும் அவர் சலிப்போடு திரிந்துகொண்டிருந்தார். மற்றவர்கள் அவரை முட்டாள் என்று முடிவு கட்டிவிட்டார்கள்.

இந்தச் சூழ்நிலையில், திடுதிப்பென்று ஒருநாள் பில் கேட்ஸுக்குப் பள்ளிக்கூடத்தின் மீது அபார ஆர்வம் பிறந்துவிட்டது. நான் முழுக்க, தூங்கும் நேரம் தவிர மற்ற நேரமெல்லாம் பள்ளியில் தவம் கிடக்க ஆரம்பித்தார்.

விஷயம் ஒன்றுமில்லை. அவர் காதல் வசப்பட்டிருந்தார். கன்னிக் காதல்; கணினிக் காதல்!

(தொடரும்)



# பிரார்த்தனை



பணத்துக்காக பகவானைப் பிரார்த்தனை பண்ணுவது தப்புதான். கஷ்டம் போகணும், வியாதி தீரணும் என்று பிரார்த்தனை பண்ணுவதுகூட அவிவேகம்தான். பகவானுக்காகவே பகவான் என்ற பிரேமையோடு செய்கிற பக்திதான் நிஜமான பக்தி. ஆனால் பகவானோ கீதையில் இன்னோரிடத்தில் இப்படிப் பணத்துக்காகவும், கஷ்ட நிவர்த்திக்காகவும் பிரார்த்திக்கிறவர்களைக்கூட உயர்ந்தவர்கள் என்கிறார். ஏன் அப்படிச் சொல்கிறாரென்றால் பிரார்த்தனை செய்வது, எதுவோ ஒன்றுக்காக பகவான் என்று ஒருத்தனை நினைப்பது, நம்மால் முடியாத ஒன்றைச் செய்கிற மஹா சக்தியுடையவன் அவன் என்பதால் அவனிடம் வேண்டிக் கொள்வது (இதிலேயே நம் வேண்டுதலை நிறைவேற்றி வைக்கும் அருள் மனசு அவனுக்கு உண்டு என்ற நம்பிக்கையும் இருக்கிறது) - இப்படி அநேக நல்ல விஷயங்கள் பணத்துக்காகவும், கஷ்ட நிவர்த்திக்காகவும் பிரார்த்திப்பதில்கூட இருக்கத்தானே செய்கின்றன? அதனால்தான் இப்படிப் பிரார்த்திப்பவர்களையும் உயர்ந்தவர்களாகச் சொன்னார். "ஏதோ ஒரு வகையில் என்னிடம் வந்துவிட்டால் போதும். அப்புறம் சரியான முறையில் வரும்படியான பக்குவத்தை அவனுக்குக் கொஞ்சம் கொஞ்சமாகத் தந்துவிடலாம்" என்று நினைத்துத்தான் அப்படிச் சொன்னார்.

**- ஜகத்குரு காஞ்சி காமகோடி ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சார்ய சுவாமிகள்**

## உங்கள் பொதிகையில்
## திங்கள் முதல் வெள்ளி வரை
## வாரம் தோறும் தினசரி காலை 6:30க்கு

# "கண்ணனின் ஆரமுது"



**ஸ்ரீமத் பகவத் கீதை காட்டும் வாழ்க்கை நெறியை விளக்குகிறார் வேளுக்குடி கிருஷ்ணன் அவர்கள்**

**காணுங்கள்!**
**கண்டு பயன் பெறுங்கள்!**

---

**பிராம்மணர் இல்லத் திருமணம் பற்றிய**
**முழுமையான முதல் புத்தகம்**

# "அக்நி, அம்மி, அருந்ததி"

பாலிகை தெளித்தல், பந்தக்கால் பூஜை போன்றவற்றில் எந்தக் கடவுளை ஆவாஹனம் செய்கிறோம்? நுகத்தடி வைப்பது ஏன்? "மாங்கல்யம் தந்துனா" என்ற மந்திரத்தின் பொருள், சப்தபதியின் முக்கியத்துவம், விவாஹ ஹோமங்கள் பற்றி சிலப்பதிகாரம், சீவகசிந்தாமணி, பதிற்றுப்பத்து என்ன சொல்கின்றன? கம்பனின் ராமர் செய்த யாத்ரா தானம், வால்மீகியின் ஜனகர் செய்த கன்யாதானம், துளசிதாஸரின் தசரதர் செய்த நாந்தி சிராத்தம் பற்றிய விவரம்...

விவாஹ மந்த்ரங்கள், தமிழ் அர்த்தம், பல்வேறு உட்பிரிவினர், பல ஊர்களைச் சேர்ந்தவர்கள் அனுசரிக்கும் சம்ப்ரதாயங்கள், ஜாதகம் பார்த்தல், திருமணம் பதிவு செய்தல், சீமந்தம், உபநயனம், சஷ்டியப்தபூர்த்தி பற்றிய குறிப்புகள் அடங்கியது. ஸ்ரீமத் ஆச்சார்யாள் ஸ்ரீமுகம், தலைமை தேர்தல் ஆணையர் ஸ்ரீ என்.கோபாலஸ்வாமி மற்றும் பலரின் அணிந்துரையுடன் வெளிவந்திருக்கிறது. **Rs.80/-** (Author: N.S.Natarajan)

சுபஸ்ய சீக்கிரம். N.S.Natarajan, L-23/4, 26th Cross Street, Besant Nagar, Chennai - 600 090 என்ற விலாசத்துக்கு ரூபாய் 80/- அனுப்புங்கள். புத்தகம் புக் போஸ்ட் மூலம் உங்கள் இல்லம் தேடி வரும்.

தொலைபேசி : 044-24469125, 9940169125. **கடைகளிலும் கிடைக்கும்.**

# இதுதான்

உறவினர் வீட்டுக் கல்யாணத்துக்குச் சென்றுவிட்டுக் குடும்பத்துடன் காரில் திரும்பிக் கொண்டிருந்தோம்.

என் மகன் கார் ஓட்டிக் கொண்டிருந்தான். எம்.ஏ. கடைசி வருடம் படிக்கிறான். காருக்குள் அவனுக்குப் பிடித்த இரைச்சலான பாட்டு ஓடிக் கொண்டிருந்தது. என் மனைவி உண்ட களைப்பில் கண் மூடி அமர்ந்திருந்தாள்.

ப்ச்... பயணங்களே அலுப்புதான். இன்னமும் இரண்டு மணி நேரம் பயணிக்க வேண்டும். மனசுக்குள் நாளை செய்ய வேண்டிய அலுவலக வேலைகள் ஓடின. சொந்தமாய் பிளாஸ்டிக் தொழிற்சாலையை நடத்தி வருகிறேன். ஓரளவுக்கு வளமான தொழில்.

"தாகமாயிருக்கு. ஏதாவது சில்லுனு குடிக்கணும் போலிருக்கு" என்று என் மனைவி சொன்னதும், அடுத்து வந்த ஊரின் கடைத்தெருவில் நிறுத்தினான் என் மகன் கேசவ்.

கேசவ் குளிர்பானம் வாங்கச் சென்ற போது, நானும் காரைவிட்டு இறங்கினேன். சிகரெட்டைப் பற்ற வைத்து இழுத்தேன்.

திடீரென என் தோளை யாரோ தட்ட, திரும்பிப் பார்த்தேன்.

"என்னப்பா, சௌக்கியமா?" என்று முகமெல்லாம் புன்னகையுடன் நின்று கொண்டிருந்தான் என் பால்ய சிநேகிதன் பரசு.

எத்தனைதான் வயதானாலும், மனதளவில் இன்னும் அந்தப் பள்ளிக்கூடப் பருவ வாழ்க்கைக்குத் திரும்ப மனசுக்குள் ஓர் ஏக்கம் இருப்பது இவனைப் பார்க்கும்போதெல்லாம் தெரியும்.

குசல விசாரிப்புக்குப் பின் தெரிந்தது, அவனும் என் ஊருக்குப் பயணமாக நின்றுகொண்டிருப்பது.

"பரவாயில்லேப்பா; இதோ பஸ் வந்துடும்" என்று தயங்கியவனை, வற்புறுத்தி காரில் ஏற்றினேன்.

எனது வியாபாரத் தொழில் அவசரத்தில் நண்பர்களையும், உறவினர்களையும் இழந்து வருவது நிதர்சன உண்மை!

காரில் பத்து நிமிடங்கள் பயணம் செய்ததும், பொறுக்க முடியாமல் கேட்டான் பரசு.

"ஏன் இப்படி சண்டை போட்டுக்கிட்ட மாதிரி 'உம்'முனு வர்றீங்க? கேசவ் கொஞ்சம் அந்த டேப்பை நிறுத்து" என்றான்.

"ஒண்ணு தெரியுமா கேசவ்? உங்கப்பாவுக்கு இந்த 'வெண்ணை ஊதுபத்தி' பழக்கத்தைக் கற்றுத் தந்ததே நான்தான். ஆனா இப்ப நான் நிறுத்திட்டேன்" என்றான்.

"ஏன் உடம்புக்குக் கெடுதல்னா?"

"ஐயையோ, அப்படியெல்லாம் ஞானம் வரலேப்பா. ம்ாசச் செலவுல துண்டு விழுந்தது. பார்த்தேன்; சிகரெட்டை நிறுத்திட்டேன். அதுவும் எப்படி? என் மனைவிக்காக நிறுத்தின மாதிரி சொல்லி, அன்பான புருஷன்னும் பெயர் வாங்கிட்டேன். ஒரே கல்லுல ரெண்டு மாங்காய்" என்று சொல்லிச் சிரித்தான். நாங்களும் அதை இரசித்துச் சிரித்தோம்.

"கேசவ், கல்லூரியிலே ஏதும் 'பிப்ரவரி பதினாலு' கதை உண்டா?"

"என் பையன் சமர்த்துப்பா. படிக்கிற வயசில இந்தக் காதல், கீதலெல்லாம் வைச்சுக்க மாட்டான்" என்றேன்.

"அதாவது நம்மள மாதிரி இல்லைன்னு சொல்லு" என்று பரசு சொன்னதும் என் மனைவி என்னைப் பார்த்தாள்.

கிருஷ்ணா

# நிஜம்!

"அவனை ஏன் முறைக்கறீங்க? ஏதோ சித்ரா, பானு, மாலான்னு மூணு பேர் பின்னாடி மட்டும்தான் அலைஞ்சான். பெரிதாய் ஒண்ணும் தப்பு செய்யலே" என்று பரசு சொன்னதும், என் மனைவியும் சிரித்துவிட்டாள்.

அப்போது பின்னால் வந்த பேருந்து ஒன்று வழி கேட்டு ஒலி எழுப்பிக் கொண்டேயிருக்க, அதற்கு வழி விடாமல், கேசவ் காரின் வேகத்தை அதிகரித்தான்.


"நம்ம காரின் வேகத்தைக் குறை கேசவ். அந்த வண்டியைப் போக விடு" என்று நான் கண்டித்துச் சொல்ல, பேருந்து எங்களைக் கடந்து சென்றது.

"இது. இந்த நிதானம்தான் உங்க அப்பாவோட வெற்றிக்குக் காரணம்னு நினைக்கிறேன், கேசவ். படிக்கற வயசுல குறும்புத்தனம் பண்ணினாலும் அதிலேயும் எல்லை மீறி விழுந்துடாம, படிப்பிலே கவனம் செலுத்தி எங்கள் வகுப்பிலேயே முதல் மாணவனாய் வருவான்" என்றான் பரசு.

"என்னப்பா, இன்னிக்கு என் புராணம் அதிகமாய்ப் பாடறே... காரை விட்டு இறங்கினதும், டிக்கெட் சார்ஜ் கேட்டுடுவேனான்னு பயமா?" என்று நான் கிண்டலடிக்க, என் மனைவியும் மகனும் என்னை வியப்புடன் பார்த்தனர்.

'கேலியும், கிண்டலுமாய்க்கூட இப்படி சகஜமாய்ப் பேச வருமா உங்களுக்கு?' என்று கேட்டது அவர்களுடைய பார்வை.

தொழிற்சாலையிலிருந்து வீடு திரும்பிய பின்பு, அலுவலகக் கோப்புகள் நிழலாய் என்கூட





"என் வீட்ல போனமுறை என் மனைவி கையால சாப்பிட்டதை இன்னமும் நீ மறக்கலைன்னு நினைக்கிறேன்..."

"அட... எப்படிக் கண்டுபிடிச்சே...?"

"இப்போ என் வீட்டுக்குக் கூப்பிட்ட உடனே உன் முகத்துல தெரிஞ்ச நடுக்கம் காட்டிக் கொடுத்துடுச்சே...."

- கே. ஆனந்தன்

வரும். என் மனைவியோ தொலைக்காட்சி அல்லது லேடீஸ் கிளப். கேசவ் பற்றிக் கேட்கவே வேண்டாம்! கணினியில் தோண்டிக் கொண்டிருப்பான் பெரும்பாலும்.

"கேசவ் நிறுத்து, நிறுத்துப்பா" என்று பரமு பரபரக்க, வண்டியை ஓரம் கட்டினான்.

"அதோ பாருங்க, அழகான காட்சி. பின்புறம் மலை, முன்புறம் ஏரி, அடர்த்தியான மரங்கள் நிறைந்த கரை. வாவ்..." என்று வியந்தபடி பரமு காரை விட்டு இறங்கினான்.

நாங்களும் காரிலிருந்து இறங்கி அவனுடன் ஏரிக்கரை நோக்கிச் சென்றோம்.

"பயணம் என்பதே இதுபோன்ற அழகான காட்சிகளைக் கண்டு இரசிக்கத்தான். டீ.வி.யிலே காட்டும்போது ஆஹான்னு வாயைப் பிளப்போம். ஆனால் பயணத்தின்போது தலையிலே தீப்பிடிச்ச மாதிரி விரட்டி விரட்டி ஓடி, சேர வேண்டிய இடத்தை அவசரமாய்ப் போய்ச் சேர நினைப்போம். டீ.வி.யிலே காண்பது நிழல்; இதோ இதுதான் நிஜம்!"

பரசு ஓயாமல் பேசிக்கொண்டே போக, அதை ஆமோதித்தபடி அந்த அமைதியான குளிர்ந்த சூழலில் திளைத்தோம்.

மீண்டும் கார்ப் பயணம். இப்போது, பரமு மட்டும் பேசாமல், காரிலிருந்த எல்லோருமே அரட்டையடித்து, தத்தமது எண்ணங்களைப் பகிர்ந்துகொண்டதில் நேரம் போனதே தெரியவில்லை.

வீட்டுக்கு வரச் சொல்லி வற்புறுத்தியும் பரசு வழியிலேயே இறங்கிக் கொண்டு விட்டான். அவசர வேலையாம்.

அவன் இல்லாதது வெற்றிடமாக உணரப்பட்டது காரில் - பௌதிகமாக மட்டுமல்லாமல், உணர்வுபூர்வமாகவும்.

அன்று வீடு திரும்பிய பின்பு, எங்கள் வீட்டு டீ.வி.யும், கணினியும் இயக்கப்படவில்லை. எவ்வளவு காலமாயிற்று, இப்படி நாங்கள் சேர்ந்து அமர்ந்து சாப்பிட்டு! ○

"அந்த ஓட்டலுக்குப் போனா ரொம்ப அக்கறையா கவனிக்கிறாங்க!"

"நிஜமாவா?"

"ஆமாம். சாப்பிட்ட உடனே ஜீரணமாக ஆளுக்கொரு இஞ்சி மரப்பா கொடுக்கறாங்க!"

- ஜி.வி.சுபாஷ்



# சிட்டி யூனியன் பாங்க் லிட்.

CUB

Since 1904

பதிவு அலுவலகம் : கும்பகோணம் - 612 001, தமிழ்நாடு.
போன் : 0435-2432322 ஃபேக்ஸ் : 0435-2431746

## CUB 600 + 9.25% வரை

டெபாசிட்டுகளுக்கு
வழங்கும் வட்டி

வாடிக்கையாளர்களின் மகிழ்ச்சியே எங்கள் கொள்கை.
எங்கள் வட்டி விகிதங்கள் இதையே உறுதி செய்கின்றன.

| காலம் | மூத்த குடிமக்கள் உட்பட |
| --- | --- |
| 600 நாட்கள் முதல் 6 வருடங்கள் வரை | 9.25% |

| வருமான வரி விலக்கு அளிக்கும் டெபாசிட் திட்டங்கள் | வருடாந்திர வட்டி மூத்த குடிமக்கள் உட்பட |
| --- | --- |
| CUB TAX SAVER GOLD<br>CUB TAX SAVER SILVER | 11.59% |

இப்போது நமது அனைத்து வங்கிக் கிளைகளின் சேவைகள் Core Banking Solutions (CBS) மூலம் ஒருங்கிணைக்கப்பட்டுள்ளன. எனவே, அதன் அனுகூலத்தை 24 மணிநேரமும் நீங்கள் பெறமுடியும்.

**மேலும் விவரங்களுக்கு**

மின் அஞ்சல் : rpm@cityunionbank.com
இணைய தளம் : www.cityunionbank.com
SMS : "CUBDEPOSIT" to 9900654321

**கிளைகள் :**

சென்னை (தி.நகர்)-9380286558, பாண்டிச்சேரி-2331272, விழுப்புரம்-222313, கடலூர்-230467, சிதம்பரம்-222114, மயிலாடுதுறை-222156, கும்பகோணம் மெயின்-2421058, தஞ்சாவூர்-230943, திருச்சி-2704180, மதுரை-2348886, கோயம்புத்தூர் (ராம் நகர்) - 2232393, ஈரோடு-2258821, சேலம்-2260134, கரூர்-230346, நாமக்கல்-221096, திருச்செங்கோடு-256356, திருப்பூர்-2247248, இராஜபாளையம்-230432, காரைக்குடி-236524, புதுக்கோட்டை-221739, சிவகாசி-220181, திருநெல்வேலி-2337349, நாகர்கோயில்-225353, தூத்துக்குடி-2321343, விருதுநகர்-243962, ஹைதராபாத்-23228358, பெங்களூர் (சுல்தான்பெட்)-22870328, மும்பை (கார் வெஸ்ட்) - 26463047, டெல்லி (கரோல்பாக்) - 25788696, கொல்கத்தா - 22107140.

மேலும் இந்தியா முழுவதும் கிளைகள்.

**வாழ்நாள் முழுவதும் உங்களுடன்!**

# என் கடவுள்... என் தோழன்!

கடவுள் உண்மையிலேயே தோழனா, அவரால் மனிதனுக்குப் பலன் உண்டா போன்ற வினாக்களுக்கு விடையளிக்கும் வகையில் அண்மையில் நான் ஒரு கதையைக் கேட்க நேரிட்டது.

ஒரு குரு; ஒரு சீடன். அந்தச் சீடன் வாழ்வில் எதைப் பார்த்தாலும் குறை சொல்லும் பழக்கமுடையவன்.

'மக்களுக்கு உணர்ச்சியே இல்லை, உலகத்தில் நியாயமே கிடையாது, கடவுளுக்குக் கண் இல்லை' என்றெல்லாம் குற்றம் சொல்லிக் கொண்டிருந்தான்.

இதைப் போன்ற புகார்களை அவ்வப்போது கேட்டுச் சகித்துப் போன குரு, இந்த முறை சீடனைத் தெளிவுபடுத்தியே ஆக வேண்டும் என்று முடிவெடுத்தார்.




ஒருநாள் இருநூறு கிராம் உப்பு வாங்கி வரச் சொல்லித் தன் சீடனை அனுப்பினார். அவனும் கடையிலிருந்து உப்பு வாங்கி வந்தான். அந்த உப்பில் ஒரு கைப் பிடி அளவை ஒரு தம்ளர் தண்ணீரில் கொட்டிக் கலக்கும்படி குரு சொல்ல, சீடன் அப்படியே செய்தான்.



பிறகு அந்த உப்புத் தண்ணீரைக் குடிக்கச் சொன்னார். உப்பு கரிக்கும் அந்த நீரை அவனால் ஒரு வாய் கூடக் குடிக்க முடியாமல், அப்படியே கீழே துப்பினான். பின்னர் தம் சீடனை அழைத்துக்கொண்டு, அருகிலுள்ள ஏரிக்குச் சென்று அதே அளவு உப்பை அந்த ஏரியில் போடச் சொன்னார். சீடனும் போட்டான். பிறகு, அந்த ஏரித் தண்ணீரை எடுத்துக் குடித்துப் பார்க்கச் சொன்னார். ஏரித் தண்ணீரைக் குடித்த சீடன், தண்ணீர் சுவையாக இருப்பதாகக் கூறினான்.

"ஒரே அளவு உப்பைத்தான் தம்ளர் தண்ணீரிலும், ஏரியிலுள்ள தண்ணீரிலும் கலந்தாய். தம்ளர் தண்ணீர் உப்புக் கரிக்க, ஏரித் தண்ணீரில் எந்தப் பாதிப்பும் இல்லை, பார்த்தாயா!" என்றார் குரு.

இப்படித்தான் வாழ்வில் வேதனைகளும் கட்டுப்பாடுகளும்.

நம் உடலிலும் நமக்குள்ளே இருக்கும் ஒரு சிறிய மனத்திலும் அவற்றை நாம் சுமந்தால், வாழ்நாள் முழுவதும் கசப்புணர்வுடன் இருப்போம். ஆனால், எங்கும் வியாபித்துள்ள கடவுள் என்னும் ஏரியில் அந்த வேதனைகளை வைத்தால், அவை கரைந்து, நமக்கு வாழ்வின் சுவை சுலபமாகக் கிடைக்கும்.

'இது ஏதோ நமக்கு மட்டுமே ஏற்பட்ட துன்பம்,' என்று எண்ணிச் சுமந்தோமானால் நாம் தொடர்ந்து அழிவை அனுபவிக்க நேரிடும்; ஆனால் எங்கும் நிறைந்துள்ள ஈஸ்வரனாகிய கடவுளுடன் தொடர்புப்படுத்திப் பார்க்கையில் அதே அழிவு ஓர் அழகிய நடனமாகிறது.

இந்தக் கதையில், தம்ளர் தண்ணீர் அருகில் இருக்க, ஏரி சற்றுத் தொலைவில் இருக்கிறது. ஆனால் மனித உடலில் நம் மனமும் எண்ணங்களும் ஒன்றுக்கொன்று விலகி நிற்பதில்லை.

இந்த எண்ணங்கள் மனத்துள் அடங்கும். அந்த மனத்தைச் சுமக்கும் உடல் பிரக்ஞையோடு இருக்கிறது. ஏனெனில் அதற்குள் சூட்சும சரீரம் என்று அழைக்கப்படுகிற, கண்ணுக்குப் புலப்படாத நுட்பமான ஒன்று இருக்கிறது. அது இருப்பதால்தான் உடல் இயங்குகிறது. அது இல்லையென்றால், உடலில் இயக்கம் நின்று போய்விடும். ஸ்தூல சரீரம் என்பது உயிரற்ற மேஜையைப் போல.

# ஒரு கைப்பிடி உப்பு...

ஒரு மண்பானையை உதாரணமாக எடுத்துக் கொள்வோம்... சூரிய ஒளி பானையை வெளிச்சமிட்டுக் காட்டுகிறது. ஆனால், அந்த ஒளியை, வெறும் பானை பிரதிபலிக்காது. அதே பானைக்குள் கொஞ்சம் தண்ணீரை நிரப்பினால், சூரிய ஒளி அதில் பிரதிபலிக்கிறது; பிரதிபிம்பம் ஏற்படுகிறது.

தண்ணீர இருந்தாலே ஒழிய பானை

**தமிழ் வடிவம் : சிவசங்கரி**



## யானை அடித்துச் சாகவில்லை பாரதி!

"மகாகவி பாரதியாரின் மரணத்துக்கு சென்னை திருவல்லிக்கேணி கோயில் யானைதான் காரணம் என்று பல்லாண்டுகளாகச் சொல்லப்பட்டு வருவது சரியில்லை. யானைச் சம்பவம் நடந்தது 1921ஆம் வருடம் ஜூலை மாதத்தில். அதன் பிறகு அவர் உடல் தேறி செப்டெம்பர் வரை உயிருடன் இருந்தார். தமது உடல்நலம் தேறிவிட்டதாக பாரதிதாசனுக்குக் கடிதம் எழுதினார்."

- மகாகவி பாரதியாரின் 125ஆவது பிறந்த நாளில், வழக்கறிஞர் கே.எஸ்.ராதாகிருஷ்ணன் தொகுத்துள்ள 'கரிசல் காட்டின் கவிதைச் சோலை பாரதி' என்ற புத்தக வெளியீட்டு விழாவில் கலந்துகொண்டு பேசும்போதுதான் வைகோ இந்த விஷயத்தைச் சொன்னார். ஒரு டஜன் பேர் எழுதியுள்ள கட்டுரைகளின் தொகுப்புதான் இந்நூல்.

சரி, யானை தாக்கிச் சாகவில்லை என்றால், பாரதியார் மரணமடைந்தது எப்படி? "1921 செப்டெம்பர் முதல் தேதி பாரதியாருக்கு வயிற்றுப் போக்கு ஏற்பட்டது. அது தீவிரமடைந்து பதினொன்றாம் தேதி இரவு ஒன்றரை மணிக்கு அமரர் ஆனார்." என்று இந்நூலின் கட்டுரையாசிரியர்களுள் ஒருவரான மாலன், தமது கட்டுரையில் குறிப்பிட்டுள்ளார்.

- மௌலி

யால் சூரியவொளியைப் பிரதிபலிக்க முடியாது. அதற்குள் தண்ணீர் இருக்கும்போது பிரதிபிம்பம் ஏற்படுகிறது. ஒரு வேளை ஆயிரம் பானைகள் இருந்தால், ஆயிரம் பிரதிபிம்பங்கள் உருவாகும். ஆனால் சூரியன் ஒன்றுதான். பானை உடைந்துவிட்டால் தண்ணீர் எங்கெல்லாம் உள்ளதோ அங்கெல்லாம் பிரதிபலிப்புகள் இருக்கும். 'நீரில் மண் கலந்திருந்தால் பிம்பமும் மண்ணாக இருக்கும். நீர் தெளிந்து சென்றால், பிம்பமும் தெளிந்தவாறே தோன்றும். நீர் காய்ந்துவிட்டால், பிம்பமும் காயும். 'ஆனால், சூரியன் மட்டுமே அசல், அது எப்போதும் இருப்பது. ஆயிரம் பானைகளிலும் அதுதான் பிம்பங்களை உருவாக்குகிறது' என்பது பிம்பத்துக்குப் புரிந்துவிட்டால், பிறகு பயமுமில்லை, வேதனையுமில்லை.

இவ்வாறே உடல் என்கிற மண் பானைக்குள் உயிர்நுட்பம் என்கிற நீர் புகும்போது, பிரக்ஞை விழித்துக் கொள்கிறது. அப்போதுதான் 'நான்' என்கிற உணர்வும் ஏற்படுகிறது. அது நிகழாத வரை, இது வெறும் பிண்டம்தான்.

பிரம்மாண்டம் என்கிற பரந்த வான்வெளிப் பிரபஞ்சத்தை எடுத்துக் கொண்டால், முழுமையான இயக்கமற்ற உடலும், முழுமையான சூட்சும உடலும் சேர்ந்ததுதான் 'அந்தர்யாமி', 'ஹிரண்ய கர்ப' என்று அழைக்கப்படும் அந்தப் பிரம்மாண்டம். இந்த முழுமையுடன் இணைந்த பிரக்ஞைதான், அவனே உருவாக்கி இயக்குபவன் அவனே நமது மண்பாண்ட உடலை உருவாக்கி, உயிர் நுட்பம் என்ற நீரையும் புகுத்துகிறான். பரந்து விரிந்த பிரக்ஞையின் - கடவுளின் அம்சமே நாம்.

(தொடரும்)

# அடையாளம்



என் கோபத்துக்கான
சமாதானங்களை
எதிர்பார்த்ததில்லை
உன்னிடம்

என் நிராகரிப்புக்கான
வலிகளை
கண்டிருக்கிறேன்
உன் கண்களில்

என் தவறுகளுக்கான
தண்டனைகளை
தவிர்த்திருக்கிறேன்
சாமர்த்தியமாய்

எனது இயலாமைக்கெல்லாம்
பொட்டு வைத்துப் பூமுடித்து
அவமானப்படுத்தியிருக்கிறேன்
பலமுறை

புருஷன்னா அப்படித்தானென்கிற
ஆறுதலில் புதைந்து அழுவது
தெரியாததுபோல் நடிப்பது
கை வந்த கலையெனக்கு

இன்று நானில்லை

நானில்லாததற்கான
அடையாளங்களைச் சுமந்தபடி
நீயிருக்கிறாய்
அதே வலிகளுடன்

கணேசகுமாரன்

# ஜோக்ஸ்





''உனக்கு பார்த்திருக்கற பொண்ணு ரொம்ப ஒல்லின்னு ஏன்டா சந்தேகப்படறே?''

''வளையலை பேக் பண்ணி கிஃப்டா அனுப்பினேன். 'ஒட்டியாணம் சூப்பர்'னு போன் பண்றாளே!''

- சென்னிமலை
சி.பி.செந்தில்குமார்

''என்னை உங்களுக்கு அடையாளம் தெரியலையா சார்..? நான் உங்ககிட்டேதான் சின்ன வயசுல படிச்சேன்.''

''அடப்பாவி! நீயா..? அப்பவே... நீ உயிரை எடுப்பியே...!''

- குருவை ஆர்.தேவிகா



# மனைவிக்கு பயப்படாத வரம்!



''மனைவிக்குப் பயப்படாமலிருக்கிற வரம் வேணும் சாமி...!

''ஸாரி பக்தா! அம்மையைக் கேட்காமல் இது மாதிரியான வரமெல்லாம் தர எனக்கு அதிகாரமில்லை...''

- உ.ராஜாஜி





# ஸ்டாலினுக்கு என்னாச்சு?

குடும்பத்துடன் மாமல்லபுரம் சென்று ஓய்வெடுத்துக் கொண்டிருந்த ஸ்டாலின், பேரக் குழந்தையுடன் ஊஞ்சலில் விளையாடும்போது தவறி கீழே விழ, முதுகுத் தண்டும் இடுப்பெலும்பும் சேரும் இடத்தில் சிறு மயிரிழைக் கீறல். அது கொடுத்த வலி தாங்காமல் மருத்துவமனையில் சேர்ந்து விட்டார். இதற்கு சிகிச்சை என்பது வலியை மறக்கடிக்கும் மாத்திரைகளைவிட ஆடாமல், அசையாமல் படுத்து ஓய்வெடுப்பதுதான். சில நாட்கள் சிகிச்சைக்குப் பிறகு தமது குறிஞ்சி அரசு மாளிகைக்குத் திரும்பிய ஸ்டாலினைச் சந்திக்கும் வாய்ப்பு நமக்குக் கிடைத்தது.

''அமைச்சரானவுடன் சுறுசுறுப்பாகப் பணியாற்றிக் கொண்டிருந்தீர்கள். எதிர்பாராமல் நடந்த விபத்து உங்களுக்கு ஓய்வைக் கொடுத்துவிட்டதே'' என்றோம்.

கட்டிலில் சாய்வாகப் படுத்துக் கொண்டிருந்த ஸ்டாலின் ''இப்படியே படுத்தபடி இருந்தால் விரைவில் குணமாகலாம் என்று டாக்டர் சொல்லியிருக்கிறார்'' என்றார். கிடைத்த ஓய்வைப் பயன்படுத்திக் கொண்டு நிறைய புத்தகங்களைப் படித்திருக்கிறார். நாம் சந்திக்கும்போது கி.வீரமணியின் 'வாழ்வியல் சிந்தனைகள்' என்ற புத்தகத்தைப் படித்துக் கொண்டிருந்தார். அவ்வப்போது வரும் அதிகாரிகளிடமும் அமைச்சர்களிடமும் பேசி ஒரு பக்கம் அலுவல்களையும் நடத்திக் கொண்டிருந்தார்.

இப்போது கோட்டைக்குச் சென்று பணிகளைப் பார்க்கத் துவங்கிவிட்டார். இன்னும் ஓரிரு மாதங்களுக்கு, அதிகபட்சமாக ஒரு மணி நேரத்துக்கு மேல் உட்கார்ந்திருக்க வேண்டாம் என்றும் டாக்டர்கள் சொல்லியிருக்கிறார்களாம். கார் பயணத்தைத் தவிர்த்து ரயிலில் பயணம் செய்யலாம் என்றும் அறிவுறுத்தியிருக்கிறார்களாம். மூன்று மாதங்களுக்கு விமானப் பயணத்துக்குக்கூட தடா!

- ப்ரியன்

படம் : ஸ்ரீஹரி

ரூ.250 பரிசு பெறும் போஸ்ட் கார்டு கதைகளின் அணிவகுப்பு...



# அம்மா!

- அகிலா கார்த்திகேயன்

அன்புள்ள கணேசனுக்கு...

அம்மா எழுதுவது. அங்கு வசந்தி, குழந்தைகள் நலமா? இங்கு அப்பா ஆஸ்துமாவால் மிகவும் அவதிப்படுகிறார்.

நிற்க, நேற்று நான் சமையல் வேலை பார்க்கும் மாமி வீட்டில் ஒரு புத்தகத்தைப் புரட்டினேன். அதில் உனது குட்டிக் கதைகள் மூன்று வந்திருப்பதைப் பார்த்ததும் மிகவும் சந்தோஷப்பட்டேன்.

மூன்று கதைகள் தேர்வாகி பிரசுரமாக வேண்டுமென்றால், இருபது முப்பது கதைகளை நீ சிரமப்பட்டு எழுதி அனுப்பியிருக்க வேண்டுமே... அதற்காக ரொம்பவும் கஷ்டப்பட்டாயோ?

உன் கதைகள் வருவது பற்றி எங்களுக்கு எழுதினால் நாங்களும் சந்தோஷப்பட மாட்டோமா? உன்னிடமிருந்து வெகு நாட்களாகக் கடிதமே இல்லை. மாதம் ஒருமுறை இந்த வயதான அப்பா - அம்மாவை விசாரித்து ஒரு வரி கார்டு எழுதினால் ஆறுதலாக இருக்கும்.

- இப்படிக்கு
அன்புள்ள
அம்மா

# நிழலும் நிஜமும்!

- வீ.விஷ்ணுகுமார்



"டேக் ரெடி, சார்!"

"பிச்சைக்காரன் கேரக்டர்ல யாரு நடிக்கறாங்க?"

"ஒரிஜினல் பிச்சைக்காரனையே பிடிச்சிட்டு வந்துட்டோம், சார்."

"வெரிகுட். ரெடி ஆக்ஷன்!" என்றார் இயக்குநர்.

"ஐயா, தர்மம் பண்ணுங்க."

"நான் வெறுக்குற ஒரே வாசகம் இதுதான்! வாழ்க்கையில இச்சை வேணும்! வாழறதுக்காகப் பிச்சை கூடாது! இதுல பத்தாயிரம் ரூபாய் இருக்கு. ஏதாவது ஒரு வியாபாரம் செஞ்சி பிழைச்சிக்கோ!"

"சாமி நீங்க நல்லா இருக்கணும்."

டேக் முடிந்து சேரில் அமர்ந்த நடிகர் வினோத்குமார், புரொடியூசர் வினோத்குமாராய் அவரது உதவியாளரிடம் கேட்டார்: "பிச்சைக்காரன்கிட்ட தந்த பணத்தை ரிட்டர்ன் வாங்கியாச்சா?"

# பொங்கும் கற்பனை!

10.12.2006 இதழில் 'கற்பனையைக் கொட்டுங்கள்' போட்டியை அறிவித்திருந்தோம். அருகிலுள்ள படத்துக்குப் பொருத்தமான கவிதை எழுதி, தலா ரூ.250 பரிசு பெறும் எட்டுப் பேரின் படைப்புகள் இங்கே...

எழும் சூரியனின்
கருணைப் பார்வையால்
இலையுதிர்ந்த மரங்களும்
அழகாய்த் தெரிகிறது
மயில் தோகைபோல!

- எஸ். கோபிநாதன், தஞ்சாவூர்



வெப்பத்தை வாங்கினாலும்
குளிர்ச்சியாக மரம்
தன்னுள்ளே வைத்துள்ளது
சில கோடரிகள்...
சில சிலுவைகள்!

- எஸ். பழனிசேது, திருமானம்

நிலம் கிழித்து நீர் தேடும் வேர்
நிர்வாணக் குளம் தீர்க்கிறது
விருட்சத்தின் தாகம்.
குளத்தின் கருணை கண்டு
தங்கமுலாம் பூசும் காலைச் சூரியன்
விண் தவழும் முகில் பிடிக்க
சந்தோஷ முயற்சி விருட்சம்!


- எஸ். டேனியல், கோவை

கருணையே இல்லாத
இன்றைய மனிதர்போல
இலைகளே இல்லாது
காய்ந்து கிடக்கும்
கருவேல மரங்களைப்
பார்த்து வருந்தி
மறையும் அஸ்தமன சூரியன்

- லலிதா செல்லப்பா, பம்மல்

ஓ... எங்கள்
காலைப் பொழுதே!
நீ ஈரத்தை மட்டும்
சுமந்து வராதே...
ஈகையுடனும் வா...!

- ஏகலைவன்
சேப்பாக்கம்



மரமே!
உனக்கும் தேவைகள்
சில பல உள்ளனவோ?
ஆகையால்தான்
சூரியன் கருணை வேண்டி
தவமிருக்கின்றாயோ...?

- மீனாட்சி சுந்தரம், சிவகாசி

அந்திச் சூரியன் அழகு
உருவாக்கிய கவிதைக்கும்
எனக்கும் நடுவே
கருணையின்றிச் சிந்தின
வடிக்க முடியாத வார்த்தைகள்.


-கே.பி.ஜனா, நாகர்கோவில்

சிறகுகளை உதிர்த்த உதயம்
காடெல்லாம் கிடக்கிறது
இன்னுமொரு ஆகாயம்
கருணையின் அடையாளமாய்...

- க. அம்சப்பிரியா, சமத்தூர்

மைட்ரல் வால்வ் பாதிப்பு குறித்து கடந்த வாரம் பார்த்தோம். இதற்கு வாத, சமனம் செய்கின்ற சிகிச்சைகளான தியானம் செய்தல், மூர்த்த தைலம், மனத்தைக் கட்டுப்படுத்துதல் ஆகியவை நிவாரணமாகக் கூறப்படுகின்றன.

காபி, டீ போன்றவற்றை அருந்தாமல் இருப்பதும் உதவுகிறது. இந்தக் கட்டுப்பாடுகளால் வாதத்தின் நரம்



பியல் செயல்பாடுகள் குறைந்து அட்ரினலின், நார் - அட்ரினலின் போன்ற ஹார்மோன்கள் குறைந்து, படபடப்பு போன்றவை குறைகின்றன. இந்தப் பாதிப்பு உள்ளவர்களுக்கு ஓரிலைவேர் பால் கஷாயமும், வெண் தாமரை சூரணமும், நெல்லிக்காயால் செய்த பிரம்ம ரசாயனமும் பலனளிக்கும்.

இருதய நோயாளிகள் பற்களை நன்றாகப் பாதுகாக்க வேண்டும். புளிப்பான பழங்கள் இருதயத்துக்கு வலுவூட்டும். குறிப்பாக மாதுளம்பழம், நெல்லிக்காய். அம்லம் (நெல்லி) ஹ்ருத்யானாம் என்ற பழமொழியே உண்டு.

இதயத்தின் மீது அக்கறை கொள்பவர்கள், இரவு நேரத்தில் கொழுப்பான உணவுகளைத் தவிர்த்து, நீண்ட நேரம் விழித்திருந்து உணவு செரிக்க அனுமதிப்பது நல்லது. முறையான உடற்பயிற்சி செய்தால் இருதயம் வலுவடையும். இருதய வலிகளுக்குத் தான் வந்தரம் குளிகை ஜீரக வென்னீரில் கொடுத்தால் உடனடி நிவாரணம் தரும். இதைக் கையில் வைத்திருப்பது சிறந்தது.

## எப்போது எச்சரிக்கையாக இருக்க வேண்டும்?

கொழுப்பு ஜீரணமாகாவிட்டால் கபம் பாதிக்கப்பட்டு 'ஸ்ரோதோரோதம்' எனும் இரத்தக் குழாய் அடைப்பு ஏற்பட்டு, இருதயம் சம்பந்தமான நோய்கள் வருகின்றன.



முப்பத்தைந்து வயதுக்கு மேற்பட்ட ஆண்களும், நாற்பது வயதுக்கு மேற்பட்ட பெண்களும் கொழுப்பைப் பற்றிய விழிப்புணர்வோடு இருப்பது நலம்.

குடும்ப உறுப்பினர்களில் யாராவது மாரடைப்பு வந்து இறந்திருந்தாலோ, சர்க்கரை நோயினால் பாதிக்கப்பட்டிருந்தாலோ எச்சரிக்கையோடு இருக்க வேண்டும். மாதவிடாய் நின்ற பெண்களும், உடல் எடை கூடியவர்களும், உடற்பயிற்சி செய்யாதவர்களும் நெய்யை, வெண்ணெயைச் சாப்பிடு

14

வதில் தப்பில்லை. ஆனால் சாப்பிட்டு விட்டுச் சோம்பிக் கிடக்காமல் உடலுழைப்பால் கொழுப்பைக் கரைக்கத் தயாராக இருக்க வேண்டும்; அல்லாவிட்டால் சாப்பிடக் கூடாது!

(தொடரும்)



தன்வந்தரி டாலர் பரிசுப் போட்டி 5-ல், குழந்தைகளுக்குக் கொறிக்கத் தரக்கூடிய ஆரோக்கிய உணவுக் குறிப்பை எழுதி முதல் பரிசாக தன்வந்தரி டாலர் பரிசு பெறுபவர் பி.ஜானகி, பாளையங்கோட்டை.

காராமணி, மொச்சை, பச்சைப் பயறு, கொள்ளு, கொண்டைக் கடலை, காய்ந்த பட்டாணி, வேர்க்கடலை ஆகியவற்றைத் தனித்தனியே 100 கிராம் அளவுக்கு எடுத்து, கனமான வாணலியில் பச்சை

# கொழுப்பைக் கரைக்கத் தயாரா..?

வாசனை போகுமளவுக்கும், நன்கு சிவக்கவும் வறுத்து எடுக்க வேண்டும். பின்பு காய்ந்த மிளகாய், உப்பு, மஞ்சள் கிழங்கு ஆகியவற்றை மைய அரைத்து, பயறு வகைகளின் மேல் தடவி வெயிலில் காய வைத்து ஒரு டப்பாவில் போட்டுக் காற்றுப் புகாவண்ணம் மூடிவிட வேண்டும். இது கோடைக்கும், மழைக்கும் ஏற்ற நல்ல நொறுக்ஸ். நீண்ட நாட்கள் கெடவும் கெடாது. எண்ணெய் இல்லாத பண்டமும்கூட.

குறிப்பு எழுதி இரண்டாவது பரிசாக டாக்டர் எல்.மஹாதேவனின் 'தேவமருந்து' முதல் பாகத்தைப் பெறுபவர் குவளை எழில், விருகம்பாக்கம்.

சுத்தப்படுத்தப்பட்ட நல்ல கேழ்வரகைப் பதமாக வறுத்து, மிக்சியில் நைசாக அரைத்து, மாவைக் கொஞ்சம் நெய்விட்டு வறுத்து, பின்னர் அளவான நீர் ஊற்றி, தேவையான பனை வெல்லம் கலந்து நன்கு கிளறி, அந்தக் கலவையை எடுத்து தோசைக் கல்லில் இட்டு, மெலிதான அடைகளாகத் தட்டிக் கொடுக்கலாம். சுவை, தெம்பு கிடைக்கும். குழந்தைகளும் விரும்பிச் சாப்பிடுவார்கள்.

பரிசுப் போட்டி 6-ல் உணவைக் குறைக்க மனக்கட்டுப்பாடு கையாண்ட



எடை 15 கிலோ குறைந்து நடக்கும்போது காற்றில் மிதப்பது போல் உணர்கிறேன்.

இரண்டாவது பரிசாக டாக்டர் எல்.மஹாதேவனின் 'தேவமருந்து' முதல் பாகத்தைப் பெறுபவர் த.பரதன், திருவாரூர்.

முதலில் சைவ உணவாளராக மாறினேன். அடுத்து புரத, மாவுப் பதார்த்தங்களைக் குறைத்து, நார்ச்சத்து அதிகம் உள்ள காய்கறிகளைக் கூட்டினேன். அடுத்ததாக மிக முக்கியமாக - சாப்பிடும்போது, 'இன்னும் கொஞ்சம் சாப்பிடலாம்' என்று தோன்றும்போதே நிறுத்திக்கொள்வது. இதுவே எனது கைகண்ட அனுபவமாகும்.

# மூச்சுப் பயிற்சியால் பதினைந்து கிலோ எடை குறைந்து விட்டேன்!

அனுபவத்தை எழுதி முதல் பரிசாக தன்வந்தரி டாலர் பெறுபவர் சேதுராமன், மதுரை.

1. மனப்பயிற்சி: உடல் எடையைக் குறைப்பதால் ஏற்படும் நன்மைகளை மனத்தில் தினமும் பலமுறை நினைத்தேன். தேவையற்ற அதிக எடையை தினமும் தூக்கிக் கொண்டு இருப்பதைப் போல் கற்பனை செய்தேன்.

2. நாவடக்கப் பயிற்சி: உப்பு, இனிப்பு, எண்ணெய், நெய், கிழங்கு ஆகியவற்றைத் தவிர்த்தேன். உணவின் இயற்கையான சுவையை நாக்கு உணரும்படிச் செய்தேன்.

3. உடற்பயிற்சி: தினமும் யோகப் பயிற்சியும் நடைப் பயிற்சியும் செய்து வருகிறேன்.

4. மூச்சுப் பயிற்சி: தினமும் நாடிசுத்தி செய்து வருகிறேன். இவற்றால் என்

## தன்வந்தரி டாலர் பரிசுப் போட்டி - 11

இதுவரை வெளியான பதின்மூன்று அத்தியாயங்களின் அடிப்படையில் அசத்தலான கேள்விகளை எழுப்புங்கள். தேர்ந்தெடுக்கப்படும் கேள்விகளுக்கு டாக்டர் **எல்.மஹாதேவன்** பதில் சொல்வதுடன், தலைசிறந்த கேள்விக்கு தன்வந்தரி டாலரும் இரண்டாம் பரிசாக தேவமருந்து முதல் பாகம் நூலும் அளிப்பார்.

கடைசி தேதி: 29.1.2007

ஆசிரியரின் தீர்ப்பே இறுதி

வைகோ

# கட்சியைக் காப்பாற்றிய கதை!

**‘எனது குருவிக் கூட்டைக் காப்பாற்றிவிட்டேன்’ என்று பெருமூச்சுவிட்டவாறு கட்சி அலுவலகத்தைக் காப்பாற்றிய விதத்தை நம்மிடம் விவரித்தார் வைகோ.**



''எனது முல்லைப் பெரியாறு நடைப்பயணத்தில் மதுரையை அடுத்த செக்கானூரணியை நெருங்கும்போது தான் தம்பி நன்மாறன் அந்தச் செய்தியைச் சொன்னார். என்னை விமர்சனம் செய்து எல்.கணேசன் பேசியிருக்கிறார் என்பதுதான் விஷயம். ஈட்டி ஒன்று மார்பை நோக்கிப் பாயும் என்று எதிர்பார்த்துக் கொண்டிருந்த எனக்கு கணேசன் - செஞ்சியார் போர்க்கொடி பெரிய அதிர்ச்சியாகத் தோன்றவில்லை. பத்திரிகையாளர்களிடம் இந்தப் பிரச்னையைப் பற்றிப் பேசாமல் முன்னோக்கி நடந்தவாறு இருந்தேன். சிந்தனைகளோ சிறகடித்தன.

பொடா சிறையில் இருக்கிறேன். உதவியாளர் செய்த தில்லுமுல்லு காரணமாக இணையமைச்சர் பதவியில் இருந்து ராஜினாமா செய்கிறார் செஞ்சி ராமச்சந்திரன். மூன்று மாதங்களுக்குப் பிறகு அவருக்கு மீண்டும் அந்தப் பொறுப்பு கிடைக்கிறது. மீண்டும் என்னைச் சிறையில் சந்திக்கிறார்கள் கணேசனும், செஞ்சியாரும். கணேசன் செஞ்சியாரிடம் 'நீங்க வைகோவுக்குக் காலமெல்லாம் நன்றியோட இருக்கணும் செஞ்சி' என்று உருக்கமாகக் கூறினார். ஜெயில் கம்பிகள்தான் இதற்கு சாட்சி. எங்களைக் குழிதோண்டி புதைக்க நினைக்கிறது தி.மு.க.; ஆனால் ஜெயலலிதாவோ சகோதரப் பாசத்துடன் துணை நிற்கிறார்.

‘மதிமு.க. மூழ்குகின்ற கப்பல். அதோடு சேர்ந்து வைகோவும் மூழ்கி விடுவார்' என்று எங்கள் பாராளுமன்ற உறுப்பினர் கிருஷ்ணனிடம் சொல்லியிருக்கிறார் கணேசன். ஒரு கேப்டனுக்குப் பெருமை என்ன தெரியுமா? கப்பலோடு மூழ்கி வீரமரணம் அடைவதுதான்.



படம் : ஸ்ரீஹரி

1971ஆம் ஆண்டு போரில், அரபிக் கடலில் ரோந்துபோன நமது போர்ப்படைக் கப்பல், பாகிஸ்தான் தாக்குதலால் மூழ்கத் துவங்குகிறது. உயிர் காக்கும் படகுகளில் முடிந்தவரை எல்லோரையும் ஏற்றி அனுப்புகிறார் முல்லா. ஆனால் அவர் வரவில்லை. சேதமடைந்த தீப்பிடித்த கப்பலிலும் சுறுசுறுப்பாக ஓடியாடிக் கொண்டிருந்தார் கேப்டன் முல்லா. இறுதியில் அவர் தப்பிக்கும் முன் கப்பல் மூழ்கியது. முல்லா வீர மரணம் அடைந்து விட்டார். இயக்கத்தைப் பொருத்தவரையில் நான் அந்த மாவீரர் முல்லாவைப் போலவே இருக்க விரும்புகிறேன்.''

- ஸ்ரீநி





தூய பட்டு · சுத்தமான ஜரிகை · திறமிக்க கலைஞர்களின் வடிவமைப்பு





சாந்தத் தறியில் நெய்த பெருஞ்சிறப்பு வியத்தகு ரகங்களின் அணிவகுப்பு

Shop online at www.thechennaisilks.com ISO 9001:2000

# உற்சாக ரஜினி...

'திருவிளையாடல் ஆரம்பம்' படத்தின் வெற்றி தந்த பூரிப்பில் இருந்த இயக்குநர் பூபதி பாண்டியனிடம் பேசப் பேச, அலட்டல், ஆர்ப்பாட்டமின்றி இயல்பாக வருகின்றன பதில்கள்...



'திருவிளையாடல் ஆரம்பம்' இந்தளவு பெரிய கமர்ஷியல் ஹிட் ஆகும் என்று எதிர்பார்த்தீர்களா?

"படம் வெற்றியடையும் என்ற நம்பிக்கை எனக்கும், எங்கள் யூனிட்டுக்கும் இருந்தது. ஆனால் இவ்வளவு பெரிய வெற்றியை எதிர் பார்க்கவில்லை; எதிர்பார்க்காததை எதிர் பாராத சமயத்தில் நடப்பதுதானே வாழ்க்கை!"

படத்தில் 'மிஸ்டர் பாரத்' பாடலை ரீமிக்ஸ் பண்ண வேண்டிய அவசியம் என்ன? அதே பாடல் சூழ்நிலைக்கு இன்றைய பாடலாசிரியர்கள் நல்ல பாடலைக் கொடுத் திருக்க மாட்டார்களா?

"இப்படியொரு சூழ்நிலையைச் சொல்லி பாடலாசிரியரிடம் 'மிஸ்டர் பாரத்'தில் வந்த 'என்னம்மா கண்ணு' மாதிரியான பாடல் வேண்டுமென்று கேட்டேன். அதற்கு 'அப்படி யொரு பாடலை எழுதினால், அந்தப் பாடல் மாதிரி இது என்றுதான் சொல்வார்கள். அதற்கு அந்தப் பாடலையே வைத்துவிட்டால் என்ன?' என்று கேட்கவே, அந்தப் பாட லையே வைத்தோம். எதிர்பாராத அள வுக்கு இந்தப் பாட்டு வரவேற்பைப் பெற்றிருக்கிறது."

தமிழ் சினிமாவில் பெரிய நடிகர்களின் சம்பளம் ஒரு பெரும் பிரச்னை. அவர்களுக்குக் கதை பண்ணுவதைவிட, கதைக்கு ஏற்ற நடிகர்களை உருவாக் கலாமே...

"வருஷத்துக்கு நூறு படம் வருதுன்னா அதுல அறுபது சதவிகித படங்கள் கமர் ஷியலா இருந்தாத்தான் 'சேது', 'காதல்', 'வெயில்' மாதிரி கலையம்சம், கதையம்சம் மிக்க படங்கள் எடுபடும். கமர்ஷியலுக்குப் பெரிய நடிகர்கள் அவசியம். அதனாலதான் அவங்களை நாடிப் போறோம். தேவைப் பட்டா கதைக்கேத்த நடிகர்களையும் உரு வாக்குவோம்."

தனுஷை வைத்துத் தொடர்ந்து இரண்டு






புல்லரிக்க வச்சுட்டார். ஒரே கலாட்டாதான் போங்க!"

**தமிழில் தடம் பதிக்கும் எண்ணம் இல்லையா? ரொம்ப லைட்டாகப் படம் பண்ணுகிறீர்களே...?**

"ஒவ்வொருத்தருக்கும் ஒரு ஸ்டைல் இருக்கு. அதுக்குத் தகுந்த மாதிரி படம் பண்றாங்க. என்னோட இயல்புப் படி நான் இருக்கேன். ஆடியன்ஸோட சந்தோஷம்தான் என் டார்கெட். அதை கரெக்டா செஞ்சா போதும்."

**அடுத்த படம்...?**

"பேச்சுவார்த்தை நடந்து கொண்டிருக்கிறது. அந்தப் படமும் நிச்சயமாக குடும்பமாக எல்லாரும் வந்து பார்க்கும் ஜாலியான கமர்ஷியல் படமாகத்தான் இருக்கும்."

•

# உருகிய தனுஷ்...!

ஆ.முத்துராமலிங்கம்

படம்: பொள்ளாச்சி சுந்தரம்

## - திருவிளையாடல் கலாட்டா

**படங்கள் பண்ணிவிட்டீர்களே...?**

"தனுஷ்கூட வேலை செய்வது எப்போதும் சந்தோஷமான அனுபவம். ஒரு ஃப்ரேமுக்கு நான் எதிர்பார்ப்பதை விட இரண்டு மடங்கு அதிகமான நடிப்பைத்தான் எப்போதும் அவர் வெளிப்படுத்துவார். எந்த மெண்ட்டல் டார்ச்சரும் கொடுக்க மாட்டார்."

**மாப்பிள்ளை படத்தைப் பார்த்துவிட்டு, மாமா என்ன சொன்னார்?**

"யார் ரஜினி சாரா? படம் பார்த்துட்டு ரொம்ப இம்ப்ரஸ் ஆயிட்டார். முடியற வரைக்கும் அவர் சிரிப்பு ஓயல. என்னையும் தனுஷ் சாரையும் ரொம்பப் பாராட்டினார். ரெண்டு பேரும் உருகிட்டோம். 'நான் உங்க ரசிகன் சார்'னேன். 'இனி நான் உங்க ரசிகன்'னு என்னை



அபிராமி பட்டர் அம்பாளைப் பாடுகையில், 'நீயும் நின் கணவரும் என்னாளும் என் புத்தி பொருந்துகவே' என்று வேண்டுகிறார். அதோடு சேர்த்து, 'நீயும் நின் கணவரும் **உங்கள் திருமணக் கோலமும்**' என்று குறிப்பிட்டுச் சொல்லுவார்.

அன்றைக்கு அவருக்கு ஒரு சிக்கல் - நிலா வர வேண்டும் - வானத்தில் - அன்று பௌர்ணமி என்று அரசனிடம் சொல்லி விட்டார்; ஆனால் திதியோ அமாவாசை. சொன்னதை நிரூபிக்க நிலா வராவிட்டால் அவர் வாழ்க்கையே கேள்விக்குறிதான். அப்படிப்பட்ட சூழலிலும் அவர் "நீ என்னை இந்தக் கஷ்டத்திலிருந்து காப்பாற்று" என்று கேட்கவில்லை.

"நீயும் உன் கணவரும் என் புத்தி பொருந்துகவே, உங்கள் திருமணக் கோலமும் காட்டி" என்றார்.

அகஸ்தியர் கேட்டார் என்று சொல்லுவோமே... வட திசையில் பார்வதி கல்யாணத்தைக் காண மூவுலகமும் கூடியதால் பூமியே சரிந்துவிட, அகஸ்தியர் தென் திசை நோக்கிச் சென்று பூமி எடையைச் சமன்படுத்த வேண்டியிருந்ததாம். அப்போது அங்கேயே அத் திருமணக் காட்சியைத் தாம் காண வேண்டும் என்று கேட்டாராம். அபிராமி பட்டர் காணக் கேட்டது அந்தத் திருமணக் காட்சியை அல்ல.

திருமணக் கோலம் என்று பட்டர் குறிப்பிட்டது சிவ - சக்தி ஐக்கிய ஸ்வரூபத்தைத்தான். நிர்க்குண பிரம்மமும் ஸகுண பிரம்மமுமாக ஒன்றியிருக்கிற நிலை. இந்த பேரானந்த நிலையானதை தியானத்தின் மூலம் யோகத்தின் மூலம் ஒரு ஜீவாத்மா தனக்குள்ளேயே எய்த முடியும். இதைத்தான் அபிராமி பட்டர் கேட்டார்.

அம்பாளை எப்போதும் எங்கே கொலு வைக்க வேண்டும் என யோக சாஸ்திரம் சொல்கிறது என்றால், குண்டலினியை எழுப்பி எழுப்பிக் கொண்டு போய் ஸஹஸ்ரார கமலத்தில் இருக்கக் கூடிய பரம்பொருளோடு ஐக்கியப்படுத்த வேண்டும் - இவ்வாறு ஐக்கியப்படுத்துவதே அம்பாளைக் கொலு வைக்கிற நிலை - இடம்.

ஆற்றல் என்று சொல்கிறோமே "எனக்கு சக்தியே இல்லை" என்றும் "ஒன்றுமே முடியவில்லை" என்றும் சொல்கிறோமே... கடையிலே போய் இரண்டு கிலோ சக்தியோ இரண்டு லிட்டர் எனர்ஜியோ வாங்கிவிட முடியுமா?!

## குரு முகமாக


சக்தி அல்லது ஆற்றல் என்பது வெளியிலிருந்து வருவதல்ல. உள்ளுக்குள்ளேயிருந்துதான் வந்தாக வேண்டும். இதைத்தான் தந்திர சாஸ்திரம் 'குண்டலினியை எழுப்புதல்' என்று குறிப்பிடுகிறது. இந்தச் செயல் எல்லோரும் செய்யக்கூடியது அல்ல. மந்திர பூர்வமாக, குருமுகமாகத்தான் பண்ண முடியும்.

ஒரு புத்தகத்தைப் படித்து வயலின் வாசிக்கக் கற்றுக் கொள்ள முடியாது. குரு அல்லது ஆசார்யர் பாடிக்காட்டும்போதுதான் அந்த ஸ்வர ஸ்தானங்கள் நன்றாகப் புரியும். அதே மாதிரிதான் குண்டலினியை எழுப்புவது என்பதும் ஆசார்யர் உபதேசம் பெற்றால்தான் முடியும்.

ஆனால் அதனுடைய தாத்பர்யம் என்னவென்று நாம் யோசிக்கலாம். குண்டலினி என்பது நமக்குள்ளே பாம்பு மாதிரி சுருண்டு இருக்கக்கூடிய ஆற்றல்.

# அமுதக் கடலில் அன்னை! 19

# சுதா சேஷய்யன்



ஸ்ரீஞானப் பூங்கோதை
திருக்காளத்தி

மூலாதாரத்தில் இருக்கிறது அது. மூலாதாரம் என்பது முதுகுத் தண்டுவடத்தின் கீழ்ப்பகுதி.

ஏன் இந்த சக்தி பாம்பாகச் சுருண்டு கிடக்கிறது என்றால், எந்த ஆற்றலுமே நிறைய இருக்கிறபோது அதை அப்படியே வளைத்து, சுருள் (coil) வடிவத்தில் வைப்பதுண்டு. அப்படி பாம்பு போல் சுருண்டு



வளைந்து காணப்படும் ஆற்றலை, கொஞ்சம் கொஞ்சமாக முறைப்படி எழுப்பி, உடலில் உள்ள பலவிதமான ஆதார சக்கரங்களில் எல்லாம் செலுத்தி, ஏற்றிக்கொண்டே வந்து, கடைசியில் ஆயிரம் தள தாமரை வடிவத்தில் காணப்படுகிற **ஸஹஸ்ரார பத்மத்தில்** கொண்டு நிறுத்த வேண்டும். அதற்கும் மேலே பரமாத்மா வீற்றிருக்கிறது. அம்பாளின் ஆற்றலைக் கொண்டு போய் அங்கே சேர்த்து ஐக்கியப்படுத்த வேண்டும். அப்படி ஐக்கியப்படுத்தினால், ஜீவனும் பரமனும் ஒன்றாகச் சேர்கிற ஆனந்த நிலைமை ஸ்புரிக்கிறது. அதற்காகத்தான் அபிராமி பட்டர் 'நீயும் நின் கணவரும், உங்கள் திருமணக் கோலமுடன்' என்று குறிப்பிட்டார்.

## ஆயிரம் தள தாமரை

அந்த ஸஹஸ்ரார பத்மம் தான் **மஹாபத்ம அடவி ஸம்ஸ்திதா** என்ற திருநாமத்தில் குறிப்பிடப்படுகிறது.

மஹாபத்மம் என்றால் பெரிய தாமரை - ஆயிரம் தளங்களையுடையது. அது எவ்வளவு பெரிதாக இருக்கும்! முப்பது அல்லது நாற்பது இதழ்களை உடைய ஒரு தாமரையே பெரிதாக இருக்கிறதென்றால் ஆயிரம் இதழ்களைக் கொண்ட தாமரை எவ்வளவு பெரியது! அந்த மஹா பத்ம அடவியில் இருக்கக்கூடியவள் அம்பாள்.

அவள் **கதம்ப வன வாஸினியாகவும்** இருக்கிறாள். **சுதா ஸாகர மத்யஸ்தாவாகவும்** இருக்கக் கூடியவள். சுதா ஸாகரம் என்றால் அமுதக்கடல்.

ஸ்ரீபுரம் என்று சொன்னோமல்லவா? அந்த ஸ்ரீபுரமே சுதா ஸாகரத்துக்கு

நடுவிலே இருப்பதாக ஒரு வர்ணனை உண்டு.

அம்பாளே அந்த அமுதத்தைப் பொழிகிறாள் என்று ஐதிகம். ஆயிரம் தளமுடைய தாமரை - தாமரைக்கு மேலே நிலவாக இருக்கக்கூடியவள் அம்பாள். அவ்வாறு நிலவாக இருந்தபடி அமுதக் கிரணங்களைப் பொழிகிறாள். அப்படி அவள் பொழிவது தான் 'சுதா ஸாகரம்' என்கிற அமுதக் கடல்.

## அமுதக்கடல்

அவரவர் மனத்துக்குள்ளே அந்தக் காட்சியைக் கொண்டுவந்து நிறுத்திக் கொண்டால் விஷயம் இன்னும் தெளிவாக இருக்கும்.

ஆயிரம் தளமுடைய தாமரை. அதன் மேலே முழு நிலவு. மரபில் என்ன சொல்லப்படுகிறது, சாதாரணமாக...? நிலவு அமுதத்தைப் பொழிகிறது என்று சொல்லப்படுகிறது. 'அமுதைப் பொழியும் நிலவே' என்று திரைப்பாடல்கூட உண்டு.

நிலாவுக்கே சுதாகரன் என்று ஒரு பெயர் உண்டு (சுதா - அமுதம்). ஹிமகரன் என்றும் ஒரு பெயர் உண்டு. ஹிமகரன் என்றால் பனியை - குளிர்ச்சியைப் பொழியக் கூடியவன்.

அம்பாள் என்னவாக இருக்கிறாளாம்... ஆன்மாவின் ஆற்றலை நாம் ஸஹஸ்ரார பத்மம் வரையிலே கொண்டுபோய் நிறுத்துகிறோமல்லவா அதற்கு மேலே நிலவாக நின்று கொண்டு அவள் அமுதைப் பொழிகிறாளாம். அப்போது ஆன்மாவைச் சுற்றி அமுதக்கடல் தவழ்கிறது. ஆன்ம ஆற்றலானது அந்த அமுதக்கடலிலே மூழ்கிக் கிடக்கும்போது, அம்பாளை முழுக்க முழுக்க அனுபவிக்கக்கூடிய ஆனந்த நிலைமை வரும்.

## பட்டரின் அனுபவம்

இந்த நிலைமைக்குப் போனவர்தான் அபிராமி பட்டர். தை அமாவாசை தினத்தை அவர் பௌர்ணமி என்று கூறுகிறார் என்றால், அவர் தியானத்தில் அமர்ந்து, ஆன்ம ஆற்றலைக் கொண்டு போய் ஸஹஸ்ரார பத்மத்தில் நிறுத்தியிருக்கிறார். அப்படி முழுமையாய் நிறுத்திய சமயத்தில் அம்பாள் நிலவென அமுதைப் பொழிய, அந்தக் கடலில் மூழ்கியிருக்கிறபோது அவருக்கு முன்னால் முழுக்க முழுக்க அம்பாள் தெரிகிறாள்! அதனால்தான் 'என்ன திதி?' என்று கேட்டதற்கு, "இன்று பௌர்ணமி" என பதில் சொல்லியிருக்கிறார்.

இது அபிராமி பட்டருக்கு ஏற்பட்ட உயர்நிலை என்றாலும் ஒவ்வோர் ஆன்மாவும் அம்பாளை தியானிக்க தியானிக்க, இத்தகைய நிலைமைக்கு உயர முடியும். அதைக் காட்ட வந்த திருநாமம்தான் சுதாஸாகர மத்யஸ்தா.

**ஒவ்வோர் ஆன்மாவும் அம்பாளை தியானிக்க தியானிக்க, இத்தகைய நிலைமைக்கு உயர முடியும்.**

பெரிய அமுதக் கடலின் நடுவே அம்பாள் வீற்றிருக்கிறாள் என்றும் இந்தத் திருநாமத்துக்குப் பொருள் கொள்ளலாம்; அல்லது, அமுதக் கடலிலே நம்மைக் கொண்டு போய்ச் சேர்க்கக் கூடிய ஸஹஸ்ரார பத்மத்தில் வீற்றிருக்கிறாள் என்றும் கொள்ளலாம்.


இதுவரையிலான திருநாமங்கள் அம்பாளின் ஸ்வரூப வர்ணனையாகவும் அவள் எங்கெல்லாம் வீற்றிருக்கிறாள் என்று கூறுவனவாகவும் அமைந்தன. அதற்கப்புறம் வரக்கூடிய 22 திருநாமங்கள், அம்பாளுடைய திருவவதாரத்தைப் பற்றிப் பேசக்கூடிய திருநாமங்கள்.

ஆரம்பத்திலேயே தேவ கார்ய ஸமுத்யதா என்று ஒரு நாமம் வந்து விடுகிறது.

தேவர்களின் காரியத்தை நிறைவேற்றத் தான் அம்பாள் திருவவதாரம் எடுத்தாள். அவள் எப்படியெல்லாம் அந்தத் திருவவதாரத்தை நிறைவேற்றிக் கொடுத்தாள் என்பதைத்தான் 64ஆம் திருநாமம் தொடங்கி 84ஆவது திருநாமம் வரையில் இருக்கக்கூடிய செய்திகள் சொல்கின்றன.

(தொடரும்)

# சுஜாதா





# காற்றினிலே வரும்...

நல்ல சங்கீதம் கேட்கும்போது நம் அத்தனை செயல்பாடுகளும் நின்று போகக் கூடிய ஓர் அமானுஷ்யமான அமைதியை எப்போதாவது வாழ்வில் நிச்சயம் அனுபவித்திருப்பீர்கள். ஊரெல்லாம் உறங்கி இரவின் மௌனத்தில், தூரத்தில் ஒரு குழலோசை கேட்கிறது. அதைக் கேட்டதும் மெய்மறந்து, செய்யும் காரியங்கள் அனைத்தையும் நிறுத்தி விடுகிறோம். எங்கிருந்து வருகிறது அந்தக் குழல் ஓசை? சுற்றிலும் அத்தனையும் ஸ்தம்பித்து விடுகின்றன. மரங்களில் இலை அசைவதுகூட நின்று போகிறது. மரங்களிலிருந்து தேன் தன்னிச்சையாக வடிகிறது. மலர்கள் எல்லாம் உதிர்ந்து விடுகின்றன. மரக்கிளைகள் தாழ்கின்றன. அந்தக் கிளைகள் கைகூப்பி வணங்குவதைப் போல சேர்ந்து கொள்கின்றன. அந்தக் குழலோசை வரும் திசை நோக்கி இயற்கையே திரும்புகிறது. அந்தக் குழலை ஊதுவது யார்? கண்ணன். பெரியாழ்வாரைப் போல கண்ணனின் மேல் ஈடுபாடு கொண்டவர் யாருமே இல்லை. கண்ணன் குழல் ஊதுவதை அவர் வர்ணிக்கும் இந்தப் பாடலைப் படிக்கும் உங்களுக்கும் காற்றில் அந்த கீதம் நிச்சயம் கேட்கும்.

'கருங்கண் தோகை மயிற்பீலி யணிந்து
கட்டி நன்கு(உ)டுத்த பீதக ஆடை
அருங்கல உருவின் ஆயர் பெருமான்
அவன்ஒருவன் குழல்ஊதின போது
மரங்கள் நின்று மதுதாரைகள் பாயும்
மலர்கள் வீழும் வளர்கொம்புகள் தாழும்
இரங்கும் கூம்பும் திருமால் நின்றநின்ற
பக்கம் நோக்கி அவை செய்யும் குணமே'

(பீலி - இறகு, பீதக ஆடை - பீதாம்பரம், அருங்கலம் - அருமையான ஆபரணங்கள், இரங்கும் - உருகும், கூம்பும் - குவியும்)

மயிலிறகும் கட்டி உடுத்த பட்டாடையும் அருமையான நகைகளும் அணிந்த கண்ணன் குழலூதும்போது பூமி சுழல்வதை சற்று நேரம் நிறுத்தி விடுகிறது!



(படிக்கலாம்)



# உலக சாம்பியன் உதயம்?

ஐம்பது நாடுகள் கலந்துகொண்ட சர்வதேச பளு தூக்கும் போட்டியில் சப்-ஜூனியர் பிரிவில் எட்டாவது இடத்தைப் பெற்றிருக்கிறார் பட்டுக்கோட்டை பள்ளத்தூரைச் சேர்ந்த ஆதி.உதயம். இவர் ப்ளஸ் - ஒன் மாணவி.

"சின்ன வயசுல உடம்பு எடையைக் குறைப்பதற்காக ஜிம்முக்குப் போனேன். அப்போ அங்கே வெயிட் லிஃப்டிங் ப்ராக்டீஸ் பண்றவங்களப் பார்த்து எனக்கும் ஆசை வந்தது. உடனே ட்ரைப் பண்ணிப் பார்த்தேன். லிஃப்ட் பண்ண முடிஞ்சது. கொஞ்ச கொஞ்சமா வெயிட் ஏற்றி, லிஃப்ட் பண்ணிப் ப்ராக்டீஸ் பண்ணினேன்.

திருச்சியில் 2001-ல் மாநில அளவிலான சப்-ஜூனியர் பிரிவில் நூற்றுப்பத்து கிலோ தூக்கும் போட்டியில் கலந்துக்கிட்டு, வெண்கலப் பதக்கம் வென்றேன். அந்த வருஷமே தஞ்சாவூர்ல நடந்த மாவட்ட அளவிலான ஜூனியர் பிரிவில் கலந்துக்கிட்டு தங்கப்பதக்கம் ஜெயிச்சேன். அதுக்கப்புறம் நெறைய தங்கங்கள் சொந்தமாச்சு. அதன் காரணமாக 'பவர் லிஃப்டிங் ஃபெடரேஷன் ஆஃப் இண்டியா' தேசிய அளவிலான போட்டிகளுக்கு என்னைத் தேர்வு செய்து அனுப்பியது. ஜாம்ஷெட்பூர்ல நடந்த தேசிய அளவிலான போட்டியில் முதல் பரிசைத் தட்டி, தேசிய அங்கீகாரத்தைப் பெற்றேன். உலக சாம்பியன் ஆகறதுதான் என்னோட கனவு" என்று சந்தோஷம் பொங்கக் கூறும் ஆதி. உதயத்தின் அப்பா ஆத்மநாதன், வருத்தமான ஒரு விஷயத்தையும் சொன்னார்.

"2004-ல் தென் ஆப்பிரிக்காவில் நடந்த சர்வதேச பெண்கள் பளு தூக்கும் போட்டியில் கலந்துகொள்ள பல இலட்சங்கள் தேவைப்பட்டன. ஒரு பிரபல தொழிலதிபர் கிட்டேயும், வணிகர்கிட்டேயும் உதவி கேட்டேன். அவங்களும் சம்மதிச்சாங்க. ஆனா நான் என்ன சமூகத்தைச் சேர்ந்தவங்கறதை விசாரிச்சுட்டு உதவி பண்ணாம விட்டுட்டாங்க.

2006-ல் நடந்த போட்டிக்குப் போக, தமிழக கவர்னர் சுர்ஜித்சிங் பர்னாலாவும், மாவட்ட கலெக்டர், இந்தியன் ஓவர்சீஸ் வங்கி மூலமாவும் உதவினாங்க. அப்புறம்தான் நார்வேயில் நடந்த போட்டிக்கு என் பொண்ணு போக முடிஞ்சது" என்றார் ஆத்மநாதன், கண்களில் நன்றி பொங்க.



* கவர்னர் பர்னாலாவுடன் ஆத்மநாதன், ஆதி.உதயம்...

**- ஸ்ரீரங்கம் திருநாவுக்கரசு**

# நடக்குமென்பார் நடக்கும்

## 21.1.2007 முதல் 27.1.2007வரை

**மேஷம் :** சிறப்பான வாரம். கல்வி வளம் மேலோங்கும். நண்பர், உறவினர்களின் மூலம் அனுகூலம் ஏற்படும். திருமணம் கைகூடும். வேலைப் பளு அதிகரிக்கும். கொடுக்கல் வாங்கலில் சிக்கல் தீரும். குழந்தைப் பாக்கியம் உண்டாகும். வியாபாரத்தில் நல்ல அபிவிருத்தி ஏற்படும். உடல் ஆரோக்கியம் சீராகும். குரு / சனி / ராகு / கேது வழிபாடு செய்து வர, நற்பலன் கிடைக்கும்.

**ரிஷபம் :** அற்புதமான வாரம். பரிசு பொருட்கள் கிட்டும். வராத பணம் கைக்கு வந்து சேரும். உடல் ஆரோக்கியம் நன்றாக இருக்கும். புதிய சொத்து வாங்க நல்ல காலம். திருமணம் கைகூடும். கல்வி வளம் மேலோங்கும். வாகன வசதி பெருகும். ராகு / கேது வழிபாடு செய்து வர நற்பலன் ஏற்படும்.

**மிதுனம் :** மேன்மையான வாரம். ஆடை ஆபரண அலங்காரப் பொருட்கள் வாங்குவீர்கள். திருமணம் கைகூடும். உடல்நிலை நன்றாக இருக்கும். உத்தியோகத்தில் உயர்வு கிட்டும். வியாபாரத்தில் நல்ல அபிவிருத்தி ஏற்படும். கொடுக்கல், வாங்கலில் சிக்கல் தீரும். எதிர்பார்க்கும் காரியம் கைகூடும். குரு / சனி வழிபாடு செய்துவர, நற்பலன் கிட்டும்.


**கடகம் :** நற்பலனை அள்ளித் தரும் வாரம். சுப நிகழ்ச்சிகள் கைகூடும். சொத்து வாங்க நல்ல தருணம். வாக்கு வன்மை மேலோங்கும். உடல் நிலையில் கவனம் செலுத்தவும். வேலைப் பளு அதிகரிக்கும், கல்வி வளம் வளர்ச்சி அடையும். வியாபாரத்தில் நல்ல முன்னேற்றம் ஏற்படும். ராகு / கேது / சனி வழிபாடு செய்து வர நற்பலன் நடக்கும்.

**சிம்மம் :** நல்ல யோகமான வாரம். எதிர்பாராத பண உதவிகள் கிட்டும். உடல்நிலை நன்றாக இருக்கும். படிப்பில் முன்னேற்றம் கிட்டும். வேலையில் முன்னேற்றம் காணும். வியாபாரத்தில் அபிவிருத்தி ஏற்படும். தடை விலகித் திருமணம் கைகூடும். கடன் தொல்லை நீங்கும். நண்பர் உறவினர் ஆதாயம் கிட்டும். எண்ணங்கள் யாவும் ஈடேறும். ராகு / கேது / குரு / சனி வழிபாடு செய்து வர நற்பலன் கைகூடும்.

**கன்னி :** மனமகிழ்ச்சி தரும் வாரம். வெளிநாட்டுக்குச் செல்லும் வாய்ப்பு வந்து சேரும். திருமணக் காரியம் கைகூடும். கல்வி வளம் மேலோங்கும். வியாபாரத்தில் நல்ல முன்னேற்றம் ஏற்படும். குழந்தை பாக்கியம் கிட்டும். சொத்து / மனை வாங்க நல்ல தருணம். பூமி மூலம் ஆதாயம் கிட்டும். மன தைரியம் மிகுந்து காணப்படும். குரு வழிபாடு செய்து வர நற்பலன் கிட்டும்.

**துலாம் :** எண்ணங்கள் யாவும் ஈடேறும் வாரம். வீடு / மனை வாங்க நல்ல தருணம். பூர்வீக சொத்து பாகப்பிரிவினை ஆகும். திருமணக் காரியம் கைகூடும்.

# தஞ்சை பரத்வாஜ்



புதிய தொழில் முயற்சி கைகூடும். வேலையில் பதவி உயர்வு, இடமாற்றம் ஏற்படும். மனத்தில் உற்சாகம் ஏற்படும். ராகு / கேது / சனி வழிபாடு செய்துவர நற்பலன் உண்டாகும்.

**விருச்சிகம் :** நல்ல யோகமான வாரம். கல்வி வளம் மேலோங்கும். வெளிநாட்டுப் பிரயாண வாய்ப்பு வந்து சேரும். சொத்துகள் வாங்க நல்ல தருணம். மனத்தில் உற்சாகம் ஏற்படும். உத்தியோகத்தில் நற்பெயர் ஏற்படும். திருமணக் காரியம் கைகூடும். ராகு / கேது / குரு வழிபாடு செய்துவர நற்பலன் கிட்டும்.

**தனுசு :** சுபகாரியம் கைகூடும் வாரம். மனச்சலனம் விலகும். உடல் ஆரோக்கியமாக இருக்கும். உத்தியோகத்தில் நல்ல முன்னேற்றம் ஏற்படும். பணக்கஷ்டம் விலகும். குழந்தைகளால் மகிழ்ச்சி கிட்டும். நண்பர், உறவினர் ஆதாயம் கிட்டும். வராத பணம் கைக்கு வந்து சேரும். கல்வி வளம் மேலோங்கும். குரு / சனி வழிபாடு செய்துவர நற்பலன் ஏற்படும்.

**மகரம் :** திருமணம் கைகூடும் வாரம். எதிர்பாராத பிரயாண வாய்ப்பு வந்து சேரும். பூமி மூலம் ஆதாயம் கிட்டும். சொத்து வாங்க நல்ல தருணம். மாணவர்கள் கவனமுடன் படிக்கவும். குழந்தை பாக்கியம் கிட்டும். பணவசதி பெருகும். வியாபாரத்தில் நல்ல அபிவிருத்தி ஏற்படும். ராகு / கேது /சனி வழிபாடு செய்து வர நற்பலன் உண்டாகும்.

**கும்பம் :** மனக் குழப்பம் தீரும் வாரம். வேலைப் பளு அதிகரிக்கும். சுபகாரியம் கைகூடும். கல்வி வளம் மேலோங்கும். உடல் ஆரோக்கியம் சீராகும். சொத்துகள் வாங்க நல்ல தருணம். கொடுக்கல் வாங்கலில் / சிக்கல் தீரும். குழந்தைகளால் மன சந்தோஷம் ஏற்படும். ராகு / கேது / குரு வழிபாடு செய்து வர நற்பலன் ஏற்படும்.

**மீனம் :** மகிழ்ச்சிகரமான வாரம். எண்ணிய காரியம் கைகூடும். வீடு / மனை வாங்க நல்ல தருணம். திருமணக் காரியம் கைகூடும். வியாபாரத்தில் வளர்ச்சி ஏற்படும். புதிய முயற்சி கைகொடுக்கும். வெளிநாட்டு அழைப்பு கிட்டும். கல்வி வளம் மேலோங்கும். நண்பர் உறவினர் அனுகூலம் ஏற்படும். நீண்ட கால கடன் தொல்லை தீரும். உடல் ஆரோக்கியம் நன்றாக இருக்கும். மேல்நாடு சென்று கல்வி கற்கும் யோகம் கிட்டும். ஆஞ்சநேயர் வழிபாடு செய்துவர, நற்பலன் கிட்டும்.

# பரத்வாஜ் பதில்கள்

**என் மகளுக்கு எப்போது குழந்தை பிறக்கும்?**

**- பி.ஸ்ரீநிவாஸ ராகவன், கூத்தப்பாக்கம்**

உங்கள் மகளுக்கு 2007-ல் குழந்தை பிறக்கும். புனர்பூசம், விசாகம், பூரட்டாதி இவற்றுள் ஒரு நட்சத்திரத்தில் ஆண் குழந்தை பிறக்கும்.

**எனக்குத் திருமண வாய்ப்பு தட்டிச் செல்கிறது? எப்போது நடைபெறும்?**

**- எம்.டி.பிரசாத், லால்குடி**

தங்களுக்கு 2007-ல் திருமணம் நடக்கும். படித்த, வேலையில் உள்ள, அழகான பெண் அமைவாள். சர்ப்ப தோஷம் உள்ள வரனாகப் பார்க்கவும்.

**எனது மகளுக்கு கடந்த மூன்று வருடங்களாக வரன் பார்த்து வருகிறோம். அவளுக்குத் திருமணம் எப்பொழுது நடக்கும்?**

**- எஸ்.செல்வம், அருப்புக்கோட்டை**

உங்கள் மகளுக்கு 2007-ல் திருமணம் நடக்கும். சர்ப்பதோஷம் உள்ள ஜாதகமாகப் பார்க்கவும். உடன் பிறப்பு ஒருவர் உள்ள, நல்ல படித்த, பண்புள்ள, வேலையில் உள்ள பையன் அமைவான்.

# கொசு


**வ**ட்டச் செயலாளர் தூங்கி விழித்த போது மணி மூன்றாகியிருந்தது. அவரைப் பார்ப்பதற்கு முத்துராமன் வந்திருப்ப தாகப் பையன் வந்து சொன்னான். 'இப்ப நான் எங்கே இருக்கேன்?' என்று தனக் குள்ளே கேட்டுக்கொண்டார். தூங்கி எழும்போதெல்லாம் வந்துவிடுகிற குழப் பம் இது! யாரும் கேட்பதற்கில்லை என்கிற சுதந்திரத்தில், வயசுக் காலத்தில் கையில் புரளத் தொடங்கியிருந்த காசு கொடுத்த தன்னம்பிக்கையில், தன் வாழ்வில் அவர் செய்துகொண்ட புதிய ஏற்பாடு, தொடக்கத்தில் நம்பிக்கையளிக் கும் விதத்தில்தான் இருந்தது. தொழில் சிறந்த காலம் அது. சைதாப்பேட்டையின் காய்கறி மார்க்கெட் அநேகமாக அவரது முழுக் கட்டுப்பாட்டில் இருந்தது. ஓடுகிற லாரிகளும் இறங்குகிற சரக்குகளை அடுக்கிப் பிரிக்கிற இடமும்தான்.

பஜார் அப்போது பெரிய அளவில் இல்லை. அங்கொன்றும் இங்கொன்றுமா கத் துணிக் கடைகள். வீராச்சாமி முதலியார் நாட்டு வைத்தியக் கடை. பிராந்தியத்தில் ஒரிஜினல் சிட்டுக்குருவி லேகியம் விற்றுக்கொண்டிருந்த ஒரே வியாபாரி. அங்கே அரிசி மண்டி. இங்கே ஒரு பலசரக்குக் கடை. ஒரு ஹோட்டல் திறந்தால் வாடம் இருக்கக்கூடும் என்று வட்டச் செயலாளர் நினைத்தார்.

'அடச்சே சும்மா கெட' என்று அவரு டைய அப்பா சொன்னார். 'நம்மூர்ல ஓட்டல்ல துன்றவன் எத்தன பேரு? ஐயமாருங்க ஏரியா இது. காபி, வடை போடுறியா? செய்யின்னுவேன். ஆனா நம்மாளுங்க, போடுற காப்பிய கழுனித் தண்ணின்னுடுவானுக. திராவகம் மாதிரி ஸ்ட்ராங்கா காபி போடத் தெரிஞ்ச ஆளு ஒருத்தன புடி மொதல்ல. அப்பால ஓட்டல் தொறப்பியாம்.'

ஆனால் வட்டச் செயலாளருக்குத் தன் தந்தையின் கணிப்பு காலம் புரியாதது என்று தோன்றியது. சண்டை போட்டுப் பணம் வாங்கி ரயில்வே ஸ்டேஷனி லிருந்து நூறடி தொலைவில் 'இனிய தமிழ் அசைவ உணவகம்' என்று போர்டு போட்டுக் கடை விரித்தார்.

அப்போது அவர் வட்டச் செயலாளர் இல்லை. வெறும் தொண்டர். இந்தி எதிர்ப்புப் போராட்ட காலத்தில் கோஷமிட்டுக் கொண்டு பெருமான்



கோயில் தெருவுக்குள் போய் அழிப்பதற்கு ஏதேனும் இருக்கிறதா என்று பார்த்தார். ஹிந்தி வாத்தியார் ஒருவரின் வீட்டு வாசலில் இருந்த டியூஷன் போர்டு தவிர வேறெதுவும் கண்ணில் படவில்லை. தவிரவும் தார் கொண்டு அழிக்க அதில் ஏதுமில்லை. தண்ணீர் தெளித்தால் அழியும் சாக்பீஸ் எழுத்துகள். ஆகவே அவர் ஹிந்தி வாத்தி யாரை மட்டும் அடித்துவிட்டு நேரே போலீஸ் ஸ்டேஷன் வாசலுக்குப் போய்த் தயாராக இருந்தார்.

என்ன துரதிருஷ்டம்! தன்னை அடித்த ஒருவன் மீது புகார் கொடுக்க வேண்டுமென்று தோன்றாதா ஒருவ ருக்கு? ஒரு மணி நேரம் காத்திருந்தும் ஹிந்தி வாத்தியார் புகார் கொடுக்க வராத காரணத்தால் சிறை செல்லும் எண்ணம் வீணாகி, துக்கத்தைப் போக்கிக்கொள்ள அன்றிரவு பாரகன் டாக்கீஸுக்குப் போனார். ராஜ்கபூர் நடித்த படம். நர்கீஸும் ராஜ்கபூரும். எத்தனை அருமை யான ஜோடி! இலயித்துப் பார்த்துவிட்டு சைக்கிளில் வீடு திரும்பிவிட்டார்.

# பா.ராகவன்



## 3

பிற்பாடு நிறைய கூட்டங்களில் தோரணம் கட்டி, கைக்காசைச் செலவழித்து உணவுப் பொட்டலங்கள் போட்டு, போஸ்டர் ஒட்டி, தலைவர் வந்தபோது ஓடிச் சென்று புதிய செவனோ க்ளாக் பிளேடால் புறங்கையில் கீறி இரத்தத் திலகமிட்டுப் படிப்படியாக மேலுக்கு வந்தார். பேசத் தெரிந்திருந்தது– உணர்ச்சி கொப்பளிக்க; நரம்புகள் புடைக்க; கண்களில் நீர் மல்க. அவரை வட்டச் செயலாளராகக் கட்சி மேலிடம் நியமித்தபோது, காய்கறி மார்க்கெட்டில் அவர் தனக்கெனத் தனியிடம் பிடித்திருந்தார்.

எப்போதுமே முதலில் தொடங்குகிற எதுவும் எப்படியோ ஜெயித்துவிடுகிறது. காய்கறி மார்க்கெட்டுக்கென்றே அவர் ஓட்டத் தொடங்கிய லாரிகளைப் போல. பேட்டையின் முதல் அசைவ உணவக


மாக அவர் தொடங்கிய இனிய தமிழைப் போல. மகன் தேறிவிட்டான் என்று அவரது தந்தை நிம்மதியாகக் கண்ணை மூடினார். வட்டச் செயலாளர் துணிந்து தன் வாழ்வில் இரண்டாவதாக ஒரு பெண்ணுக்கு இடமளிக்க முடிவு செய்து கிண்டி தொழிற்பேட்டைப் பகுதியிலிருந்து அழைத்து வந்தார்.

'அன்பான மனைவி. ஆசைக்கும் ஆஸ்திக்குமாக இரண்டு பிள்ளைகள். 'அப்புறமெதற்கு இரண்டாவது?' என்று தெரிந்தவர்கள் கேட்டார்கள். செயலாளர் யாருக்கும் பதில் சொல்லவில்லை. பிரமாதமான காதலில் விளைந்த திருமணம் இல்லை அது. ஆனாலும் அது ஓர் அவசியம் என்று அவர் நினைத்தார். தவிரவும் பகுதியில் அதற்குமுன் யாரும் இரண்டாவது சம்சாரம் என்று வைத்துக் கொண்டிருக்கவில்லை. வியாபாரத்தைப் போல வாழ்க்கையும் ஒரு புதிய திருப்பம் காணும் என்று அவர் எண்ணியிருந்தார்.

மாறாக, பேட்டையில் அவருடைய செல்வாக்கு பலபேரால் பங்கிடப்படத் தொடங்கியிருந்தது. தொலைவில் தெரியும் லாரியின் முகப்பு விளக்கு மாதிரி இருக்கும். சடாரென்று பாய்ந்து கடந்து போய் விடுவார்கள். என்ன நடந்து கொண்டிருக்கிறது என்றே அவருக்குப் புரியவில்லை. அவர் நீண்ட காலமாக வட்டச் செயலாளராக இருந்தார். அந்தப் பதவிக்குப் பிரச்னை இல்லை. ஆனால் மேலும் மேலும் வளரவிடாமல் தடுப்பது எது? வாழ வந்த முதல் மனைவி, ஆள வந்த இரண்டாமவளை அங்கீகரித்துவிட்டாள். மகன்கள் இருவரும் தலையெடுத்துவிட்டார்கள். தொழில் பெருகியிருக்கிறது. பணம் பெருகியிருக்கிறது. ஆனாலும் கட்சி தன்னை உரிய முறையில் பெருமைப்படுத்தவில்லை என்கிற எண்ணம் மட்டும் அவருக்கு இடைவிடாமல் அரித்துக் கொண்டிருந்தது. ஏதாவது செய்ய வேண்டும்- அத்தனை பேரும் கவனிக்கும் விதத்தில்; கட்சி கொண்டாடும் விதத்தில். அடுத்த தேர்தலிலாவது ஒரு சீட் கிடைக்கிற விதத்தில்.

என்ன செய்யலாம்? தனது அடிப்பொடிகளுடன் அவர் தீவிரமாக ஆராய்ச்சி செய்து கொண்டிருந்தார்- ஒரு வார காலமாக; இரவு பகலாக. சிறியதொரு திட்டம் போலத் தோற்றம் தர வேண்டும். ஆனால் சில மாதங்களாவது இடைவிடாமல் நடந்தாக வேண்டும். பேசப்படத்தக்கதாக இருக்க வேண்டும். தனியொருவனாகத் தான் முன்னின்று வெற்றிகரமாக நடத்தி முடித்துவிட்டுப் பெருமையைத் தலைவரின் காலடியில் சென்று வைத்துவிட வேண்டும். இது உதவும். காலடியில் வைக்கப்படும் பெருமைகளுக்குக் கண்டிப்பாகத் தலைவர் பதில் மரியாதை செய்துவிடுவார். என்ன செய்யலாம்?

அப்போதுதான் மாந்தோப்பு காலனி வடிவேலு சொன்னான். அவருடைய எடுபிடி போல எப்போதும் உடனிருக்கும் தொண்டரடிப்பொடியன். "நம்ம முத்துராமனை கூப்ட்டுப் பேசுங்க, தலைவரே! உங்க் கனவு ஒர்க்கவுட் ஆவணும்னா அவன்தான் சரி. திட்ட கமிஷன் துணைத் தலைவரு மாதிரி ஏகப்பட்ட ஐடியாங்க வெச்சிருக்கான். இன்னாத்துக்குடா இவ்ளோ யோசிக்கற, ஒடம்புக்கு ஒத்துக்காம, வயித்தால போயிடப் போவுதுன்னா, சிரிக்கறான்; மக்களுக்கு நல்லது செய்யணுங்கறான். நீங்க பாத்துப் பேசித்



## பாசக்காரப் பயல்கள்!



"இந்த மேடையில நிறைய இளம் நடிகர்கள் இருக்கோம். என் நண்பர் சிம்புவும் இருந்திருந்தா இன்னும் நல்லா இருந்திருக்கும்" - இப்படிப் பேசியது யாரென்று நினைக்கிறீர்கள்? சிம்புவுக்குப் போட்டியாகக் கருதப்படும் தனுஷ்தான். இடம், 'பொறி' படத்தின் ஆடியோ ரிலீஸ் விழா. "சத்தியமா நம்புங்க. நானும் சிம்புவும் திக் ஃப்ரெண்ட்ஸ். மாமன், மச்சான் ரேஞ்சுக்குப் பேசிக்குவோம் தெரியும்ல" என்று தனுஷ் சொன்னதும் அரங்கில் ஏக கிளாப்ஸ்!

இதன் தொடர்ச்சியாக வெளியூரிலிருந்து திரும்பிய சிம்பு, "தனுஷ் சொன்னது சரிதான். அவருடைய வெற்றி எனது வெற்றி மாதிரி. வல்லவனும் திருவிளையாடலும் பரஸ்பரம் இருவருக்குமே மிகப் பிடித்த படங்கள்" என்று உச்சி மோந்திருக்கிறார்.

"இந்தப் பயல்களோட பாச உணர்ச்சிக்கு ஒரு எல்லையே இல்லாமப் போயிடுச்சே..." என்று சந்தோஷத்துடன் பார்ப்போரிடம் பேசிக் கொண்டிருக்கிறார். 'பொறி' படத்தின் இயக்குநரும் இந்தச் சம்பவங்களுக்கெல்லாம் காரணகர்த்தாவுமான டைரக்டர் சுப்ரமணியம் சிவா.

- மனோ

திருத்தினாத்தான் உண்டு."

அதனால்தான் வரச்சொல்லி இருந்தார். முத்துராமன். அட, பெண் பார்க்கப் போகிறேன் என்று சொல்லியிருந்தான் அல்லவா? பார்த்துவிட்டானா? திருமணத்துக்கு நாள் குறித்தாகிவிட்டதா?

அவன் வந்திருக்கும் தகவல் சொல்லப்பட்டதும் வெளியே வந்தார். வாசலில் காத்திருந்த முத்துராமன் அவரைக் கண்டதும் சட்டென்று எழுந்து வணக்கம் சொன்னான்.

"நல்லாருக்கீங்களா தலைவரே? வரச் சொன்னீங்கன்னு சொன்னாங்க."

"வாய்யா மாப்ள... எப்பிடி இருக்கா நம்ம மருமவப் பொண்ணு வள்ளி மயில்?"

முத்துராமன் முகத்தில் மெல்லிய வியப்பும் சந்தோஷமும் வெளிப்பட்டன. காட்டிக் கொள்ளாமல் 'ஆமா தலைவரே. நீங்கதானே சொல்லியிருக்கீங்க? நம் மாளுங்ககூட தமிழ்ப் பேரு வெக்கலைன்னா வேற எவன் வெப்பான்னு?'

"ரொம்ப கரெக்ட். எல்லாம் கேள்விப்பட்டேன். உன் கல்யாணத்த நான் நடத்தி வெக்கறேன். எப்ப வெச்சிருக்காங்க?"

"ஜனவரில இருக்கும் தலைவரே. டேட்டு நான் அப்பால சொல்றேன்னிருக்கேன். மாநாடு வருதில்ல? அதுக்குப் பாதிப்பில்லாம பாத்துக்கணும்னிட்டு ஒரு இது..."

"அதுவும் செரிதான். கட்சிக்காரனுக்கு சொந்த சந்தோசம், சொந்த துக்கமெல்லாம் ரெண்டாம்பட்சம். உங்கப்பா அந்தக் காலத்துல மூணு மாசத்துக்கு ஒருதபாதான் வூட்டுக்கே போவாரு, பாவம். செரி அத்தவுடு. ஒரு முக்கியமான காரியம். அதான் உன்னிய கூப்ட்டுவுட்டேன்."

"சொல்லுங்க, தலைவரே..!" முத்துராமன் கவனமாக அவரை நெருங்கி, கையைக் கட்டிக்கொண்டு நின்றான்.

வட்டச் செயலாளர் சுற்றுமுற்றும் பார்த்தார். "ம்ம்.. இங்க வேணாம்... வா, நாம நம்ம ஆபீசுக்குப் போயிரலாம்..." என்று அவன் தோளில் கைவைத்து அழைத்துக்கொண்டு வீதியில் இறங்கி நடக்கத் தொடங்கினார்.

முத்துராமனுக்குப் பெருமையாக இருந்தது. கண்டிப்பாக அவன் மேலே வரப் போகிறான். சந்தேகமில்லை. வீட்டுக்குப் போனதும் அம்மாவிடம் சொல்ல வேண்டும். எல்லாம் பெண் பார்த்துவிட்டு வந்த ராசி என்று சந்தோஷப்படுவான்.

ஒரு வேளை அதுதான் உண்மையும் கூடவோ? இருக்கலாம். அவனுக்கு ஒரு நடை எக்மோர் சென்று சாந்தியை இன்னொருமுறை பார்த்துவிட்டு வர வேண்டும் போலிருந்தது. சே, வள்ளி மயில்.

(தொடரும்)

**பல் தேய்த்து விடுவதற்குக்கூட ரோபோ கண்டுபிடித்துவிட்டோம். ஆனால் நீண்ட காலம் ஆரோக்கியமாக வாழ்வதற்கான வழிமுறையை இன்னமும் கண்டுபிடித்தபாடில்லை. மரணத்தைத் தள்ளிப்போட முடியுமா? இதுதான் இன்று ஆராய்ச்சியாளர்களைக் குடைந்து கொண்டிருக்கும் கேள்வி!**

ஸ்டெஃபானி ரேமண்ட் என்னும் ஆராய்ச்சியாளர் சமீபத்தில் ஓர் ஆய்வு நடத்தினார். அவர் தேர்ந்தெடுத்துக் கொண்ட நாடு அமெரிக்கா. ஒவ்வொரு மாகாணத்திலும் உள்ள மக்கள் தொகை எவ்வளவு, அவர்களது சராசரி ஆயுள் காலத்துக்கு உயிர் வாழ்கிறார்கள் என்று பார்த்தார். விடை கிடைத்தது. சான் ஃபிரான்ஸிஸ்கோ.

யோசித்தார். சான் ஃபிரான்ஸிஸ்கோவில் மட்டும் அப்படி என்ன ரகசியம் இருக்கிறது? தொடர்ந்து ஆராய்ச்சி செய்தபோது மேலும் ஒரு புள்ளி விவரம் கிடைத்தது. சான் ஃபிரான்ஸிஸ்கோ பணக்காரர்களின் பிராந்தியம். பெரிய பெரிய பிசினஸ் புள்ளிகள் மொத்தமாகக் குத்தகை எடுத்துக்கொண்டு வசிக்கும் பகுதி. வீட்டுக்கு நாலு கார் வைத்திருக்கும் நபர்கள் இங்கு அதிகம். மற்றொரு விஷயமும் தெரிந்தது. அதிக வசதி வாய்ப்புகள் இல்லாத பகுதிகளில் சராசரி ஆயுள் காலம் குறைச்சல்.

எல்லாவற்றையும் ஒப்பிட்டுப் பார்த்து

# ஆரோக்கியத்தின்



காலம் என்ன ஆகிய இரண்டையும் கவனமாகக் குறித்துக் கொண்டார். பிறகு, எந்தப் பகுதியைச் சேர்ந்த மக்கள் நீண்ட இப்படி ஒரு முடிவுக்கு வந்து சேர்ந்தார் ஸ்டெஃபானி. பசை இல்லாத மனிதர்களைவிட பசையுள்ள மனிதர்கள் நீண்ட



காலம் ஆரோக்கியமாக உயிர் வாழ்வார்கள்.

பணத்துக்கும் ஆயுள் காலத்துக்கும் தொடர்பு இருக்கிறது என்கிறார் ஸ்டெஃபானி. பணம் இருந்தால் மெடிக்கல் பாலிஸி எடுப்பார்கள். சின்னச் சின்ன



# பரமபிதா!

உபத்திரவங்களுக்குக் கூட உடனடியாக சிகிச்சை எடுத்துக் கொள்ளலாம். நோய் முற்றினால்தான் டாக்டரிடம் போக வேண்டும் என்றில்லாமல், அட்டவணைப் படி செக்-அப் போகலாம். வசதி இல்லாதவர்களுக்கு இவையெல்லாம் ஆடம்பரம்!

ஆனால், இந்த ஆய்வில் பல குளறுபடிகள் உள்ளன. ஒரு பன், ஒரு சிங்கிள் டீயுடன் உணவை முடித்துத் திடகாத்திரமாகக் காலம் தள்ளுபவர்களும் இருக்கத்தான் செய்கிறார்கள். பல் தேய்ப்பதற்குக் கூட பயந்து மினரல் வாட்டர் பயன்படுத்தும் பலர் 'லொக் லொக்'கென்று இருமிக் கொண்டே டாக்டரிடம் போவதும் சர்வ சாதாரணம்தான்.

கொலம்பியா பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த லெராஸ் என்னும் யுவதி, வேறு ஒரு கோணத்தில் ஆராய்ந்து கொண்டிருக்கிறார். அமெரிக்க வரைபடத்தை மட்டும் எடுத்துக்கொள்ளாமல், உலக வரைபடத்தைப் பிரித்து வைத்துக் கொண்டு சில புள்ளி விவரங்களைத் தொகுத்திருக்கிறார். பிறகு, கால்குலேட்டரைத் தட்டி இப்படி ஒரு முடிவுக்கு வந்து சேர்ந்திருக்கிறார்.

யார் யாரெல்லாம் பள்ளிக்கூடத்தில் நீண்ட காலம் தங்கிப் படிக்கிறார்களோ, அவர்களுக்கெல்லாம் நீண்ட ஆயுள் கிடைக்கிறது. அதெப்படி? பள்ளிப் பருவத்தில் கிடைக்கும் அனுபவங்களுக்கும் ஆரோக்கியமான வாழ்க்கை முறைக்கும் நேரடித் தொடர்பு இருக்கிறது. பள்ளிப் படிப்பைப் பாதியிலேயே நிறுத்திக் கொண்டவர்கள் பல்வேறு காரணங்களால் ஆரோக்கியத்தை இழக்கிறார்கள். வேலை கிடைக்காமல், அங்கீகாரம் கிடைக்காமல் மன உளைச்சலுக்கு ஆளாகிறார்கள்.

பிற நாடுகளுடன் ஒப்பிடும்போது ஸ்வீடன், டென்மார்க், இங்கிலாந்து போன்ற நாடுகளில் குழந்தைகள் பள்ளிக்கூடங்களில் அதிக நேரத்தைச் செலவழிக்கிறார்கள். இதே நாடுகளில்தான் சராசரி ஆயுள்காலம் அதிகம். ஆகவே, பள்ளிக்கூடம்தான் ஆரோக்கியத்தின் பரமபிதா. இதுதான் அந்த யுவதியின் கண்டுபிடிப்பு!

இதற்கும் எதிர்ப்புகள். 'மழைக்குக் கூட பள்ளிக்கூடத்தை மிதிக்காதவர்கள் குத்துக்கல்லுபோல இருக்கிறார்களே எப்படி?', 'மீண்டும் மீண்டும் ஃபெயில் ஆகி, ஒரே க்ளாஸில் பத்து வருஷம் படிச்சா, நீண்ட ஆயுள் கிடைக்குமா?' - இந்தக் கேள்விகளுக்கு விடைகளில்லை!


பசைதான் ஆயுளை நீடிக்கும் என்று சொல்லும் ஆசாமிகள், லெராஸை வேறு விதத்தில் மடக்குகிறார்கள். 'வாம்மா வா! பள்ளிக்கூடத்துல அதிக காலம் படிக்கணும்னா சும்மாவா? டொனேஷன், ஸ்கூல் ஃபீஸ், காம்போசிஷன் நோட், ரெக்கார்ட் நோட்டுன்னு நிறைய செலவழிக்கணும். அதுக்கு என்ன வேணும்? டப்பு. அதாவது, பசை. ஆக, நாங்க சொல்றதுதான் கரெக்ட், புரியுதா?'

சரஸ்வதி சபதம் நாரதர் ஸ்டைலில் கல்வியா, செல்வமா என்று இரு கோஷ்டிகளும் மல்லுக்கட்டி நிற்கின்றன. அவை இரண்டுமே வாழ்க வளமுடன்!

# நாலு அறை!

உலகத்தில் தற்சமயம் பேரறிஞர்கள் எல்லாருடைய கவனத்தையும் கவர்ந்திருக்கும் இரண்டு பெரிய பிரச்னைகள் இருக்கின்றன. அவற்றில் ஒன்று சொத்துரிமை; இரண்டாவது, கல்யாணம். உலகின் செல்வத்தை எல்லா மனிதர்களுக்கும் தர்ம நியாயமாகப் பகிர்ந்து கொடுப்பதன் அவசியத்தைப் பற்றி ஒரு பெருங் கிளர்ச்சி உலகத்தில் நடந்து வருகிறது. சமதர்மம், பொது உடைமை, தொழிலாளர் இயக்கம் போன்றவை எல்லாம் மேற்படி கிளர்ச்சியின் அம்சங்களே. மனிதர்களுக்குள் வழங்கும் கல்யாண முறைகள், இல்லற ஏற்பாடுகள் ஆகியவற்றைப் பற்றியும் எவ்வளவு தீவிரமாக அறிஞர்கள் சிந்தித்தும், பேசியும், எழுதியும் வருகிறார்கள்!

மேற்கூறிய இரண்டு பிரச்னைகளுக்கும் ஒரு விதத்தில் நெருங்கிய சம்பந்தம் உண்டு. அதாவது, சொத்துரிமைப் பிரச்னை நல்ல முறையில் தீர்த்து வைக்கப்பட்டால், கல்யாணப் பிரச்னையும் ஓரளவு தீர்த்து வைக்கப்பட்டதாகும். இந்த சம்பந்தத்தைப் பற்றிப் பின்னால் ஓரிடத்தில் சொல்லுகிறேன்.



கல்யாணம் என்பது, கல்யாணம் செய்து கொள்ளும் சதிபதிகளை மட்டும் பொருத்த பிரத்யேக விஷயம் என்று யாராவது எண்ணியிருந்தீர்களானால், அந்த எண்ணத்தை நாலு அறை கொடுத்து விரட்டி விடுங்கள். அது முழுதும் பிசகான எண்ணம்.

கல்யாணம் சதிபதிகளை எவ்வளவு பொருத்த விஷயமோ, அவ்வளவு சமூகத்தையும் பொருத்த விஷயம். இந்தச் சமூக சம்பந்தம் இரண்டு வகையில் ஏற்படுகின்றது:

1. இல்வாழ்க்கையில் சந்தோஷமாயிருக்கும் சதிபதிகள் பெரும்பாலும்



இனிய சுபாவமுடையவர்களாயும், வாழ்க்கையில் குதூகலமுடையவர்களாயும், தாராள மனங்கொண்டவர்களாயும் இருப்பார்கள். தனி மனிதர்களுடைய இந்தக் குணங்கள்தான் சமூக முன்னேற்றத்துக்குக் காரணமாயிருக்கின்றன. இல்வாழ்க்கையில் சந்தோஷமற்ற சதிபதிகளோ, கடுகடுத்த சுபாவமும், வாழ்க்கையில் வெறுப்பும், குறுகிய புத்தியும், அசூயையும், துவேஷமும் கொண்டவர்களாயிருப்பார்கள். இந்தக் கயவர்களால் சமூகத்துக்கு எவ்வளவு தீமையுண்டாகும் என்று சொல்ல வேண்டியதில்லை. 2. கல்யாணத்தின் பலனாக குழந்தைகள் ஏற்படுகின்றன. இன்று குழந்தைகளாயிருப்பவர்களே நாளைக்கெல்லாம் வளர்ந்து தேசத்தின் பிரஜைகள் ஆகிறார்கள். இதனால்தான் நாகரிக தேசங்களில் எல்லாம் குழந்தைகள் வளர்ப்பில் இராஜாங்கம் அதிக கவனம் செலுத்துகிறது. குழந்தைகளுக்குக் காரணமாயிருப்பது கல்யாணமாகையால், கல்யாணத்தைப் பற்றி சமூகம் கவலை கொள்வது நியாயமல்லவா?

இந்த இரண்டு காரணங்களாலும், நாகரிகமடைந்த எல்லா தேசங்களிலும், கல்யாணத்தைப் பற்றிய சட்ட திட்டங்களைச் சமூகம் செய்கிறது. அந்த சட்ட திட்டங்களைச் சுலபமாக அமல்படுத்துவது சாத்தியமாயிருக்கும் பொருட்டு, அவற்றுக்கு மத சம்பந்தமும் ஏற்படுத்தியிருக்கிறார்கள். அதாவது கல்யாண விதிகள் சாஸ்திரங்களிலும் புகுந்திருக்கின்றன. மந்திரங்கள், சடங்குகள், புரோகிதர்கள் தோன்றினார்கள்.

கல்யாணம் என்பது எவ்வளவு சிக்கலான விஷயம் என்று இப்போது தெரிகிறதா? ஆண் பெண்களுக்குள்ள இயற்கைக் கவர்ச்சி ஒரு பக்கம் இருக்க, சமூகம், சட்டம், மதம் இவ்வளவும் அதில் தலையிடுகின்றன.

- 'பெண் தெய்வங்கள்'
வானதி வெளியீடு



## இமானின் காதலி!

தெரியுமா சேதி? வீட்டில் இசையமைப்பாளர் இமானுக்குப் பெண் பார்த்துக் கொண்டிருக்க, இவர் யாரிடமோ காதல் வயப்பட்டுக் கொண்டிருக்கிறார். 'யார்?' என்று அதிர்ந்து போய்க் கேட்டால், "பதறாதீங்க, அவ பேரு இசை" என்று கூலாய் சிரிக்கிறார். 'வாத்தியார்' படத்தில் 'என்னடி முனியம்மா' திருவிளையாடலில் 'என்னம்மா கண்ணு' என்று இவருடைய ரீமிக்ஸ் பாட்டுக்கள்தான் இன்றைக்கு இளைஞர்களின் செல்போன் ரிங்டோன்ஸ். ஆனால் இமான், "ரீமிக்ஸ் பண்றதுல எனக்கு விருப்பமில்லீங்க. அதுல கிரியேட்டிவிட்டி, கடின உழைப் புக்கு அதிக இடமில்ல" என்கிறார்.

"வந்தே மாதரம் ஆல்பம் பண்றதுதான் என் அடுத்த இலக்கு. ரஹ்மான் சார் மாதிரி சாதிச்சுட்டுத்தான் எல்லாமே..." என்றவரிடம்,

'எல்லாமேன்னா...?' என்றால்,

"எல்லாம்தான்!" என்று கண் சிமிட்டுகிறார்.

- நிரஞ்சனா

படம்: சுந்தரம்

# ஜனங்களின் சாமி

இலேசா நெருப்புப் பட்டாலே நாம துடிச்சுப் போயி ஊரையே கூட்டுறோம். ஆனா ஊரே கூடித் தீ வச்சும், ஒடம்புல ஒரு சின்ன தீப்புண்ணுகூட இல்லாம சமாதியானா ஒருத்தி.

திருநெல்வேலி ஆலங்கொளத்துல 'மாவளியூத்து'ன்னு ஒரு சின்ன கிராமம். அந்த ஊரு பண்ணையாரு வீட்டுல மாடு கன்னப் பாத்துக்க எளவட்டமா கீழ்ப் பட்டரயச் (ஜாதி) சேர்ந்த ஒருத்தன் வேல பாத்துக்கிட்டு இருந்தான். அவன் கறுப்பா இருந்தாலும் ஆளு அம்சமா, கட்டுமுட்டா செஞ்சு வைச்ச செலமாதிரி இருந்தான். அந்தப் பண்ணையாருக்கு அழகா, செக்கச் செவேல்னு ஒரு பொண்ணு இருந்தா.

அந்தக் காலத்துல பொழுது நெலம் கிறதுக்கு (கோழி கூப்பிடும்) முன்னா டியே கன்னிப் புள்ளைக எழுந்திரிச்சு, மாட்டுத் தொழுவத்துக்குப் போயி எளம் மாட்டுச் சாணி எடுத்து, வாசத் தெளிப் பாக. பண்ணையாரு மகளும் கொரங்கு இருட்டுல எந்திருச்சி, பொற வாச வழியா மாட்டுத் தொழுவத்துக்கு வந்து எள மாட்டுச் சாணி அள்ளிட்டு வந்து வாசத் தெளிப்பா. பொறுப்பான இந்தப் புள்ளை யோட அம்மா செத்துப் போயிட்டா. ரெண்டாந்தாரமா ஒருத்தியக் கெட்டிக் கிட்டு வந்தாரு. சித்திக்காரி சதா இவ கிட்ட 'கைபட்டாக் குத்தம்' கால் பட்டா குத்தம்'னு எசலி (சண்டை) போட்டுக்கிட் டிருப்பா. அந்தப் பொண்ணு நெதமும் எளமாட்டுச் சாணி எடுக்க வரதப் பார்த்து இந்த எளந்தாரி அவ விரும்புற பசுமாட்டுச் சாணியாப் பாத்து எடுத்து வச்சு அவகிட்ட கொடுப்பான். இவனுக்கு அவன் மேல ஒரு கண்ணு. அவங் காடு, கரைக்கு மாடு மேய்க்கப் போகும்போது அங்க கெடைக்கிற பூவு, பழம் எல் லாத்தையும் எடுத்துட்டு வந்து, இவ சாணி எடுக்க வரும்போது தரு





# அக்னி புத்ரி!

வான். இப்படி சிநேகமா, பாசமா பழக ஆரம்பிச்சு, நாளா வட்டத்துல இரண்டு பேரும் ஒருத்தரையொருத்தர் நேசிக்க ஆரம்பிச்சாக. ரெண்டு பேரும் நேசமா பழகுறது பண்ணையில வேல பாக்குற எல்லாத்துக்கும் தெரிஞ்சு போச்சு. ஒருத்தருக்குத் தெரிஞ்சால ஊருக்கே தெரிஞ்ச மாதிரி; அவ சித்தி காதுக்கு மட்டும் விசயம் போகாம இருக்குமா? போயிருச்சு. ஒடனே, சித்தியும் இவளக் கவனிக்க ஆரம்பிச்சா.

ஒருநா ரெண்டு பேரும் தொழுவத்துல 'எசகுபெசகா' இருக்கும்போது சித்திக்காரி 'கையும் மெய்யுமா' பிடிச்சுட்டா. இந்த எளந்தாரி சித்திக்காரியத் தள்ளி விட்டுட்டு ஓடிட்டான். இவந் தள்ளி விட்டதுல அவ கல்லுமேல விழுந்து மண்டை ஒடைஞ்சு ரத்தம் களகளன்னு கொட்டிடுச்சு. பண்ணையாரு மகளும் 'ஆஹா, மாட்டிக்கிட்டோமே'ன்னு பயந்து பொற வாசல் வழியா ஓடிட்டா.

தலையில அடிபட்டோன இந்தம்மா 'குய்யோ... முறையோ'ன்னு அழுது, பண்ணையார்கிட்ட ஒன்ன ஒம்போதாச் சொல்லிருச்சு. பண்ணையாரும் வீட்டு வேலக்காரங்களையும், சொந்தக்காரங்களையும் அனுப்பி "அவ எங்கிருந்தாலும் கண்டுபிடிச்சுத் தலையில எண்ணெய் ஊத்திக் கொளுத்துங்க'ன்னு கட்டள போட்டாரு. 'கீழ்ப்பட்டரப் பய, நம்ம பொண்ணத் தொட்டுட்டானே'ன்னு பண்ணையாரோட சொந்தக்காரங்க ஊரு காடு கரையெல்லாம் தேடினாங்க.

ஓடிப்போன இந்தப் பொண்ணு, ஊருக்கு ஒதுக்குப் பொறமா இருந்த வைக்கோலு படப்புல புகுந்து மறைஞ்சுக்கிட்டா. அந்த எளந்தாரி பயந்து ஓடுன வேகத்துல, இருட்டு நேரமா வேற இருந்துச்சா, கவனிக்காம பாழுங்கெணத்துல விழுந்து செத்தே போயிட்டான்.

பண்ணையாரு மக, அவ வீட்டுல ஆசை ஆசையா ஒரு பச்சக்கிளி வளர்த்தா. ராப் பகலா அதுகூடயே இவ பேசி சிரிச்சு விளையாடிக்கிட்டு இருப்பா. அதுக்குப் பால், பழம்னு கொடுத்து ரொம்பப் பாசமா, ஒரு புள்ளையாட்டம் வளர்த்தா.

அந்தக் காலத்து ராசாக்களுக்கு மந்திரிக மாதிரி, பண்ணையாருக்கு கணக்கப் புள்ள. நல்ல புத்திசாலி அவரு. பண்ணையாரு மகளத் தேடிப்போன ஆளுங்க பூரா வெறுங்கையோட திரும்பி வந்தாக. அந்த நேரம் பார்த்து கிளி சத்தம் போட்டுச்சு. உடனே கணக்கப்புள்ளைக்கு ஒரு யோசன வந்துச்சு. இவரு வேலக்காரங்க கிட்ட 'அந்தக் கிளிக் கூண்டத் தொறந்து விடுங்க. அது பறந்து போற திக்குலேயே போங்க. அது எங்க போயி உக்காருதோ, அங்க கண்டிப்பா அவ இருப்பா'ன்னு சொன்னாரு.

வேலக்காரியும் கிளிக்கூண்டத் தொறந்துவிட, கிளி பறந்து போயி ஊருக்கு ஒதுக்குப் பொறமா இருந்த வக்கோலு படப்புல ஒக்காந்துச்சு. உடனே ஒருத்தன் படப்புல இருந்த ஒரு கட்டு வக்கோல எடுத்தான். அப்ப அந்தப்

பொண்ணோட தாவணி முந்தானை தெரிஞ்சது. உடனே இந்த வேலக்காரன் சுதாரிச்சுட்டு சுத்தி நின்னவங்ககிட்ட கைக்கர்ணமா (சைகை மூலமாக) 'அவ உள்ளதான் இருக்கா'ன்னு சொன்னான்.

தெரிஞ்ச உடனே, பண்ணையாரம்மா வக்கோலு படப்புக்கே வந்தா. அவகிட்ட வேலக்காரங்க 'குசுகுசு'ன்னு அவ இருக்கிறதப் பத்திச் சொன்னாக. உடனே அந்தச் சண்டாளி 'வக்கோலு படப்புக்குத் தீ வைங்க'ன்னு உத்தரவு போட்டுட்டா.

தீ வச்ச உடனே தீ 'மளமள'ன்னு பரவி பனைமரத்து ஒசரத்துக்கு எரியுது. வைக்கோலு படப்புக்குள்ள ஒளிஞ்சிருக்க புள்ள தீயைப் பாத்ததும் அலறி அடிச்சுக்கிட்டு வெளிய வருவான்னு சித்திக்காரி நெனச்சா. ஆனா அந்தப் புள்ளையோ, 'தீயில் நம்ம துணி எரிஞ்சு போயிரும். வெளியே ஆம்பளைங்க எல்லாம் இருக்காங்களே... அரையுங் கொறையுமா, துணியில்லாம போக முடியுமா? அப்படிப் போறதவிட தீயில கருகி உசிர விடுறது மேலு'ன்னு தீர்மானிச்சு, வைராக்யமா உள்ளய ஒக்காந்துட்டா. வைக்கோலு படப்பு எரிஞ்சு சாம்பலாயிருச்சு. தீ வெக்க தணிஞ்சு, சாம்பல வெலக்கிப் பாத்தாக எல்லாரும். என்ன அதிசயம்! ஒடம்பு கருகல, கரியாகல! அப்படியே செலையாட்டம் ஒக்காந்திருந்தா.



ஆனா உசிரு மட்டும் இல்ல.

இந்தக் காட்சியப் பாத்தோன எல்லாரும் வாயடைச்சு, புல்லரிச்சுப் போயி நின்னாக. அவளத் தொட்டுப் பாக்குற துணிச்சல்கூட யாருக்கும் இல்ல.

கொஞ்ச நேரத்துல இந்தச் சேதி ஊர் பூரா பரவிருச்சு. ஊருப் பொண்ணுங்க அவள 'அம்மா, தாயே'ன்னு கூப்புட்டுப் பாத்தாக; பதிலே இல்ல! எல்லாரும் 'அம்மா, தாயே... அக்னிபுத்திரி!'ன்னு கையெடுத்துக் கும்பிட்டாங்க. அப்போ ஒருத்தி அருளு வந்து, 'ஏலே சண்டாளப் பாவிகளா... நம்ம கொலவௌக்கா வாழணும்னு நெனச்ச மகராசிய நீங்களே உங்க கையால கொன்னுட்டீகளே...! நீங்க வச்சத் தீயில அவ தெய்வமாயிட்டா. அந்தப் பாவம் தீரணும்னா, இப்பவே ஒரு கொடம் மஞ்சத் தண்ணிய அவ தலையில ஊத்தி அவ கால்ல விழுந்து மன்னிப்பு கேளுங்க. அக்கினிக்குள்ள உயிர விட்ட எடத்துலேயே அவளப் பொதைச்சு, அடையாளமா ஒரு ஆலங்கொப்பையும் நட்டு வச்சுருங்க. தீ வைச்ச கொடுமைக்காக வருஷத்துக்கு ஒரு தடவ இந்த இடத்துல தீ வளர்த்து, உங்க பரம்பரையே அதுல எறங்கணும். இந்த அக்னிபுத்ரி உங்கள கடாமக் காப்பா'ன்னு அருள்வாக்குச் சொன்னா.

நட்ட ஆலங்கொப்பும், மரமா வளர்ந்துருச்சு. கோயிலும் கட்டிட்டாங்க. இன்னிக்குத் தீ வளர்த்து அதுக்குள்ள எறங்கி, உசிரோட முழுசா எந்திருச்சி வராக' என அக்னிபுத்ரியின் கதையைச் சொன்னாரு அமுதாபுரம் சிவனாண்டி.

(தொடரும்)

## எரிகின்ற நெருப்பில்...

கொலையில் உதித்த தெய்வங்களில் ஒன்றாகத் திகழ்கின்றது 'அக்னி புத்ரி' என்ற பெண் சாமி. திருநெல்வேலி மாவட்டத்தில் ஆலங்குளம் வட்டத்தில் உள்ளது 'மாவளியூத்து' என்ற கிராமம் இங்குதான் இருக்கிறது - 'அக்னி புத்ரி கோயில்.'

இக்கோயில் கொடை விழாவின்போது பக்தர்கள், எரிகின்ற நெருப்பில் இறங்குவார்கள். பொதுவாகப் பூக்குழி என்றால், தீக்கங்குகளின் மேல்தான் நடந்து செல்வார்கள். இந்தக் கோயிலில் மட்டும் அக்னிக்குள் (ஜுவாலையுடன் எரிகின்ற நெருப்புக்குள்) இறங்கி வெளியே வருவார்கள்.



கல்கி
தரம் நிரந்தரம்
விரைவில் கடைகளில்...
பிப்ரவரி 2007
வெள்ளி விழா சிறப்பிதழ்!
கோகுலம்
25
உங்கள் குழந்தைகளின்
அசத்தலான...
சூப்பர்
கையெழுத்து!
படித்து
மகிழ
விசித்திரக்
கதை...
பானைக்
குழந்தைகள்!
தமிழைப் பிழையின்றி
எழுத
எளிய நடையில்...
அழகே, அமுதே,
தமிழே!
மேலும் படக் கதைகள்,
பல அறிவூட்டும் பகுதிகள்,
போட்டிகள் இத்தனையும்
எட்டே ரூபாயில்...
கோகுலம்
குழந்தைகளின் குதூகலம்!

நந்தினிக்குப் பொதுவாகவே குழந்தைகள் என்றால் ரொம்ப ஆசை. நல்ல பழக்கங்கள்கொண்ட சிறுவர்களைப் பார்த்தால், தன் குழந்தையை வருங்காலத்தில் அதுபோல வளர்க்க வேண்டுமென்று நினைத்துக்கொள்வாள்.

கர்ப்பம் தரித்ததிலிருந்தே நந்தினிக்கு நிறைய கனவுகளும் திட்டங்களும் மனத்தில் ஓடத் தொடங்கின. மருத்துவர் அழைக்க, அவளும் அவள் கணவர் ஷரத்தும் உள்ளே சென்றனர்.

"ரெட்டை வாழ்த்துக்கள் நந்தினி. நீ எல்லாத்தையும் திட்டமிட்டு செய்வேன்னு ஒத்துக்கறேன். அதுக்குன்னு இப்படியா?'' என்று ஆவலைக் கிளப்பினார் மருத்துவர். தெரிந்தவர் என்பதால் அதிக உரிமை எடுத்துப் பேசினார்.


''பையன் ஒண்ணு, பொண்ணு ஒண்ணு. ரெண்டு 'அம்மா' குரல்களுக்கு ஒரே நேரத்துல நீ ஈடு கொடுக்கணும், நந்தினி'' என்ற டாக்டர், தொடர்ந்து அவள் கையாள வேண்டிய பழக்க வழக்கங்களையும் சாப்பாட்டு முறையையும் விளக்கினார். நந்தினியிடம் சந்தோஷத் துள்ளல்.

அதன் பிறகு நந்தினியையும் ஷரத்தையும் கையில் பிடிக்க முடியவில்லை. 'ஆண் குழந்தைக்கு ரொம்பச் செல்லம், பெண் குழந்தையை மட்டும் வீட்டில் வேலை வாங்குவது என்று இல்லாமல், அந்தந்தக் குழந்தையின் தனிப்பட்ட திறமைகளையும் தேவைகளையும் ஆராய்ந்து சமமாக வளர்க்க வேண்டும்' என்ற எழுதாத ஒப்பந்தத்தில் ஷரத்தை மானசீகமாகக் கையெழுத்திட வைத்தாள் நந்தினி.

அடுத்த சில வாரங்கள் அலுவலக வேலைக்கு நடுவே நேரம் கிடைக்கும் போதெல்லாம் கனவுதான்.

கனவு நனவாவதற்காக நந்தினி ஏங்கிக் கொண்டிருந்த நேரத்தில், கனவு கலைந்தது. நந்தினிக்கு இரட்டைக் குழந்தைகள் பிறக்கப் போகின்றன என்பது நாத்தனார் ஆனந்தியின் காதுக்கு எட்டிய நேரத்தில், ஆனந்தி தம்பதிக்குக் குழந்தை பெறும் பாக்கியம் இல்லை என்று மருத்துவர்கள் ஊர்ஜிதப்படுத்தினர். அப்போதுதான், ஷரத் மூலமாக நந்தினியிடம் அதிர்ச்சி தரும் முறையீடு ஒன்று வைக்கப்பட்டது.

''நந்தினி... இது சுலபமான



# மன்னிச்சுடு ஆனந்தி!

## உஷா ராமகிருஷ்ணன்

முடிவு இல்லைதான். என்னாலயும் சட்டென்று ஏத்துக்க முடியலதான். மொத தடவை அக்காகிட்ட கடுமையாப் பேசி முடியாதுன்னு சொல்லிட்டேன். ஆனால் மறுபடியும், நிறைய பேசினேன்; யோசிச்சேன். ஆனந்தி, வந்து... பொறக்கப் போற நம்ம ரெட்டைக் குழந்தைல ஒண்ணைத் தனக்குக் கேக்கறா. ஆனந்தி உனக்கும் ஒரு நல்ல தோழியாத்தான் இருக்கா. நீ கொஞ்சம் பொறுமையா இதைப் பத்தி யோசி" என்று சொல்லி, உடனே யோசிக்கக்கூடிய வாய்ப்பை ஏற்படுத்திவிட்டு, அந்த இடத்தை விட்டு அகன்றான் ஷரத்.

இந்தக் கவலை ஒருபுறம் தோன்றிய போதிலும், எந்த நிலையிலும் கருவைப் பாதுகாப்பதை நந்தினி பின்னுக்குத் தள்ளவில்லை.

இதற்குப் பிறகு ஆனந்தியும் பலமுறை வந்து பேசினாள். அவளைப் பார்ப்பதற்குப் பாவமாய்த்தான் இருந்தது நந்தினிக்கு. அதேசமயம் குழந்தையைக் கொடுப்பது என்ற முடிவுக்கு வந்தால், அந்தக் குழந்தையைப் பார்க்கும்போதெல்லாம் துக்கம் பீறிடுமே. அந்தக் குழந்தை யாரோ என்பதைப் போல் எப்படி நந்தினியால் நடந்துகொள்ள முடியும்?

ஆனால் எல்லோரும் அவளிடம் "நீ அந்தக் குழந்தையை விட்டு விலகணும்னு யார் சொல்றாங்க? உன்னையும் அது அம்மான்னுதான் கூப்பிடும். சரியான நேரத்துல, ரெண்டு குழந்தைங்ககிட்டேயுமே அவங்க சேர்ந்து பொறந்ததை எடுத்துச் சொல்லுவோம். எதையும் யார்கிட்டேயும் நாம் மறைக்க வேண்டாம். ரெண்டுல ஒரு குழந்தை ஆனந்தியின் தாய்மை உணர்ச்சிக்கு வடிகாலா அவகிட்ட வளரும். அவ்வளவுதான்" என்றனர்.

எல்லாம் சரிதான்... ஏதாவது ஒரு குழந்தையைத் தா என்றால், எந்தக் குழந்தையைக் கொடுப்பது? 'நான்தான் அவங்ககிட்ட போகணும்னு எப்படி முடிவு செஞ்ச?" என்று அந்தக் குழந்தை கேட்டால் என்ன பதில் சொல்வாள்?

ஒருமுறை நந்தினி, "ஆனந்தி, குழந்தைங்களோடு நீ விளையாடுறதோ, இல்லை குழந்தை வளர்ப்புல உதவுறதோ எனக்குச் சந்தோஷம். அப்படி இருக்கும்போது ரெண்டு குழந்தைங்களையும் பிரிக்கற ஒரு காரியத்தைச் செய்வானேன்?" என்று கேட்டாள்.

"செய்யலாம், நந்தினி. ஆனா, எனக்குன்னு ஒரு குழந்தை இருக்கும்போது, வாழ்க்கைல எங்களுக்கும் ஒரு பிடிப்பு இருக்கும். வெறுமை போகும். அதோட, என் தம்பி குழந்தைன்னா எங்களுக்கும் பாசம் இயற்கையா வருமேன்றதுனாலதான் இப்படி யோசிச்சோம். அதனாலதான் ஷரத்கிட்ட இப்படிக் கேட்டேன். நிச்சயமா உன்னை இந்த விஷயத்துல இக்கட்டுல மாட்ட மாட்டேன். பெத்த குழந்தையைக் கொடுக்கறது கஷ்டம்தான். ஆனால் குழந்தைக்காகத் தவிக்கற எங்களுக்காக நீ செய்யற ஒரு தியாகமாத்தான் இதை எதிர்பார்க்கறோம்" என்றாள் ஆனந்தி. ஆனந்திக்கும் நந்தினிக்கும் நிறைய பக்குவம் இருந்தது.

நந்தினி 'என்ன செய்யலாம்' என்ற

குழப்பத்துக்கு வந்ததே அக்காவுக்குச் சாதகம்தான் என்று முடிவு செய்து, ஷரத் தன் அக்காவிடம் பச்சைக்கொடி காண்பித்தான். ஆனந்தியின் கணவர், ஊருக்கு நடுவில் தனக்கிருந்த நிலத்தை இரண்டாகப் பிரித்து, ஒரே மாதிரி இரண்டு வீடுகளைக் கட்ட ஏற்பாடு செய்தார். இரண்டு குழந்தைகளும் இரு வீடுகளிலுமே செல்லமாகத்தான் இருப்பார்கள் என்ற உறுதியுடன், ஆனந்தியும் அவள் கணவரும் புது குதூகலத்தில் ஆழ்ந்தார்கள்.

உள்ளுக்குள் நிறைய மன அழுத்தம் இருந்தாலும், நந்தினி, தன் கணவர் மற்றும் அவர் குடும்பத்தின் மகிழ்ச்சி கருதி, ஒரு குழந்தை ஆனந்தியின் பராமரிப்பில் வளர்வதை ஏற்றுக் கொள்ளப் பழகினாள். வித்தியாசமான ஒரு நிகழ்வாக, அதே சமயத்தில் அனைவரும் பாராட்டக்கூடிய வகையில், அந்தக் குழந்தைகளின் வாழ்க்கையை அமைக்க நால்வரும் நிறையத் திட்டமிட்டனர்.

ஒருநாள் ஷரத், ''உனக்குப் பையன் ரொம்பப் பிடிக்குமா, இல்லை பொண்ணு பிடிக்குமா?'' என்றான், நந்தினியிடம். ஆனந்தி தம்பதி அவள் பதிலை எதிர்நோக்கி அவள் உதட்டசைவைக் காணத் துடித்தனர்.

''எனக்கு எப்பவுமே அந்த வித்தியாசம் கிடையாது. அதுவும் இந்த நேரத்துல, இதுதான் வேணும்னு சொன்னா, இன்னொண்ணு வேணாம்னு நான் ஒதுக்கற மாதிரி எனக்கு ஒரு உணர்ச்சி வரும்'' என்றாள். ஷரத் அவள் மென்மையான மனத்தைக் கண்டு நெகிழ்ந்து போனான்.

தொடர்ந்து அவன், ''இந்த உலகத்துல எந்தக் குழந்தை மொதல்ல ஜனிக்குதோ, அது நமக்குன்னு வெச்சுப்போம். சரியா நந்தினி? ரெண்டாவதா பொறக்கற தம்பியோ, தங்கையோ ஆனந்திக்கு'' என்றான் ஷரத். யார் எந்தக் குழந்தையை வளர்க்கப் போகிறார்கள் என்பது சஸ்பென்ஸாகவே அமைந்தது.

அந்த இனிய நாளும் வந்தது. வழக்கமாக கணவர் மட்டுமே பிரசவ அறைக்கு வெளியில் நகத்தைக் கடிப்பார்கள். இங்கே மூவர் அதைச் செய்தனர். முதலில் உலகத்தை எட்டிப் பார்த்தது பெண் குழந்தை. அடுத்த மூன்று நிமிடங்களில் பையன் பிறந்தான். பூங்கொத்துகளுக்கும் பரிசுப் பொருட்களுக்கும் இடையே இருந்த குழந்தைகளை, குழந்தை நல மருத்துவர் பரிசோதிக்க வந்தார். அப்போது விழுந்த பேரிடி, நந்தினிக்கு முதன் முதலில் ஆனந்தி தங்கள் குழந்தையைக் கேட்பதைப் பற்றிக் கேள்விப் பட்டாளே, அதைவிட அதிர்ச்சி தருவதாக இருந்தது. இரண்டாவதாகப் பிறந்த குழந்தைக்கு 'டௌன்ஸ் சிண்ட்ரோம்' என்ற வளர்ச்சி குன்றிய நிலை. இடையில் ஸ்கேன் செய்து பார்க்காதது தவறாகி விட்டதே! நந்தினிக்கு வேதனை. தன்னுடைய மகன், வாழ்க்கை முழுதும் சரா



''பக்கத்து வீட்டுல புருஷனும் பொண்டாட்டியும், 'நீயா, நானா'ன்னு மல்லுக்கு நின்னாங்க; அஞ்சு நிமிஷமா சத்தத்தையே காணுமே...?''

''விளம்பர இடைவேளையா இருக்கும்!''

- சீர்காழி வி.ரேவதி

# காதல் நந்தவனம்

**- பயிரிட வாருங்கள், வாசகர்களே!**

இதனால் காதல் மனம் கொண்ட அனைவருக்கும் அறிவிப்பது என்னவென்றால் நமது கல்கியில் மிக விரைவில் 'காதல் நந்தவனம்' திறக்கப்படுகிறது. காதலர்கள் மட்டுமின்றி கணவன் - மனைவியரும் தங்களது காதல் விதைகளை இங்கே தூவலாம். அவை அனுபவம், நகைச்சுவை, கவிதை, கடிதம் என எப்படியும் இருக்கலாம். உங்கள் அன்பு அதில் மிளிர வேண்டும். வர்ணிப்பதும், நிறைகளைச் சொல்வதும் மட்டும் காதலல்ல. உங்கள் அன்புக்குரியவரின் குறையைச் சுட்டிக்காட்டி மாற்றுவதும் காதல்தான். நேரில் சொல்லத் தயங்கியதை இந்த நந்தவனத்தில் பதியனிடலாம். நீங்கள் கேட்டுக் கொண்டால் பெயரை ரகசியமாக வைப்போம். அதற்காக எங்களுக்கு அனுப்பும்போது 'மொட்டைக் கடிதம்' போல் அனுப்பி விடாதீர்கள். உங்கள் எண்ணங்கள் 'வளவள' என நீளமாக இருக்கக்கூடாது. அதற்காக தொலைக்காட்சிகளில் வரும் எஸ்.எம்.எஸ்.-கள் போலவும் இருக்கக்கூடாது. 'பளிச்' சென பத்து வரிகளில் எழுதுங்கள்; கல்கியின் காதல் நந்தவனத்தில் வாரந்தோறும் இளைப்பாறுங்கள்! ரெடியா?



சரி வாழ்க்கை வாழ முடியாமல் தவிக்கப் போவதை எண்ணிக் குமுறினாள். என்ன கொடுமை இது... இப்படி ஓர் அசம்பாவிதம் நடக்கப் போவது தெரியாமல், குழந்தையை தானம் வேறு செய்ய முடிவு செய்ததை எண்ணி வருந்தினாள்.

மௌனமாக அங்கிருந்து விலகிய ஆனந்தி, ரொம்ப நேரம் அழுது கொண்டிருந்தாள். நந்தினியின் மிகப் பெரிய தியாகத்தின் மூலமாகத் தனக்கு வாழ்க்கையில் பிடிப்பு ஏற்பட்டதாக நினைத்ததுபோக, கடவுள் எப்படியும் தன்னைத் தண்டித்துத் தீருவது என்று முடிவு செய்ததை எண்ணி வருந்தினாள். குழந்தையே இல்லாமல் இருப்பது நல்லதா? இல்லை இதுபோன்ற ஒரு குழந்தைக்குத் தாயாக இருப்பது நல்லதா? சிறிது நேரம் பொறுமையாக யோசித்தாள். தன் குழந்தைப் பாசத்துக்கு வந்த சோதனையாக இதை நினைத்து, திடமான முடிவுக்கு வந்தாள். அந்தக் குழந்தை எப்படியும் தனக்குத்தான் என்றும் அதற்காகத் தன் வாழ்க்கையை அர்ப்பணிக்கவும் முடிவு செய்தாள் ஆனந்தி.

புதிய முடிவு தந்த தெம்புடன் ஆனந்தி நந்தினிக்கு ஆறுதல் கூறும் பொருட்டு அவளை அணுகினாள். கணவன்மார்கள் இருவரும், திகைப்பில் ஆழ்ந்திருந்தார்கள். யாரும் எதையும் சொல்வதற்கு முன்பு, நந்தினி ஆரம்பித்தாள்.

''ஆனந்தி... என்னை மன்னிச்சுடும்மா. என் முடிவை நான் மாத்திக்கிட்டேன். இந்தச் சூழ்நிலைல கொறையிருக்கற குழந்தையைக் குடுத்துட்டேன்னா, குற்ற உணர்ச்சில நான் தினமும் செத்துக்கிட்டு இருப்பேன். அந்தக் குழந்தையும் என்னை மன்னிக்காது. அதனால, அந்தக் குழந்தைதான் எனக்கு வேணும்.''



கொடைக்கானலில் முதல் படத்தின் முதல் ஷெட்யூல் ஷூட்டிங். விஜயகுமார், ஸ்ரீவித்யா மற்றும் நாசருடன் நானும் உட்கார்ந்து கொண்டிருந்தேன். விஜயகுமார் என்னிடம் சகஜமான தொனியில், "என்ன ஜீவா! நடிக்கிற அனுபவம் எப்படி இருக்கு?" என்று கேட்கவும், நான் அப்படி ஒரு சந்தர்ப்பத்துக்குத்தான் காத்துக் கொண்டிருந்ததைப்போல, "ரொம்பக் கஷ்டமா இருக்கு சார்! எனக்கு நடிப்புல அனுபவம் கொஞ்சமும் இல்லையே! அதனால எனக்கு நடிப்பு சுத்தமா வரலை! நடிக்க வந்ததே தப்போன்னுகூட சில சமயம் தோணுது! என்னைப்போல ஆளுங்க நடிக்க வந்திருக்கவே கூடாது!" என்று மிகவும் வெளிப்படையாகப் பேசி என் மன உணர்வுகளைக் கொட்டித் தீர்த்தேன்.

நான் சொன்னதைக் கேட்டு விஜயகுமாரும் ஸ்ரீவித்யாவும் அமைதியாக இருந்தாலும், நாசர் அப்படி இருக்கவில்லை. என்னை ஆழமாகப் பார்த்தார். அருகில் அழைத்தார். "எல்லாருக்கும் எல்லா விஷயங்களும் தெரிந்திருக்காது; உனக்கு நடிக்கத் தெரியவில்லை என்றால் அது ஒரு பெரிய தப்பு இல்லை. உனக்குத் தெரியவில்லை என்பதை வெளிப்படியாகச் சொல்கிற நேர்மை உன்னிடம் இருக்கிறதே! அது எனக்குப்

# நான்... நன்றி... நாசர்!

பிடித்திருக்கிறது" என்று கூறிவிட்டு "உனக்குத் தெரியுமா? நான் முறைப்படி நடிப்பைக் கற்றுக்கொண்ட ஒரு நடிகன் மட்டுமல்ல, மற்றவர்களுக்கு நடிப்புச் சொல்லித் தருவதையும் நான் செய்துகொண்டு தானிருக்கிறேன். கவலைப்படாதே! நான் உன்னை நல்ல நடிகனாக்குகிறேன்" என்று என் கைகளை அழுத்தமாகப் பற்றிக் கொண்டு சொன்னார். என்னுள் இன்ப அதிர்ச்சி!

எடுத்தவுடன் அவர் என்னிடம் கேட்டார் : "நடிப்புன்னா என்ன?" தமிழ் பரீட்சை எழுதப்போன மாணவனின் கையில் இந்திக் கேள்வித்தாளைக் கொடுத்ததுபோல் விழித்தேன் நான். அடுத்து "நீ என்ன கத்துக்கணும்னு நினைக்கறே?" என்றார். "எனக்கு நடிக்கத் தெரியாது. அதனால நடிப்பு கத்துக்கணும். நீங்களே எனக்கு நடிப்பு சொல்லித் தரேன்னு சொல்றதைக் கேட்கவே ரொம்ப சந்தோஷமா இருக்கு" என்று நான் மிகவும் எமோஷனலாக நாசரிடம் சொல்ல, அவரோ, "நான் உனக்கு நடிப்பு சொல்லித் தரேன்னு சொல்லலை! உன்னை நடிகனாக்குறேன்னுதான் சொன்னேன்" என்றார். இரண்டுக்கும் என்ன வித்தியாசம் என்று புரியாமல் நான் கொஞ்சம் குழம்பித்தான் போனேன். அவரிடமே விளக்கம் கேட்க நான் தயங்கவில்லை.

"நடிக்கக் கத்துக்கணும்னு நினைக்காதே! நடிகனாக இருப்பதற்கு உன்னைத் தயார்ப்படுத்திக் கொள்; அதுதான் முக்கியம். ஒருவருக்கு நடிப்பது எப்படி என்று சொல்லித்தர ஆரம்பித்தால் அதற்கு முடிவு இல்லை. ஆனால் நடிகனாவதற்குப் பயிற்சி கொடுத்துவிட்டால், அவன் எந்த மாதிரியான காட்சியானாலும், எப்படி நடிக்க வேண்டுமென்றாலும் நன்றாக நடித்துவிட முடியும். எனவே நான் உனக்கு நடிகனாவதற்கு அவசியமான விஷயங்களைச் சொல்லித் தருகிறேன்" என்று விளக்கினார். அவரது விளக்கத்தைக் கேட்டு நான் வியப்படைந்தேன்.

என்னை மிகவும் கவர்ந்த நடிகர், நடிகைகள் யார் என்று கேட்டார். எதற்காக அவர்களைப் பிடித்திருக்கிறது என்று கேட்டார். ரசித்துப் பார்த்த படங்களைப் பற்றிப் பேசினார். நடிப்பில் 'பாடி லாங்குவேஜ்' என்ற உடல் மொழியைப் பற்றி விளக்கினார். எனக்கு ஒரு புத்தகம் கொடுத்துப் படிக்கச் சொன்னார். புத்தகத்தின் தலைப்பு : 'பீப்புள் வாட்சிங்'. எழுதியவர் டெஸ்மன் மொரிசன். அது பாடி லாங்குவேஜைப் பற்றின உலகப் புகழ்பெற்ற புத்தகம். நான்கு பாகங்களை கொண்டது அது.

நம்முடைய உடம்பை சக மனிதர்களுடன், இந்த உலகத்துடன் தொடர்பு கொள்வதற்காக எப்படி எல்லாம் பயன்படுத்த முடியும், எப்படியெல்லாம் பயன்படுத்த வேண்டும், அவற்றுள் செய்ய வேண்டியவை என்ன, செய்யக் கூடாதவை என்னென்ன என்றெல்லாம் விவரமாகக் கூறப்படிருந்தது. அந்தப் புத்தகத்தைப் படிக்கப் படிக்க, நடிப்புக் கலை என்பது எத்தனை கடினமானது, ஆழமானது, உன்னதமானது என்று புரிந்து கொண்டேன். விரலசைவின் மூலம்கூட எப்படி ஒருவரிடமிருந்து இன்னொரு

வருக்குத் தகவல் பரிமாற்றம் நிகழ்த்த முடியும் என்று அந்தப் புத்தகத்தில் விளக்கப்பட்டிருந்தது. இதுபோல ஏராளமான சின்னச் சின்ன விஷயங்களை புதிய கோணத்தில் பார்த்து, நிறைய கற்றுக் கொள்ள ஓர் அற்புதமான வாய்ப்பை எனக்கு ஏற்படுத்திக் கொடுத்தது அந்தப் புத்தகம். ஒரு நடிகன் தன்னைச் சுற்றி இருப்பவர்கள் என்னென்ன செய்கிறார்கள் என்பதைத் துல்லியமாகக் கவனித்துக்கொண்டே இருக்க வேண்டும் என்று பொதுவாக எல்லோரும் சொல்லுவார்கள். ஆனால் நடிகன் தான் என்ன செய்கிறோம் என்பது குறித்தும் எந்நேரமும் கவனித்துக்கொண்டே இருக்க வேண்டும் என்று அந்தப் புத்தகத்தில் கூறப்பட்டிருந்தது.

**நா**சர் ஒரு நடிகனுக்கு குரல் வளம் எத்தனை முக்கியம் என்பதையும் எடுத்துச் சொன்னார். குரலில் எப்படி ஏற்ற இறக்கங்களைக் கொண்டு வருவது என்று சொல்லிக் கொடுத்தார். "ஹாய்! ஹவ் ஆர் யூ?" - இந்த ஒரு வரியை எத்தனை விதமாகப் பேச முடியும் என்று அவர் பேசிக்காட்டி விளக்கியபோது நான், 'யம்மாடி! நடிப்பு என்பது இவ்வளவு பெரிய விஷயமா?' என்று மலைத்துப் போய் நின்றேன். நடிப்பில் ஆக்ஷன் மட்டுமல்ல... ரியாக்ஷனும் ரொம்ப ரொம்ப முக்கியம். அந்த ரியாக்ஷனில் பாடி லாங்குவேஜுக்கு உள்ள முக்கியத்துவத்தை விளக்கினார்.

ஒரு நாளைக்கு இத்தனை மணி நேரம், இத்தனை நாள் எனக்குப் பயிற்சி அளித்தார் என்று சொல்ல முடியாது. அவரை நான் சந்திக்கிறபோது நாங்கள் இதைப் பற்றித்தான் பேசுவோம். என் படங்களைப் பார்த்துவிட்டு, ஜீவா நன்றாக நடித்திருப்பதாக யாராவது சொன்னால், அந்தப் பாராட்டுக்காக நான் நாசருக்குத்தான் நன்றி சொல்ல வேண்டும். நடிகர் சூர்யாவுக்குக்கூட நாசர் ஆரம்ப நாட்களில் இப்படிப் பயிற்சி கொடுத்தார் என்று பிறகு தெரிந்துகொண்டேன்.



"சூர்யாவுக்கும் நாசர்தான் பயிற்சி கொடுத்தார்!"

**ப**ள்ளிக்கூடத்தில் படித்துக் கொண்டிருந்த போது குங்ஃபூ கற்றுக்கொள்ள நந்தனம் ஒய்.எம்.சி.ஏ.வுக்கு என்னை என் பெற்றோர் அனுப்பி வைத்தார்கள். டெலிவிஷனில் புரூஸ்லீ படங்களில் நான் அதிரடியான குங்ஃபூ சண்டைக் காட்சிகளைப் பார்த்திருக்கிறேன் என்பதால் ஆர்வமாக குங்ஃபூ வகுப்புக்குச் சென்றேன். காலை ஆறு மணிக்குப் போனால் ஒரு மணி நேரம் வகுப்பு நடக்கும். முதலில் சில நாட்களுக்குச் சில உடற்பயிற்சிகள் மட்டுமே சொல்லிக் கொடுத்தார் குங்ஃபூ மாஸ்டர். உடம்பு கழன்றுவிட்டது. கையை, காலை அசைத்தால் அப்படி ஒரு வலி எடுக்கும். ஒரு நாள் மெதுவாக என் அம்மாவிடம், "ஒரே உடம்பு வலி; இனிமேல் நான் குங்ஃபூ கிளாசுக்கு போகப்போவதில்லை" என்று சொன்னேன். "அப்படிச் சொல்லாதே! எல்லாம் சரியாயிடும்." "உடம்பு வலி தாங்கலை. எனக்கு குங்ஃபூ வேணாம்; என்னை விட்டுடுங்க" என்று சொன்னபோது என் கண்களில் கண்ணீர்!

(பேசலாம்)



இந்த வருடம் துக்ளக் ஆண்டு விழாவுக்குச் சிறப்பு அழைப்பின் பேரில் உரையாற்ற வந்திருந்தார் எல்.கே.அத்வானி. எனவே, வழக்கத்தைவிட கூட்டமும், பாதுகாப்புக் கெடுபிடிகளும் அதிகம். அத்வானி பேச்சிலிருந்து சில சுவையான விஷயங்கள்:

“என்னுடைய பெரிய பலவீனமே, நான் ரொம்ப சீரியசான ஆள் என்பதுதான். என் பேச்சில் சோ மாதிரி நகைச்சுவை இருக்காது.

அண்மையில், டிரான்ஸ்பரன்ஸி இன்டர்நேஷனல் என்ற அமைப்பு வெளியிட்டுள்ள அறிக்கையில், இலஞ்ச ஊழல் மிகவும் அதிகமான நாடுகளில் ஒன்றாக இந்தியா இடம்பெற்றுள்ளதைப் பார்த்து மிகுந்த வேதனை ஏற்பட்டது. நாட்டில் தலைவர்கள் ஊழல் செய்யாமல் இருந்தால் மட்டும் போதாது. கீழ்மட்டம் வரை அந்த நிலைமை இருக்க வேண்டும். அதற்கு உதாரணமாய் விளங்குகிறது குஜராத் மாநில அரசு. அண்மையில் குஜராத் முதல்வர் நடத்திய தொழில் முதலீடு ஊக்குவிக்கும் திட்டத்தின் கீழ் 450 லட்சம் கோடி ரூபாய் மதிப்புக்கு முதலீடு செய்ய ஒப்பந்தங்கள் கையெழுத்தாகியுள்ளன. மோடியின் ஆட்சியில், குஜராத்தின் பதினெட்டாயிரம் கிராமங்களிலும் இருபத்துநான்கு மணி நேரமும் மின்சார சப்ளை இருக்கிறது. இது பெரும் சாதனை!

தே.ஜ. கூட்டணி ஆட்சியில் ஆரம்பிக்கப்பட்ட பல திட்டங்கள், இன்று பலன் தர ஆரம்பித்துள்ளன. காங்கிரஸ் கூட்டணி அரசு, அவற்றைத் தனது சாதனைகளாகச் சொல்லி, பெருமைபட்டுக் கொள்கிறது.

மத்திய அரசு இரண்டு பெரிய தவறுகளைச் செய்துள்ளது. சாமான்ய மக்களையும் பாதிக்கும்படி ஏறிக் கொண்டே போகும் விலைவாசியைக் கட்டுப்படுத்தத் தவறிவிட்டது. தீவிரவாத நடவடிக்கைகளை இரும்புக்கரம் கொண்டு ஒடுக்கத் தவறியதால், அவை பெருகி, உள்நாட்டுப் பாதுகாப்புக்குப் பெரும் அபாயத்தை ஏற்படுத்தியிருக்கிறது.

முதல் சுதந்திரப் போராட்டத்துக்கு முன்பே, வெள்ளையர்களை எதிர்த்துக் குரல் கொடுத்த வீரபாண்டிய கட்டபொம்மன் வாழ்ந்த பூமி தமிழ்நாடு. வீரபாண்டிய கட்டபொம்மன் வரலாற்றை நான் திரையில் பார்த்து வியந்து போனேன். சிவாஜி கணேசனின் அற்புத நடிப்பு என்னைப் பிரமிப்படைய வைத்தது. நான் பார்த்த ஒரே தமிழ்த் திரைப்படம் வீரபாண்டிய கட்டபொம்மன்தான்!

சிவாஜி, ராஜ்ய சபா உறுப்பினராக பாராளுமன்றத்துக்கு வந்தபோது, அவர் கட்டபொம்மனாக நடித்ததைப் பற்றி பாராட்டிச் சொன்னேன்!”

\- மௌலி



# “நான் சிவாஜி ரசிகன்!”



# மூளையி... சி...

மூளை இன்னமும்கூட வியப்பான விஷயம்தான். இருதயத்தைப் பற்றிய முழுத் தகவல்களும் கிட்டத்தட்ட தெரிந்துவிட்டன. இருதய சிகிச்சையில் பலவித முன்னேற்றங்கள். ஆனால் மூளையைப் பற்றி நாம் அறிந்ததைவிட அறியாதது இன்னமும் அதிகம்.

மூளை என்பது நரம்பு மண்டலம். மூளை இறந்துவிட்டால் - அதாவது அதில் உள்ள செல்கள் மடிந்துவிட்டால் அதை வைத்துக் கொண்டு எந்த உருப்படியான ஆராய்ச்சியும் செய்துவிட முடியாது. ஆனால், அது உயிர்ப்போடு இருக்கும்போது மிகவும் தொட்டாற்சிணுங்கியாக இருக்கிறது. இதன் காரணமாக அதை ஆராய்ச்சி செய்வது மிகமிகக் கஷ்டம்.

இந்நிலையில், மூளையைப் பற்றிய ஒரு முக்கிய விவரம் வெளியாகியிருக்கிறது. அதை நமக்கு வெளிப்படுத்தியிருப்பவர் பேராசிரியர் வி.எஸ்.ராமச்சந்திரன். கலிஃபோர்னியா பல்கலைக்கழகத்தில் பணிபுரிகிறார். மூளை மையத்தின் இயக்குநர். நரம்புத் துறையில் உலக அளவில் பல அங்கீகாரங்களைப் பெற்றவர். சமீபத்தில் அவர் சென்னைக்கு வந்திருந்தபோது, சந்தித்துப் பேசினோம். மூளையின் சில ஸ்பெஷல் சக்திகள் குறித்து விவரமாக விளக்கினார்...

"மூளையில் உள்ள விஷுவல் கார்டெக்ஸ் என்ற பகுதி பாதிப்படைந்தால் பார்வை தெரியாது. அந்தப் பகுதியின் இடப்பகுதியில் மட்டும் பாதிப்பு என்றால், வலப் பக்கத்தில் உள்ள காட்சிகள் கண்ணுக்குப் புலப்படாமல் இருட்டாக இருக்கும். (வலப் பக்கம் பாதிப்பு என்றால், இடப் பக்கம் இருட்டு). இப்படி வலப்புறம் இருட்டாக இருக்கும்போது அந்த இருட்டுப் பகுதியில் உள்ள ஒரு பொருளைத் தொடு என்று உத்தரவிட்டால் பெரும்பாலும் நம் கைகள் அந்தப் பொருளைச் சரியாகவே தொடுகின்றன. இந்த அதிசயம் நடப்பதெப்படி? தகவல் என்பது கண்களிலிருந்து கண் நரம்புக்குச் சென்று, பிறகுதானே மூளைக்குச் செல்கிறது? பின் எப்படி?


இப்படித்தான். வழக்கமான விதத்தைத் தவிர வேறொரு விதத்திலும் இந்தச் செய்தி மூளையை எட்டுகிறது. அந்தப் பகுதி பாதிக்கப்படாதவரை (பார்வை இல்லாவிட்டால்கூட) சிலவற்றைக் 'கண்டறிய' முடிகிறது. இந்த மண்டலம் தானாகச் செயல்படுகிறது'' என்கிறார் ராமச்சந்திரன்.

அதெப்படி சில நரம்புகள் நம் மூளை உத்தரவுக்கு ஏற்ற மாதிரியும் வேறு சில தானாகவும் செயல்படுகின்றன?

டாக்டர் வி.எஸ்.ராமச்சந்திரன்



# வி.எஸ்.ராமச்சந்திரன்



# கண்ணாடிகள்!

"காரில் ஒரு நண்பரோடு ஆபீஸ் போகிறீர்கள். எதையெதையோ நண்பரோடு பேசுகிறீர்கள். ஆனால் இயல்பாக, அதாவது மூளை ஒவ்வொரு கட்டத்திலும் 'இப்படிப் போ, அப்படித் திரும்பு' என்று சொல்லாமலேயே, கார் சரியாக அலுவலகத்தை அடைகிறது. இது எப்படிச் சாத்தியம்?

இப்போது வேறு மாதிரி யோசித்துப் பாருங்கள். முழு கவனத்துடன் காரை ஓட்டிக்கொண்டு, உணர்வே இல்லாமல் நண்பரிடம் பேசிக்கொண்டு வர முடியுமா? முடியாதுதானே!

குரங்குகளை வைத்துச் செய்யப்பட்ட ஆராய்ச்சியில் வேறொன்றும் தெரிய வந்திருக்கிறது. அதன் எதிரில் ஒரு கடலையைப் போட்டால் அதைப் பார்ப்பது, கையை அங்கே செலுத்துவது, கடலையை எடுத்து வாயில் போட்டுக் கொள்வது என்று ஒவ்வொரு செயலுக்கும் அதன் மூளையில் உள்ள சில மூளை செல்கள் (இவற்றை மோட்டார் நியூரான் என்போம்) செயல்படுவதைக் கண்டுபிடித்திருக்கிறோம்.

இதில் புதிய கோணம் என்னவென்றால், வேறொரு குரங்கு தனது வாயில் கடலையை எடுத்துப் போட்டுக் கொள்வதைப் பார்க்கும் குரங்கின் மூளை செல்களும் அப்போதும் அதேபோன்ற உணர்வைப் பெறுகிறது என்பதுதான். இவற்றை 'கண்ணாடி நியூரான்' (Mirror Neuron) என்கிறோம்.

இந்தக் கண்டுபிடிப்பு வேறொரு கோணத்தில் மிகவும் உதவிகரமாக விளங்கும். ஆட்டிஸம் என்ற மூளை வளர்ச்சிக் குறைபாடு சில குழந்தைகளிடம் காணப்படுகிறது. அவர்களால் மற்றவர்களோடு தகவல் தொடர்பு கொள்ள முடிவதில்லை. அதாவது எதிரில் இருப்பவரின் சிந்தனைப்போக்கு சரிவர விளங்காததால், இந்தக் குறைபாடு உள்ள குழந்தைகள் சமூகத்திலிருந்து தங்களை உள்ளிழுத்துக் கொள்ளும். 'இந்த நிலைக்குக் கண்ணாடி நியூரான் இல்லாததுதான் காரணமா?' என்கிற விதத்தில் ஆராய்ச்சி செய்வது பலனளிக்க வாய்ப்பு உண்டு."

இப்படிக் கண்ணாடி நியூரான்கள் இருந்தால் மற்றவர்கள் செய்வதையெல்லாம் நாமும் செய்துகொண்டே இருக்க வேண்டுமே! ஏன் அப்படி நடப்பதில்லை?

"காரணம் இதுதான். மொத்த மூளை செல்களில் கண்ணாடி நியூரான்களின் எண்ணிக்கை மிகக் குறைவு" என்கிறார் டாக்டர் ராமச்சந்திரன்.


**- ஜி.எஸ்.எஸ்.**




தவத்திரு **மகரிஷி மகேஷ் யோகியின்**

ஆழ்நிலை தியான நிலையம் T.M. CENTRE

**மகரிஷி வேத விக்யான் பவன்**



நகரத்தின் மக்கள் தொகையில் 1% மக்கள் ஒன்றாக அமர்ந்து தியானம் செய்யும் போது குற்றங்கள், சாலை விபத்துக்கள் போன்றவை குறைகிறது. சுற்றுப்புற ஆழ்நிலையில் அமைதி நிலவுகிறது.

படிப்புத் திறனும், ஞாபக சக்தியும் வளர்கிறது. பயம், கவலை, மனஅழுத்தம் நீங்கி ஆளுமை திறன் அதிகரிக்கிறது. B.P., ஆஸ்துமா, தலைவலி குணமாகிறது. தூக்கமின்மை, வயிற்றுக் கோளாறு நீங்கி நோய் எதிர்ப்பு சக்தி அதிகரிக்கிறது.

"மகரிஷி கார்டன்ஸ்", 28, டாக்டர் குருசாமி சாலை, சேத்துப்பட்டு, சென்னை - 31.
போன் : 26427088, 26431046, 26411862, 26403960 செல்: 98404 90871.

சனிக்கிழமைதோறும் விஞ்ஞான விளக்கத்துடன் மாலை 6 மணி அளவில் விளக்க உரை நடைபெறுகிறது.



தொடர்ந்து இரண்டு வாரங்கள் டிப்ஸ் மழையில நனைச்சிருப்பீங்க. ஒரு மாறுதலுக்கு இந்த வாரம் என் அனுபவத் தூறல்கள்ல நனையறீங்களா!


**நா**மக்கல்லேர்ந்து முப்பது கிலோ மீட்டர் தள்ளி இருக்கிற அருணகிரி பாளையம்ங்கிற ஊரைச் சேர்ந்தவள் நான். விவசாயம்தான் எங்க குடும்பத் தொழில். ஆனாலும் என் அப்பா, அம்மா படிப்புல எந்தக் கட்டுப்பாடுகளும் விதிக்கலை.

சென்னை மாணவர்களால மட்டுமில்ல, எந்த ஊர்ல இருந்தாலும் மனசுல வைராக்கியம் இருந்தா சுலபமா சாதனை படைக்கலாம்.

ப்ளஸ் டூ படிக்கும்போது நான் ரொம்பத் தெளிவா இருந்தேன். நெகடிவ்வான விஷயங்களை எக் காரணம் கொண்டும் நினைக்கக் கூடாதுன்னு முடிவெடுத்தேன். ஆரம்பத்துல ஸ்கூல்ல வைச்ச டெஸ்ட்டுல அவ்ளோ பிரமாதமான மார்க்குகள் வாங்கலை. ஆனா நான் கடந்துபோன ஒரு விஷயத்தை நினைச்சு வருத்தப்படற பொண்ணு கிடையாது. 'அடுத்தது என்ன?'ங்கிற எண்ணம்தான் எந்தப் பிரச்னையையும் சமாளிக்க உதவியது. கஷ்டப்படறோமேன்னு நான் ஒருநாளும் நினைக்கலை. என் அப்பா, அம்மாவோட கனவுதான் என்னை மேலும் மேலும் உழைக்க வைச்சுது.

# வெற்றிக்கு உதவும் மொழிப் பாடங்கள்!

# சத்யா



எங்க ஸ்கூல்ல அருமையா ஒரு விஷயம் பண்ணினாங்க. கிட்டத்தட்ட டெய்லி எங்களுக்கு ஏதாவது டெஸ்ட் வைச்சாங்க. இதனால் பாடங்களை சீக்கிரமா படிச்சோம். தேர்வுகளும் போகப் போக எங்களுக்குப் பழகியிருச்சு. தூக்கத்துல எழுப்பிக் கேட்டாலும் எந்தக் கேள்விக்கும் பதில் சொல்ற மாதிரி நாங்க தயாராக இருந்தோம்.

'கூடி வாழ்ந்தால் கோடி நன்மை'ங்கிறது தேர்வுக்குப் படிக்கும்போதுதான் புரிஞ்சுது. தனியா படிச்சா கவனம் சிதறுவதுக்கு நிறைய வாய்ப்பு இருக்கு. ஆனா க்ரூப் ஸ்டடி பண்ணினா நிறைய நல்ல விஷயங்கள் நடக்கும். நமக்குத் தெரிஞ்சதை நம் நண்பர்களுக்குச் சொல்லித் தரும்போது அந்த விஷயம் இன்னும் ஆழமா நம்ம மனசுல பதியும். நாம பண்ற தவறுகளையும் உடனுக்குடனே சரி பண்ண முடியுது.

நாள் முழுதும் கண்டிப்பா ஆங்கிலம் தான் பேசணும்னு எங்க ஸ்கூல்ல கண்டிப்பு எல்லாம் போடலை. ஆனா தேர்வுக்கு எப்படித் தயாராகணும்ங்கிறதைப் பக்காவா சொல்லிக் கொடுத்தாங்க. எல்லோரும் மொழிப் பாடங்கள்ல கவனம் செலுத்த மாட்டாங்க. ஆனால் டோட்டல் அதிகம் வேணும்னா மொழிப் பாடங்கள்தான் முக்கியம்னு அறிவுறுத்தினாங்க. அதுதான் வெற்றிக்கு உதவும். தமிழ், ஆங்கிலம் இரண்டு பாடங்கள்லேயும் எழுத்துப் பிழை, இலக்கணப் பிழை இல்லைன்னாலே நிறைய மார்க் எடுத்துடலாம். அப்புறம் தொடர்ச்சியா தேர்வுகள் வைச்சு எங்களுக்குப் பழக்கப்படுத்தியதால மூணு மணி நேரத்துக்குள்ளே எல்லாக் கேள்விகளுக்கும் விடை எழுதப் பழகிட்டேன். சில பேர் பத்து மார்க்கிலிருந்து எழுத ஆரம்பிப்பாங்க. ஆனா நான் ஆரம்பக் கேள்வியிலிருந்து- அதாவது, ஒரு மார்க்கிலிருந்துதான் எழுத ஆரம்பிப்பேன். எல்லாக் கேள்விகளுக்கும் விடை தெரிஞ்சா, எதை எழுதறதுன்னு குழம்ப வேண்டாம். சிம்பிள், தியரியை பெரும்பாலும் தவிர்த்திடுங்க. ப்ராப்ளம் மாதிரி கேள்விகளுக்குத்தான் முழு மதிப்பெண்கள் கிடைக்கும்.

தேர்வு சமயத்துல எதையும் புதுசா படிக்க வேண்டாம். தேர்வுக்குச் சில மணி நேரங்கள் முன்பு நான் மெடிட்டேஷன் செய்துக்கிட்டேன். தேர்வு சமயத்தில்தான் நான் நல்லா தூங்கினேன். நல்லா ஃப்ரெஷ்ஷா எக்ஸாம் ஹாலுக்குள் நுழைஞ்சாத்தான் எந்த அயர்ச்சியும் இல்லாம அசத்தலான பதில்களை எழுத முடியும்.

'அடடா, நாம சிட்டியில இல்லையே... நாம் என்ன பெருசா சாதிச்சிட முடியும்'னு நான் நினைக்கவேயில்லை. அந்த ஒரு வருஷம் என்னை முழுமூச்சா தேர்வுகளுக்காகவே அர்ப்பணிச்சேன். ஸ்டேட் ஃபர்ஸ்ட் வந்தேன். அன்னைக்கு என் குடும்பம் சந்தோஷப்பட்ட மாதிரி என்னைக்கும் நான் பார்த்ததில்லை. மெடிக்கல் சீட் கிடைச்சாலும் என் கனவான அண்ணா யுனிவர்சிட்டியில படிக்கிறதைத்தான் விரும்பினேன்.

என்ன, ஸ்டூடண்ட்ஸ்... என்னை மாதிரியே உங்களாலும் உங்க பெற்றோர் கனவை நிஜமாக்க முடியாதா, என்ன?"

- **ச.ந.கண்ணன்**

படம்: **புதூர் சரவணன்**

2005ஆம் வருடப் பொதுத் தேர்வில் 1084 மதிப்பெண்கள் எடுத்து மாநிலத்திலேயே முதலாவது மாணவியாக வந்தவர் சத்யா. தற்போது அண்ணா பல்கலைக்கழகத்தில் இரண்டாம் வருடம் எலெக்ட்ரானிக்ஸ் அண்ட் கம்யூனிகேஷன் படிப்பவரின் கனவு - இந்தியாவின் முன்னணி கல்வி நிறுவனமான ஐ.ஐ.எம்-மில் எம்.பி.ஏ. படித்து முடித்து ஒரு சிறந்த தொழிலதிபராக உயர்வது.

# இதோ இன்னொரு

வடக்கே ஒரு நந்திதாதாஸ். தெற்கே ஒரு ஷ்ரேயா என்கிற அளவுக்கு இரண்டே படங்களில் நிறைய நம்பிக்கை ஊட்டியிருக்கிறார் ஷ்ரேயா. எஸ்.எஸ். மியூசிக் சேனலின் முன்னாள் பிரபல காம்பியரான இவர், இப்போது தங்கர்பச்சானின் 'பள்ளிக்கூட'த்துக்குச் சென்று கொண்டிருக்கிறார். நடிப்பு மாதிரியே, பதில்களும் இயல்பு என்று இங்கே நிரூபிக்கிறார் பாருங்களேன்...

**''சாமுராய்' படத்துல தப்பாட்டம் போட்டது இப்போது உறுத்தலையா?**

"அப்போ எனக்குப் பதினாறு வயசு. எஸ்.எஸ்.மியூசிக் காம்பியர்ங்கிற புகழ் வேற கைவசம் இருந்துச்சு. எதைப் பத்தியும் கவலைப்படாமதான் 'சாமுராய்'ல டான்ஸ் ஆடினேன். ஆனா படம் ரிலீஸாகிப் பாட்டைப் பார்த்த பிறகு தூக்கிவாரிப் போட்டுச்சு. இனிமேல் அப்படியொரு தப்பை ஒருநாளும் செய்யக்கூடாதுன்னு அன்னைக்கு முடிவெடுத்தேன். நான் இங்கே நூறு படமெல்லாம் பண்ண வரலை. பத்துப் பன்னிரண்டு படங்கள்தான். எனக்காக வேறு உலகம் காத்திட்டு இருக்கு."

**ஆனா மறுபடியும் 'திமிரு'ல கிளாமரா ஒரு பாட்டுக்கு ஆடியிருக்கீங்களே?**

"அந்த ஒரு பாட்டுக்காகவே அந்தப் படத்தை ரொம்ப நாளா ஒப்புக்கலை. ஆனால் அந்தப் பாட்டு கலாபூர்வமா எடுக்கப் படும்னு எனக்கு விஷாலும் டைரக்டரும் உத்தரவாதம் கொடுத்தாங்க. சொன்ன அளவுக்குப் பாட்டு வரலைன்னாலும் அசிங்கமா எல்லாம் இல்லை. அதுவரைக்கும் சந்தோஷம். ஆனாலும் 'திமிரு' தான் என்னோட பெரிய திருப்புமுனை. அப்படியொரு படம் மறுபடியும் கிடைக்காது. என் தோழிகள் எல்லாம் பார்த்து ஷாக்காகி, 'ஷ்ரேயா என்ன நீ பண்ணியிருக்கே, தெரியுமா?'ன்னு கேள்வி கேட்டதுதான் என் வெற்றி. அர்த்தமில்லாம கிளாமர் உடைகளை அணிந்து ஆடவும் ஹீரோவோட வெறும் டூயட் பாடவும் நான் சினிமாவுக்குள்ள நுழையலை. அப்புறம் எனக்கு டான்ஸ் சுட்டுப் போட்டாலும் வராது. கமர்ஷியல் ஹீரோயினா நடிக்காததுக்கு இதுவும் ஒரு காரணம்!"

**'வெயில்'ல வந்த சொற்பக் காட்சிகள் போதுமா?**

"அர்த்தமுள்ள காட்சிகள்ல நடிக்கிறது மட்டும்தான் என் ஆசை. நான் நடிக்கிற படத்துல பத்துக் கதாநாயகிகள் நடிச்சாலும் எனக்குக் கவலையில்லை. இதனால் பணம், புகழ் எல்லாவற்றையும் நான் இழக்கலாம். ஆனா கமர்ஷியல் ஹீரோயின்களால எத்தனை நாள் இங்கே நீடிக்க முடியும்? இந்த வயசிலும் ஷபனா ஆஸ்மி நிக்கலையா? இறந்த பிறகும் ஸ்மிதா பாட்டில் வாழலையா? பணம், புகழைவிட எனக்கு மரியாதை அவசியம்!"

• 'வெயில்' படத்தில்...



**'பள்ளிக்கூடம்'ல என்ன மாதிரி எதிர்பார்க்கலாம்?**

"தங்கர்பச்சான் கதை சொல்லி எட்டு மாதங்கள் கழிச்சுத்தான் பள்ளிக்கூடத்தை ஒப்புக்கிட்டேன். முதல்ல திமிரு, வெயில் படங்கள்ல என் நடிப்புக்கு எப்படி

# ஷ்ரேயா



வரவேற்பு கிடைக்குதுன்னு எதிர் பார்த்துக்கிட்டிருந்தேன். இப்போ தைரியமா பள்ளிக்கூடம் பண்ணத் தயாராயிட்டேன். அதுவும் ஸ்னேகாவோடு இணைஞ்சு நடிக்கிறது சேலஞ்சிங்காத்தான் இருக்கும்.''



# ந்திதா!

**உங்க அளவுக்கு மத்த எஸ்.எஸ்.மியூசிக் காம்பியர்களால பேர் வாங்க முடியலையே?**

''காம்பியர்னா தனித்துவம் வேண்டும். உங்களுக்கென்று ஓர் இமேஜை, ஒளி வட்டத்தை உருவாக்கணும். உடைகள்ல கவனம் செலுத்தணும். இதெல்லாம் செய்யாம சும்மா கேமரா முன்னாடி நின்னு பேசினா மட்டும் பேரும் புகழும் வந்திடாது. தமிழ் காம்பியர்கள்கிட்டேயும் இந்தக் குறை இருக்கு. தங்களை முன்னிறுத்திக்க அவங்க ரொம்பவே பயப்படறாங்க.''

**சினிமாவுக்கு வெளியே என்ன பண்ணப் போறீங்க?**

''நிறைய. சமையல் மற்றும் நான் சுற்றிப் பார்த்த வெளிநாடுகளைப் பத்தி ஒரு புக் எழுதப் போறேன். பி.பி.சி.யில் நியூஸ் ரீடர் ஆகணும்னு பன்னிரண்டு வயசிலிருந்து கனவு. மிக முக்கியமா மந்திராபேடி மாதிரி கிரிக்கெட் கமாண்டேட்டர் ஆகணும். ஆனா அவங்க மாதிரி வெறும் கிளாமர் பொம்மையா மட்டுமில்லாம ரவி சாஸ்திரி, கபில்தேவ் மாதிரி கிரிக்கெட்டை அலசி ஆராயணும். ஏன், ஓப்ராவின்ஃப்ரே மாதிரி தமிழ் சேனல்ல ஒரு நிகழ்ச்சி பண்ணத்தான் போறேன். ஆனா இப்போதைக்கு என் வயசுக்கான காரியங்கள் மட்டும்தான். முப்பது வயசு ஆன பிறகு ஒவ்வொரு ஆசையா பூர்த்தி செய்வேன்.''

**''நீங்க பெண்ணியவாதியா?**

''ஆண் ஆண்தான்; பெண் பெண்தான். ஆணோடு சரிக்குச் சமமா போட்டியிடறது கூட தவறுன்னுதான் சொல்வேன். இந்த விஷயத்துல எனக்கு ஜெயலலிதா மேடம் மேல எக்கச்சக்க ஆச்சர்யம் உண்டு.''

**- ச.ந.கண்ணன்**

அட்டைப் படம்:

**ஸ்ரீஹரி**



* ரவி ஐயர்

# வந்தாச்சு மக்கும்

ஒரு பக்கம் பிளாஸ்டிக் இல்லாத உலகத்தைக் கற்பனை செய்துகூட பார்க்க முடியாத நிலை. இன்னொரு பக்கம் பிளாஸ்டிக்கைத் தடை செய்ய வேண்டும் என்றும் கூக்குரல். பிளாஸ்டிக் பொருட்கள் மண்ணில் மக்காமல் சுற்றுச் சூழலைப் பாதிப்பதோடு, மனிதனுக்கும் பலவிதமான நோய்களைப் பரப்புவது தான் காரணம். நிலைமை பிளாஸ்டிக் பைகளுக்குத் தடை விதிக்கும் அளவுக்குப் போய்விட்டது.

தமிழ்நாட்டைச் சேர்ந்த ஒருவர் தற்போது மண்ணில் மக்கும் பிளாஸ்டிக்கைக் கண்டுபிடித்து இப்பிரச்னைக்கு முற்றுப் புள்ளி வைத்துள்ளார். திருவாரூர் அருகே உள்ள மகிழஞ்சேரி கிராமத்தைச் சேர்ந்த ரவி ஐயர்தான் அந்தக் கண்டுபிடிப்பாளர். தற்போது நாக்பூரில் இருக்கும் அவரிடம் இந்த மக்கும் பிளாஸ்டிக்கைப் பற்றிக் கேட்டபோது...

**நா**ன் பல வருடங்களாக ரவி பயோடெக் பிரைவேட் லிமிடெட் என்கிற பெயரில் பிளாஸ்டிக் பைகளைத் தயாரித்து விற்பனை செய்து வந்தேன். திடீரென்று பிளாஸ்டிக் பைகள் சுற்றுப்புறச் சூழலைப் பாதித்ததன் காரணமாக பிளாஸ்டிக் பைகளுக்குத் தடை விதித்தது மாசுக் கட்டுப்பாடு வாரியம்.

இதனால் எனக்குப் பல லட்சங்கள் நஷ்டம் ஏற்பட்டது. தொழிலையும் தொடர முடியாத நிலை. இந்த இழப்பை ஈடு செய்ய வேண்டுமென்றால், எனக்கு நன்கு தெரிந்த தொழிலான பிளாஸ்டிக்கில் தான் எதையாவது செய்ய வேண்டும் என்று முடிவெடுத்தேன். 'ஏன் நாமே மண்ணில் மக்கும் பிளாஸ்டிக்கை உருவாக்கக் கூடாது' என்று யோசித்தேன். ஆனால் என்னைப் போல் பலரும் இப்படிக் கண்டுபிடிக்க முயற்சி செய்துகொண்டு இருந்தார்கள்.

ஸ்டார்ச், ஜவ்வரிசி போன்ற உணவுப் பொருட்களைக் கொண்டு பிளாஸ்டிக் பையை உருவாக்கிப் பார்த்தார்கள். மண்ணிலுள்ள புழுக்கள் பிளாஸ்டிக் பையில் கலந்திருக்கும் ஸ்டார்ச்சை சாப்பிட்டு, பிளாஸ்டிக்கை விட்டு விட்டன. இதனால் முழுமையாக மக்கும் பிளாஸ்டிக்கை உருவாக்குவது தாமதமாகிக் கொண்டே வந்தது.

**கி**ட்டத்தட்ட பதின்மூன்று வருடங்கள் முயற்சி செய்து மக்கும் பிளாஸ்டிக்கைக் கண்டுபிடித்தேன். இந்த மக்கும் பிளாஸ்டிக்கைப் பதின்மூன்று வகையான பொருட்களைக் கலந்து தயாரித்துள்ளேன்.

# பிளாஸ்டிக்!




* மக்கும் பிளாஸ்டிக் வெளியீட்டு விழா...



அதில் பெரும்பான்மை அன்றாடம் நாம் சாப்பிடும் உணவுப் பொருட்களே. எனவே இந்த பிளாஸ்டிக் பைகளைப் பயன் படுத்திவிட்டுக் கீழே தூக்கிப் போட்டுவிட்டால் சில நாட்களிலேயே எளிதில் மக்கி விடும்.

இந்த மக்கும் பிளாஸ்டிக் பைக்கும், சாதாரண பிளாஸ்டிக் பைக்கும் பெரிய விலை வித்தியாசமில்லை. ஒரு கிலோவுக்குப் பத்து ரூபாய்தான் விலை கூடுதல். ஆனால் இதைக் கண்டுபிடிப்பதற்குள் நிறைய பணத்தை இழந்துவிட்டேன். என்றாலும்கூட மனம் தளரவில்லை. 2004-ல் 87 டன் மக்கும் பிளாஸ்டிக் பைகளைத் தயாரித்தேன். இந்தியாவில் இதை ஆய்வு செய்து மக்கும் பிளாஸ்டிக் என்று 'தரச் சான்றிதழ்' கொடுக்க மூன்று இடங்கள் தான் உள்ளன. ஆனால் அவற்றில் ஆய்வு செய்வதற்கான எந்திரங்கள் இல்லை. எனவே 'அமெரிக்கன் ஸ்டேட் டெஸ்டிங் மெதட்' மூலம் சோதனை செய்து 'எண்பது நாட்களுக்குள் மண்ணில் மக்கி விடும் பிளாஸ்டிக்' என்று அதிகாரபூர்வமான சான்றிதழைப் பெற்றேன்.

அதன்பின் பெங்களூரிலுள்ள 'ஸ்ரீராம் இன்ஸ்டிடியூட்' ஆய்வு செய்து, நான் தயாரித்த பிளாஸ்டிக் பைகளினால் சுற்றுச் சூழலுக்கு எந்தவிதப் பாதிப்பும் இல்லை என்று சான்றிதழ் வழங்கியது. சென்னை மயிலாப்பூரில் உள்ள 'கிரீன் இண்டியா பயோடெக்' நிறுவனத்துக்கு இந்த மக்கும் பிளாஸ்டிக்பை வினியோக உரிமையைக் கொடுத்துள்ளேன். பல மாவட்டங்களுக்கு இந்த நிறுவனமே விநியோகம் செய்கிறது'' என்றார் ரவி ஐயர்.



* மணிகண்டன்

''சுற்றுச் சூழலின் நண்பனான இந்த மக்கும் பிளாஸ்டிக் பைகளை அரசு அங்கீகரித்துவிட்டது. நாடு முழுவதும் இந்தப் பைகள் விநியோகம் செய்யப்படுகின்றன. இதுவரை நாக்பூரிலிருந்து தயாரித்து அனுப்பப்பட்ட பிளாஸ்டிக் பைகள், இனி சென்னை ஆவடி தொழிற்சாலையில் தயாரிக்கப்படவிருக்கின்றன.

இதில் சுனாமியால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு வீடு கட்டிக் கொடுப்பதோடு, அவர்களுக்கு வேலை வாய்ப்பையும் வழங்கத் திட்டமிட்டுள்ளேன். எங்களுடைய அடுத்த இலக்கு மக்கும் 'யூஸ் அண்ட் த்ரோ கப்' தயாரிப்பதுதான்'' என்கிறார் க்ரீன் இண்டியா பயோடெக் நிறுவன உரிமையாளர் மணிகண்டன்.

- அனுசுயா

படங்கள் : பொள்ளாச்சி சுந்தரம்



# மிளகாய் பஜ்ஜியும் சில புத்தகங்களும்...

சென்னை புத்தகக் கண்காட்சிக்கு இந்தமுறை இடப்பெயர்ச்சி ஏற்பட்டுள்ளது. வழக்கமாக நடைபெறும் காயிதே மில்லத்துக்குக் 'கா' விட்டுவிட்டு பச்சையப்பன் கல்லூரிக்கு எதிரில் உள்ள செயிண்ட் ஜார்ஜ் பள்ளியில் நடத்தியிருக்கிறார்கள்.

நிறைய மாறுதல்கள். அரங்கம் முழுவதும் துணிக் கூரை வேய்ந்திருந்தார்கள். நடைபாதை கடைகளைக் காணவே காணோம். ஆரோக்கியமான முதல் மாற்றம், குழந்தைகளுக்கான பிரத்தேயக ஸ்டால்கள்.

நியூ செஞ்சுரி புக் ஹவுஸில் ரஷ்யப் புத்தகங்கள் அநியாய மலிவு விலைக்குக் கிடைத்தன. நான்கு ரூபாய்க்குப் புத்தம் புதிய லெனின். கூட ஒரு ரூபாய் சேர்த்துக் கொடுத்தால் பளபளக்கும் கார்ல் மார்க்ஸ். உபரியாக கார்க்கி. கேண்டினில் மிளகாய், பஜ்ஜி, போண்டா சாப்பிட்டதில் மிச்சம் இருக்கும் சில்லறைகளை ஒன்று திரட்டிக் கொடுத்தால், கெட்டி அட்டையில் நானூறு பக்கங்களுக்கு வரும் ரஷ்ய நாட்டுப்புறக் கதை தொகுப்பைக் கொடுக்கிறார்கள். ஐம்பது ரூபாய் இருந்தால்போதும், பை நிறைய புத்தகங்களை அள்ளிக்கொண்டு வரலாம்.



அகராதிகளையும் திருக்குறளையும் அதிகம் பேர் வாங்கினார்கள். அடுத்து, அறிஞர்களின் பொன்மொழிகளை. நாற்பது வகை குப் வைக்கவும் இருபது வகை இட்லி செய்யவும் கற்றுக் கொடுத்த புத்தகங்களுக்கு நல்ல வரவேற்பு, வழக்கம் போல.

'எப்படி எப்படி' புத்தகங்களைப் பலர் ஆர்வத்துடன் வாங்கினார்கள். வீட்டிலிருந்தபடியே காளான் வளர்ப்பது எப்படி? ஹாலில் இருந்தபடி ஹெலிகாப்டர் ஓட்டுவது எப்படி? குட்டிச்சாத்தானை வசப்படுத்துவது எப்படி? இத்யாதி. சுய முன்னேற்ற புத்தகங்களும் அதிகம் விற்பனை ஆயின.

ஒழுங்கவிழ்ப்பு, நுண் அரசியல் என்றெல்லாம் பயமுறுத்தாமல், எளிய முறையில் எழுதப்பட்ட அரசியல், வரலாற்று நூல்களை அதிகம் பேர் விரும்பி வாங்கினார்கள்.

குறிப்பாக, தினசரி செய்தித்தாள்களில் மேம்போக்காக அடிபடும் சங்கதிகளை ஆழமாகத் தெரிந்துகொள்ள பலருக்கு ஆர்வம் இருந்தது. இராக், இஸ்ரேல் - பாலஸ்தீன், அமெரிக்க அராஜகங்கள், லெபனானம், ஹிஸ்புலா, காஷ்மீர், சீனா-திபெத், இன்னபிற. நீதி: கனமான சங்கதிகளா? எளிய மொழியில் மட்டுமே தா.

- கங்கா

படம்: பொள்ளாச்சி சுந்தரம்

# திருத்தியமைக்கப்பட்ட தேசிய காசநோய் தடுப்புத் திட்டம், தமிழ்நாடு






நேரடி குறுகிய கால சிகிச்சை (DOTS) முறை : காச நோயைக் குணப்படுத்த சிறந்த வழி (காச நோயைக் கட்டுப்படுத்தும் தேசியத் திட்டம்).

- காசநோய் காற்றின் மூலம் பரவக்கூடியது.
- TB பரம்பரை வியாதியல்ல. முற்றிலும் குணப்படுத்தக் கூடியது. கீழ்க்கண்ட அறிகுறிகள் 3 வாரங்களுக்கு மேல் இருந்தால் இலவச பரிசோதனை மற்றும் சிகிச்சைக்கு உடனே அரசாங்க மருத்துவமனையை அணுகவும்.
- இருமல்/மாலை நேரக் காய்ச்சல்/நெஞ்சுவலி/பசியின்மை/உடல் எடைக்குறைவு
- DOTS (குறுகிய கால தொடர் சிகிச்சை) முறையில், காசநோய்க்கு 6-8 மாதம் வரை சிகிச்சை எடுத்துக் கொண்டால் TB யிலிருந்து முற்றிலும் குணமடையலாம்.
- காசநோய் வராமல் தடுக்க பிறந்த அனைத்து குழந்தைகளுக்கும் BCG போடுவீர்.
- கண்ட இடத்தில் எச்சில் துப்பாதீர்! காசநோயைப் பரப்பாதீர்.

**காசநோயை வெல்வோம்! இன்றும், என்றும்!**

பொது நலன் கருதி வெளியிடுவோர்:

மாநில காசநோய் தடுப்புச் சங்கம், சென்னை-600 006.

Visit us at: www.tn.gov.in / www.southindia.com

[illegible]/1557/[illegible]/2006

Registered with the Registrar of Newspaper of India under No. 1041/57 * Registered No. TN / CC (S) DN / 144 / 06 - 08 * Licensed to post without prepayment under PMG's Licence No. WPP TN / CC (S) DN / 70 / 06 - 08* Registered as a Newspaper in Srilanka.




நம் ஊருக்கு வரும் சுற்றுலா பயணிகள், தங்களுக்குப் பிடித்த இடங்களை சுற்றிப்பார்க்கும் சமயங்களில் பல்வேறு அனுபவங்களையும் பலதரப்பட்ட மனிதர்களையும் சந்திக்க நேரிடும். அவர்கள் தங்கள் சொந்த பூமியை விட்டு அயல் மண்ணுக்கு வந்திருக்கும் சமயத்தில் அவர்களை நம்மவர்களாக மதித்து நமது தமிழ்ப் பண்பாட்டிற்கேற்ப அன்போடு பழகி இன்முகத்தோடு விருந்தோம்பல் செய்வது இன்னும் பல லட்சம் சுற்றுலாப் பயணிகளை மனமகிழ்ச்சியோடு நம் ஊருக்கு வரவழைக்கும்.

தமிழகத்தில் வந்து தங்கும் நாட்களில் நல்ல அனுபவங்களை சந்திப்பதும், தங்களது சொந்த ஊர்களுக்கு திரும்பிய பிறகும் இந்த சுகமான நினைவுகளை திரும்பத்திரும்ப அசைபோடுவதும்தான் அவர்களை மீண்டும் மீண்டும் தமிழகத்திற்கு வரச்செய்யும். வெளிமாநிலங்களிலிருந்தும், வெளிநாடுகளிலிருந்தும் தமிழகத்திற்கு சுற்றுலா பயணிகளாக வரும் நம் விருந்தினர்கள் பொன்முட்டையிடும் வாத்துகள். அவர்களைப் போற்றிப்பாதுகாக்க வேண்டியது நம் கடமை.




**தமிழ்நாடு சுற்றுலாத்துறை, தமிழக அரசு**

தமிழ் நாடு சுற்றுலா வளாகம், வாலாஜா ரோடு, சென்னை-600 002.

போன்:25380583, 25388785, 25361640 ஃபேக்ஸ்: 25361385,25366633